# பரலோக மன்னா

## ஜனவரி 1

**"நானே ஜீவ அப்பம்." – யோவான் 6:48.**

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் பிழைப்பதில்லை" என்று இயேசு கூறினார். மேலும் அவர், "நானே ஜீவ அப்பம்" என்றும் கூறினார் – இது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகக் காணலாம், ஆனால், முதலில் குறிப்பிடப்பட்ட அப்பம், நம்முடைய சரீரங்களைப் போஷிப்பதற்கு கைகளால் செய்யப்பட்டு, சூட்டடுப்பில் சுடப்பட்டதாகும். இரண்டாம் ஜீவ அப்பமானது, நம்முடைய இரட்சகரை சித்தரிக்கின்றது. மேலும், கிறிஸ்தவர்கள் அவருடைய வார்த்தையினாலே போஷிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறார்கள். இந்த அப்பத்தை உண்டு நிறைவடைந்திருக்கிற ஒவ்வொருவரும் நித்திய காலமாய் வாழ்வார்கள்.

யோவான் 6:33.

## ஜனவரி 2

**"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." – ஆதியாகமம் 2:7.**

முதல் மனிதனாகிய ஆதாமை தேவன் எவ்வாறு உண்டு பண்ணினார் என்பதை இந்த அருமையான வசனம் துல்லியமாக நமக்குக் கூறுகிறது. பூமியின் மண்ணைக் கொண்டு அவர் அவனுடைய மாம்சத்தையும் எலும்புகளையும் உண்டு பண்ணினார். அந்த சரீரம் ஜீவனோடு இல்லாததால், அது அசையக்கூடாதிருந்தது. பின்பு தேவன், ஆதாமின் நாசிகளுக்குள் காற்றை அனுமதித்தார். அவன் உயிரடைந்தான். ஆதாமுக்கு ஒரு ஆத்துமா கொடுக்கப்படவில்லை அவனே ஜீவாத்துமாவானான்.

எசேக்கியேல் 18:4.

## ஜனவரி 3

**"அவர் உத்திரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்நேரத்திலே தொங்க வைக்கிறார்." –**
**யோபு 26:7(KJV).**

"வெற்றிடத்தில் வடபுறத்தை அவர் விரித்தார். காற்றிடையே உலகைத் தொங்க விட்டார்." (திருவிவிலியம்)
வேதாகமம் உண்மை என நிரூபிக்கின்றது. இதோ, இங்கே அதற்கான ஒரு நல்ல உதாரணம் உள்ளது. பூமி அந்தரத்தில் தொங்குவதாகவும், இந்த பூமி சூரியனை வான்வெளி கோள் பாதையில் சுற்றி வருவதாகவும், நீண்ட நாட்களுக்கு முன்பதாகவே யோபு நமக்கு கூறியுள்ளார். வேதாகமம் அறிவியல் சம்பந்தமான காரியங்களைக் கூறுகின்றது, ஆனால், அவைகளை விவரிப்பதில்லை. இந்த கோணத்தில், கவிதை நடையில் விவரிக்கப்பட்ட இந்த வர்ணனை, சொல்லமுடியாத அளவுக்கு அழகுள்ளதாய் இருக்கின்றது.

சங்கீதம் 104:5

## ஜனவரி 4

**"காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகிறது என்று கவனித்துப் பாருங்கள்." – மத்தேயு 6:28**

ஒரு பூவை உங்கள் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். அதின் அழகான வடிவத்தையும், நறுமணத்தையும், நிறத்தையும் கவனித்துப் பாருங்கள். தேவன், பல்வேறுவிதமான நறுமணமும், நிறங்களும் கொண்ட நூற்றுக்கணக்கான அழகுள்ள மலர்களை நமக்கு கொடுத்திருக்கிறார். அவருடைய அன்புக்கு ஈடாக திருப்பி செலுத்த நம்முடைய இருதயம் மற்றும் அவர் மீதான பயபக்தியைத் தவிர நம்மிடம் ஒன்றும் கிடையாது. ஆனாலும், அவர் அவைகளை அன்போடு அங்கீகரிக்கின்றார்.

லூக்கா 12:7

## ஜனவரி 5

**"மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும், ..இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்: ..எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது: எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. மண்ணுக்குத் திரும்புகிறது." – பிரசங்கி 3:19, 20.**

இக்காலத்து வாழ்க்கையைப் பொறுத்தவரையில், மிருகங்களின் மேல் மனிதனுக்கு எந்தவித ஆதாயமும் கொடுக்கப்படவில்லை. "எல்லாம் மாயையாக உள்ளது (அதிருப்தி – strongs ) " எல்லாம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது. ஆனால், மிருகங்களைப் பார்க்கிலும், மனிதன் அதிக அனுகூலத்தைப் பெற்றிருக்கிறான். ஏனெனில், இயேசு மனுக்குலம் அனைவருக்கும் மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். ஆகையால் மரித்தோரிலிருந்து ஓர் எழுப்புதல் உண்டென்று நாம் வாக்களிக்கப்பட்டிருக்கிறோம்.

பிரசங்கி 9:10

## ஜனவரி 6

**“நீ வெட்கப்படாத ஊழியக்காராயும்.. உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு” – 2 தீமோத்தேயு 2:15.**

தேவனுக்கு ஊழியம் செய்யும் பொருட்டு நாம் அறிந்துகொள்ள வேண்டிய அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ள நாம் வேதத்தை ஆராய்கின்றோம். தேவனுடைய சித்தம் இன்னதென்பதை கவனித்து, நம்மால் இயன்ற அளவு ஆற்றலை, பிரயோகித்து அவருடைய சித்ததை சிறப்பாக செய்வது ஒரு சிலாக்கியமாகும். ஊழியக்காரன் என்ற வார்த்தையானது, தேவனுடைய பணியில் ஈடுபட்டிருப்பவன் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. ஏற்றகாலத்தில் ஏற்படுத்தவிருக்கிற, அகில உலக மனுக்குலத்திற்கான தேவனுடைய அன்பின் திட்டத்தை மற்றவருக்கு நாம் எடுத்துச் சொல்வதும், இந்த ஊழியத்தின் ஒரு வழிமுறையாகும்.

2 தீமோத்தேயு 3:16,17

## ஜனவரி 7

**"..சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." – 2 தீமோத்தேயு 2:15.**

வேதாகமத்தில் கடந்த காலத்தில் நிகழ்ந்த அநேக உண்மையுள்ள நீண்டகால வரலாறுகளும், இப்பொழுது சம்பவிக்கின்ற உண்மையுள்ளவைகளான விஷயங்களும், இனிவரும் நாட்களில் சம்பவிக்க இருக்கிற தீர்க்கதரிசன விஷயங்களும் இடம் பெற்றுள்ளது. வேதவாக்கியங்களில் நமக்கு தேவனால் அருளப்பட்டுள்ள செய்திகளை புரிந்துகொள்வதற்கு ஏதுவாக, அவைகள் குறிப்பிடும் காலப்பகுதிகளை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது.

பிரசங்கி 3:1

## ஜனவரி 8

**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிராகாசிப்பிக்கிற .. மெய்யான ஒளி" யோவான் 1:9.**

"நானே மெய்யான ஒளி" என்று இயேசு தாமே கூறினார் – இன்னுமாக அவர் சீஷர்களிடம், "நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். அதாவது, நம்முடைய இரட்சகரின் போதனைகள் மற்றும் முன்மாதிரியின் மூலமாக, தேவனிடத்திலிருந்து பிரகாசிக்கக்கூடிய ஒரே மெய்யான ஒளியாகும். இப்பொழுது, சிலர் மாத்திரமே தேவனுடைய திட்டங்களைக் குறித்ததான அறிவினால் பிரகாசிக்கப்பட்டு இருந்தாலும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில், சத்தியத்தின் ஒளி, ஒவ்வொருவர் மீதும் பிரகாசிக்கும் அல்லது ஒவ்வொருவரையும் சென்றடையும்.

2 கொரிந்தியர் 4:6

## ஜனவரி 9

**"கர்த்தருக்கு பயப்படுதலே (பயபக்தியாயிருப்பதே) ஞானத்தின் ஆரம்பம்." – சங்கீதம் 111:10.**

பயப்படுதல் என்ற வார்த்தைக்கு பயப்பக்தியாயிருத்தல் என்ற அர்த்தத்தை ஸ்ராங்ஸ் (Strong s) அகராதி கொடுக்கிறது. அதற்கு, "ஆழ்ந்த மதிப்பின் காரணமாக" என்று பொருள்படும். நாம் நம்முடைய பரம பிதாவிடம் பயபக்தியும், மதிப்பும் வைக்கும்போது அவர் நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்ய ஆரம்பித்து, தம்மையும், சகல மனுக்குலமும் பூரணமடைவதற்கான தமது நோக்கங்களையும் வெளிப்படுத்துவார். தேவனுடைய குணநலன், திட்டம் மற்றும் போதனைகளைப் புரிந்துகொள்ளுதலாகிய இந்த மெய்யான ஞானத்தையே நாம் தேடவேண்டும்.

யோபு 28:28

## ஜனவரி 10

**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்று. . . விசுவாசிக்க வேண்டும்." எபிரெயர் 11:6.**

தேவன், தம்முடைய அதிசைக்கத்தக்க சிருஷ்டிப்பை நாம் சுற்றிலும் கவனித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறார். அவைகள் அனைத்தும், அதாவது பூமியும், அண்டசராசரமும், இயற்கை என்று நாம் அழைக்கக்கூடிய அனைத்து காரியங்களும், யேகோவா என்னும் நாமமுள்ள நம்முடைய பரலோகப்பிதாவினால் உண்டாக்கப்பட்டது.

மாற்கு 11:22

## ஜனவரி 11

**"தேவன், "தம்மைத் விழிப்போடு தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர்." எபிரெயர் 11:6.**

விழிப்புடன் என்றால், "கவனமாக" என்று பொருள். யாரேனும் ஒருவர் தேவனையும், அவருடைய சத்தியத்தையும் உண்மையாக நாடி தேடினால், அவன் (அல்லது) அவள், அவரைக் கண்டடையும்படி செய்வார். தேவனுடைய குணநலம் மற்றும் திட்டங்கள் குறித்ததான தப்பறைகளில் (அல்லது) தவறான உபதேசங்களில் திருப்தியடையும் ஜனங்கள் அந்த தவறான உபதேசங்களிலேயே விடப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் சத்தியத்தைக் கண்டடைய மாட்டார்கள்.

புலம்பல் 3:25.

## ஜனவரி 12

**“கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்". ஏசாயா 34:16.**

வேதத்தை தலைப்புகளின் கீழ் ஆராய்வதன் மூலம் தேவனுடைய திட்டத்தை நாம் கற்கின்றோம். இந்த வழியில் மட்டுமே தேவனுடைய வார்த்தை இசைவாகவும், பொருத்தமானதாகவும் இருக்க முடியும். வேதத்தை ஆராய்வதற்கு தேவன் நமக்கு அநேக வழிகள் கொடுத்திருக்கிறார். அவர் நம்மை அங்கீகரித்து, நாம் என்ன செய்ய வேண்டும் என அவர் விரும்புகிறார் என்று நாம் அறியும்படி செய்வார். ஆகவே நமக்குள் இருக்கும் நம்பிக்கைக் குறித்ததான காரணத்தை நம்மிடம் கேட்கும்போது நம்மால் கொடுக்கக்கூடும், மற்றும் அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் நாம் புரிந்து கொள்ளமுடியும்.

2 தீமோத்தேயு 2:15.

## ஜனவரி 13

**“தேவன் உண்மையுள்ளவர்." 1 கொரிந்தியர் 1:9.**

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எப்போதும் உண்மையுள்ளவைகளாகவே நிறைவேறித் தீரும் அவர் ஒருபோதும் தவறுவதில்லை. நம் மீதான அவருடைய சித்தம் என்னவாக இருக்கும் என்பதை நாம் தெளிவாகக் காண்பதற்கு முன், நாம், சில சமயங்களில் நீண்ட காலம் காத்திருக்க நேரிடும். ஆனால், அவர் நம்மை ஒருபோதும் மறவார். நாம் காத்திருந்து, பொறுமை மற்றும் நம்பிக்கையின் பாடங்களைக்

கற்றுக் கொள்வதற்காக, நமக்கு நன்மை உண்டாவதே, இந்த தடைகள் அனுமதிக்கப்பட்டதற்கான காரணமாக இருக்கலாம்.

லூக்கா 1:37.

## ஜனவரி 14

**“காலையிலே உன் விதையை விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே, அதுவோ, எதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய் பயன்படுமோ என்று நீ அறியாயே." – பிரசங்கி 11:6.**

பூமியின் குடும்பங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய அன்பின் திட்டத்தைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்வது, நாம் விதையை விதைப்பதற்கொப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளது. நாம் யாரிடத்தில் சாட்சி பகிர்ந்தோமோ, அவர்கள், இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ள விரும்புவார்களோ என நாம் அறியக்கூடிய வழி எதுவுமில்லை. ஆகவே நாம் இந்த நற்செய்தியைப் பகிர்ந்துக் கொள்ள கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாகப் பயன்படுத்த ஆயத்தமாய் இருந்து, பலனை, கர்த்தரிடத்தில் விட்டுவிட வேண்டும்.

மத்தேயு 24:14.

## ஜனவரி 15

**"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு." – பிரசங்கி 3:1.**

இயற்கையின் பல்வேறு சீதோஷண நிலைகளுக்கு காலங்கள் இருப்பதுபோன்று, வேலை செய்ய ஒரு காலம், அதுபோன்று, விளையாட ஒரு காலம் இருப்பதை நாம் காண்பதுபோலவே, தேவனும், இந்த கொள்கையை இன்னும் உயர்ந்த அளவில் பயிற்சி செய்ய அனுமதித்திருக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். தேவனுடைய நீதியின் பிரமாணங்கள் (நியாயப்பிரமாணங்கள்) இல்லாமல் ஜீவிப்பதினால் வரும் தீமை மற்றும் தீமையின் விளைவுகள் குறித்து, அவருடைய மனித குடும்பங்கள் இப்பொழுது கற்றுக் கொள்ளும் காலமாக உள்ளது.

பிரசங்கி 8:6.

## ஜனவரி 16

**" வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு." – பிரசங்கி 3:1.**

தேவனுடைய உண்மையான குணநலன்களான ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையைக் குறித்தும், மனுக்குலம் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கான அவருடைய அன்பின் திட்டத்தைக் குறித்தும் அனைத்து ஜனங்களும் கற்றுக் கொள்ளக்கூடிய காலம், பூமியில் கிறிஸ்துவின் இராஜ்யம் அரசாட்சி செய்து கொண்டிருக்கும் காலத்தில் நடைபெறும்.

செப்பனியா 3:9.

## ஜனவரி 17

**". . . உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்." – எபிரெயர் 8:5.**

வனாந்தரத்தில் ஒரு ஆசாரிப்புக்கூடாரம் கட்டும்படி தேவன் ஜனங்களுக்குக் கட்டளையிட்டு, அதற்குண்டான சகல விவரங்களையும் அவரே கட்டளையிட்டார். ஒவ்வொரு காரியமும், மிகச் சிறிய விஷயம் வரை, அவர் கற்பித்தப்படியே துல்லியமாக செய்யப்பட வேண்டியிருக்கிறது. இதற்கான காரணம், ஆசரிப்புக்கூடாரமும், அதன் பணிகளும், பிரதானமானதும், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமான காரியங்களான, யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தை பிரதிபலிக்கின்றது.

சங்கீதம் 33:6–9.

## ஜனவரி 18

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்கு கவனமாய் இருக்கிறது. " – 1 பேதுரு 3:12.**

நம்முடைய மீட்பராக இயேசுவில் விசுவாசம் வைத்து, தேவனிடத்தில் நம்முடைய இருதயங்களைக் கொடுக்கும் போது, அவர் எப்போதும் நமக்கு செவிக் கொடுக்கிறார் என்பதை அறிந்து ஜெபத்தில் நம்முடைய பரமபிதாவிடம் செல்லும் சிலாக்கியத்தை நமக்கு கொண்டு வருகிறது. இயேசுவின் பின்னடியார்கள், நீதிமான்கள் என்று அழைக்கப்படுகின்றனர். காரணம், இயேசு, தம்முடைய நீதியினால் அவர்களுடைய அபூரணங்களை மூடுகிறார். தேவன், நம்முடைய ஜீவியத்தில் ஒவ்வொரு கஷ்டமான சூழ்நிலைகளும் எடுத்து மாற்றப்படும் என்று தேவன் வாக்களிக்காவிட்டாலும், அவர் நம்மோடு இருந்து சகிப்பதற்குத் தேவையான பெலனை நமக்கு அருளுவார்.

தானியேல் 10:2.

## ஜனவரி 19

**"சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன் கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப்பண்ணுகிறீர்." – சங்கீதம் 4:8.**

நாம் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்து, நம்மால் இயன்ற அளவு அவருடைய சித்தத்தை செய்யும்போது, நம்முடைய நன்மைக்கு ஏதவல்லாத எந்தக் காரியமும் நமக்கு சம்பவிக்க அவர் நமக்கு அனுமதிக்க மாட்டார் என்பதை அறிந்தவர்களாக ஒவ்வொரு இரவும் நாம் படுக்கைக்குச் செல்லமுடியும். இப்படியாக அவரது வழியில் நடக்கும்போது, தேவன் நம்மேல் அக்கறையாயும் அன்பாயுமிருக்கிறார் என்பது நமக்கு ஒரு அற்புதமான ஆசீர்வாதமாய் இருக்கும்.

யோவான்14:27

## ஜனவரி 20

**"எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்." – பிலிப்பியர் 4:7.**

தேவனுடைய குமாரனில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலமாக, நாம் தேவனுக்கு விலையேறப் பெற்றவர்களாக மாறுகிறோம். வேறே எந்த நபரைப் பார்க்கிலும் அல்லது வல்லமையைப் பார்க்கிலும் அவருடைய கண்காணிப்பும் காத்துக் கொள்ளுதலும் பெரிதளவில் இருக்கின்றது. சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர் நம்மோடு இருக்கிறார் என்று அறிந்திருப்பதும், நமக்கு அத்தியாவசியமான தருணங்களில் நம்மை பாதுகாக்கிறார் என்பதும் ஆறுதலாய் இருக்கிறது. நம்முடைய இருதயங்களில் இருக்கும் இந்த சமாதானம், நம் பட்சத்தில் நாம் சாய்ந்திருப்பதிலிருந்து வராமல், தேவன் பட்சத்தில் சாய்ந்திருப்பதன் மூலம் வருக்கின்றது. இது கவலை மற்றும் பயத்திலிருந்து நம்மை விடுவிக்கின்றன.

ஏசாயா 26:3.

## ஜனவரி 21

**"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்." – எபேசியர் 5:16.**

மீட்குதல் என்பது, "இழப்பிலிருந்து காத்துக்கொள்ளுதல்" என்று பொருள்படுகிறது. நாம் நம்முடைய காலத்தை வீணடித்துப் போடாமல், ஞானமாய் பயன்படுத்த வேண்டும். நம்முடைய நேரத்தை நாம் கழிக்க அநேக வழிகள் உண்டு. நாம் அதை செலவழித்தப் பின்பு, அது கழிந்து போவதாக இருக்கும். நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி என்னவெனில், "இந்த விதத்தில் என்னுடைய நேரத்தை உபயோகித்தால் எனக்கு நலமாக இருக்குமா ? (அல்லது) நாம் செலவிடுவதற்கு வேறு ஏதாவது சிறந்த வழி இருக்கின்றதா ? என்பதாகும்.

சங்கீதம் 90:12.

## ஜனவரி 22

**"நான் (இயேசு) இதற்காகவே இவ்வுலகத்தில் வந்தேன்." – யோவான் 18:37.**

ஏதேனில் ஆதாம் பரீட்சிக்கப்பட்டு, கீழ்ப்படிதலில் தவறினதே முதல் நியாயத்தீர்ப்பு நாளாகும். மரணமே அவருக்கு தண்டனையாய் இருந்தது. அன்று முதல், அந்த தண்டனையின் ஒரு பாகமாக மனுக்குலம் அனைவரும் மரித்துக் கொண்டிருக்கின்றனர். அந்த தண்டனையிலிருந்து அனைவரையும் விடுவிக்க, இயேசு, இப்பூமிக்கு வந்து, தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்.

1 கொரிந்தியர் 15:22.

## ஜனவரி 23

**"புல் உலர்ந்து, பூ உதிரும், நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்." – ஏசாயா 40:8.**

அழகிய புல் மற்றும் மலர்கள், வசந்த காலத்தில் துளிர்த்து பனிக்காலத்தில் செத்துப் போகின்றதாக நாம் காண்கின்றோம். பருவ காலங்கள் மாறுகையில் ஒவ்வொரு வருடமும் இது நிகழ்கிறது. ஆனால் தேவன், வேதம் என்ற அவருடைய புத்தகத்தில் நமக்குக் கொடுத்திருக்கும் வார்த்தைகள் ஒருபோதும் ஒழிவதோ (அல்லது) மாறப்போவதோ இல்லை. தேவன் எப்பொழுதும் மாறாதவராகவே இருக்கின்றார். அதாவது ஞானம், அன்பு, நீதி மற்றும் வல்லமையோடு இருந்து வருகிறார் – என்றென்றும் அவ்விதமாகவே இருப்பார்.

1 பேதுரு 1:25.

## ஜனவரி 24

**"மோசே . . . கர்த்தருடைய பட்சத்தில் இருக்கின்றவர்கள் யார் ? . . . என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்." – யாத்திராகமம் 32:26.**

லேவி கோத்திரத்தார் முன் வந்திருந்து தாங்கள் அவர் பட்சத்தில் இருக்கிறோம் என்று கூறியதினிமித்தம் தேவன் சந்தோஷமடைந்திருப்பார். அந்த யுகத்தில் ஒரு நபர் (ஆணோ அல்லது பெண்ணோ) முன் வந்து தன்னுடைய ஜீவனை அவருடைய பணிக்காக தத்தம் செய்யும் போது, அவர் அதில் பிரியப்படுவார். இதுவே அர்ப்பணிப்பு என்று அழைக்கப்படுகிறது.

நீதிமொழிகள் 23:26.

## ஜனவரி 25

**"மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரணவழிகள். " – நீதிமொழிகள் 16:25.**

எது சரி, எது தவறு என்று நாமாகவே அறிந்துகொள்ள முடியாது. வழிநடத்துதலுக்காக நாம் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். அளப்பதற்கு அளவுகோலை பயன்படுத்துகையில் ஒரு அங்குலத்தின் அளவு எவ்வளவு என்று நாம் அறிந்திருக்கிறதுபோல, வேதத்திலிருந்து இயேசுவின் உதாரணங்கள் மற்றும் போதனைகளை அளப்பதன் மூலம் எவையெல்லாம் தேவனுடைய வழிகள் என்றும், எவையெல்லாம் சாத்தனுடைய வழிகள் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம்.

எரேமியா 21:8.

## ஜனவரி 26

**"பூமியின் தூளிலே நித்திரைப் பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." – தானியேல் 12:2.**

மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலுக்கான குறிப்புக்கள், வேதத்தில் திரும்ப திரும்ப, கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு இதை தம்முடைய முதலாம் வந்திருத்தலில், சில தனிப்பட்ட நபர்களை

மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வந்ததில் சித்தரிக்கின்றார். இராஜ்யத்தில், மரித்திருக்கின்ற அனைவரும், மீண்டும் ஜீவனுக்கு வருவார்கள். முதல் முறையாக, சாத்தானின் ஆதிக்கம் இல்லாமல், அவர்கள், தேவனுடைய வழிகளைக் கற்றுக் கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

ஏசாயா 35:10.

## ஜனவரி 27

**". . . அவன் எம்மாத்திரம் ? . . . உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து. "**
**– சங்கீதம் 8:4,6.**

மனிதனுடைய சிருஷ்டிப்பின் போது, அவன் பூமியின் மீது இராஜாவாக வைக்கப்பட்டான். அவன் தனக்கு கீழ்ப்பட்டிருந்த மிருகங்களின் மீது ஆளுகை பெற்றிருந்தான். ஏதேனில் அவன் கீழ்படியாமல் போனபோது, இவை அனைத்தும் இழந்துபோயின. ஆனால், கிறிஸ்துவின் இராஜ்யத்தில், தேவன் திட்டம் செய்த அனைத்து நன்மையான காரியங்களும் நடைபெறும். பின்பு, அங்கு எந்த கொடூரமான மிருகங்களும் காணப்பட மாட்டாது. மிக முக்கியமாக, எல்லா ஜனங்களும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை வைக்கவும், அன்பு செலுத்தவும் கற்றுக் கொள்வார்கள்.

ஏசாயா 35:9.

## ஜனவரி 28

**“தேவன் இல்லையென்று மதிக்கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்" – சங்கீதம் 14:1.**

காரணக்காரியத்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டும், நாம் சிருஷ்டிப்பின் பிரமாண்டத்தையும், அதன் அழகையும், ஒழுங்கையும், இசைவையும், சரிசமானத்தையும், அளவையும் வெவ்வெறு தன்மைகளையும் கவனிக்கையில், சிருஷ்டிகரைக் குறித்து நாம் சந்தேகிக்க முடியுமோ ? காரணியின் காரணமாக விளைவுகள் உருவாகின்றது. இயற்கையின் இசைவும், ஒருமைப்பாடும் தற்செயலாக நிகழ்ந்தது என கற்பிக்கும் அறிவாற்றல் உள்ளவர்களும், மனிதனின் திறமையைக் குறித்து பெருமை பாராட்டிக்கொண்டிருப்பவர்களும் எவ்வளவு குறுகிய புத்தியோடு காணப்படுகின்றனர். தேவனுடைய கைவேலைப்பாட்டுக்குரிய நிரூபணங்கள் அனைத்தும் நம்மை சூழ்ந்து இருக்கிறது.

சங்கீதம் 139:14.

## ஜனவரி 29

**"பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." – ஏசாயா 55:9.**

தேவனுடைய நினைவுகள், நம்முடைய நினைவுகளைப் பார்க்கிலும் சிறந்ததாகும். அவை எப்பொழுது தெளிவானதும், நியாயமானதும், நீதியானதும், அன்பானதும், ஞானமுள்ளதாகவும் இருக்கின்றது. இதன் காரணமாக, நாம் எல்லாக் காலத்திலும் அவரை நம்பலாம். தேவன், நம்மைப் பார்க்கிலும் மிகவும் பெரியவராக இருந்தபோதிலும், அவர் நம்மை நேசித்து, எப்போதும் நம்முடைய ஜெபங்களைக் கவனிக்க தயாராக இருந்து, அதன் மூலம் நாம் நம்முடைய அனுபவங்களை சகித்துக் கொள்வதற்கு தேவையான பெலனை நமக்குக் கொடுக்கின்றார் என்று நாம் அறிந்திருக்கின்றோம்.

ரோமர் 8:28.

## ஜனவரி 30

**"ஆகையால், நாளைக்காக கவலைப் படாதிருங்கள் நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." – மத்தேயு 6:34.**

நாளையதினம் குறித்து நாம் பயமோ, கவலையோ அடையக்கூடாது. கர்த்தர் தேவையானவற்றை அருளுவார் என்று அவரிடத்தில் நம்பிக்கை கொண்டு, நமக்காகவும் நம்மை

சார்ந்திருப்பவர்களுக்காகவும் நம்மால் இயன்றதை செய்யும் பட்சத்தில், நாம் கவலைக் கொள்வதற்கு எதுவும் இருப்பதில்லை. நாளை தினத்தைக் குறித்ததான கவலை, இன்றைய நாளின் பாரத்தை அதிகரிக்கவே செய்யும்.

மத்தேயு 10:31.

## ஜனவரி 31

**"நீ உன் வாலிப பிரயாயத்திலே உன் சிருஷ்டிகரை நினை." – பிரசங்கி 12:1.**

நாம் எவ்வளவு இளையவராக இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல், தேவனுடனான நம்முடைய உறவை நாம் வளர்த்துக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். எங்கும் நம்மை சுற்றிலும் நாம் காணக்கூடிய அழகுக்காக நம்முடைய ஆசீர்வாதத்திற்காக நாம் அவரை ஸ்தோத்தரித்து, நன்றி ஏறெடுக்கலாம். நாம் அவரை நேசிக்கின்றோம் என்பதை நம்முடைய ஜெபங்களில் அவரிடம் தெரியப்படுத்தலாம். நாம் அவருடைய வார்த்தையை குடும்பத்திலும், தேவனிடத்தில் அன்பு கூறக்கூடிய மற்றவர்களோடும் சேர்ந்து கூடுகைகளிலும் ஆராயலாம். நாம் இவைகளை செய்தால், நம்முடைய ஜீவியம் ஆசீர்வதிக்கப்படும்.

எபேசியர் 6:7.

## பிப்ரவரி 1

**" நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" – 1 பேதுரு 1 : 16**

பரிசுத்தமாய் இருப்பதென்பது தெய்வீகத்தன்மையோடு இருப்பதாகும். அதாவது, தேவனுடைய சுபாவத்தை அல்லது குணலட்சணத்தைப் பெற்றிருப்பதைக் குறிக்கும். பரிசுத்தம் என்பது நாம் சாதிக்க முடிகிற ஏதோ ஒரு காரியமல்ல. நம்முடைய ஜீவியத்தில், தேவனுடைய பிரசன்னம் இருந்தால் மட்டுமே, நம்மை பரிசுத்தமாக்க முடியும். இந்நதப்படியாக, நாம் எவ்வளவாய் நம்முடைய வாஞ்சையையும், சிந்தையையும், தேவனுடைய நன்மையினாலே நிரம்பி இருக்க அனுமதிக்கின்றோமோ, அவ்வளவாய் நம்முடைய ஜீவியத்தில் காணப்படும் அவருடைய பிரசன்னம் நம்மை பரிசுத்தமாக்கும்.

1 தெசலோனிக்கேயர் 4 : 7

## பிப்ரவரி 2

**" ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப்புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது." – வெளிப்படுத்தல் 2 : 7**

வேதாகமத்தின் முதல் புத்தகத்தில், ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியாமல் போனதின் காரணமாக, ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர் என்பதை நாம் அறிந்துக்கொண்டோம். வேதாகமத்தின் கடைசி புத்தகத்திலோ, கீழ்ப்படிதல் காண்பிப்பவர்கள், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடிய ஒரு காலம் வரும் என்றும், அப்போழுது பூமி பரதீசு போல் இருக்கும் என்றும் நாம் அறிந்துகொள்கிறோம்.

வெளிப்படுத்தல் 22 : 2

## பிப்ரவரி 3

**"அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது என்றார்கள்." – தானியேல் 6 : 5**

தானியேல், எப்படிப்பட்ட முன்மாதிரியாக இருந்திருக்கிறார் அவருடன் இருந்த மனிதர்கள், அவரிடத்தில் கண்டுபிடிக்க முடிந்த ஒரே குற்றம், அவர் தேவனுக்கு ஊழியம் செய்த விதத்திலேயே ஆகும். எல்லா வேளைகளிலும், நாம் தேவனையே பிரியப்படுத்த முயற்சி செய்துக்கொண்டிருப்பதே மாபெரும் குற்றச்சாட்டாக, நம்முடைய நண்பர்களும் அயலகத்தாரும் நம்மை குறித்து சொல்லுவார்களானால் அது எவ்வளவு அருமையானதாக இருக்கும்.

2 பேதுரு 2 : 20

## பிப்ரவரி 4

**"அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள் நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்." – யாத்திராகமம் 14 : 13**

நம் மீது வரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது அத்தியாவசியமானவைகளுக்கான தீர்மானங்கள் எடுப்பதற்கோ, நாம் நம்மால் இயன்றதை செய்திருக்கும்போது, சிலசமயங்களில், நாம் பரலோக பிதாவின் பதிலுக்காக நிலைத்து நின்று அவரை நோக்கிப்பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய ஞானம், நம்முடைய ஞானத்தைப் பார்க்கிலும் மிகவும் பெரியது.

புலம்பல் 3 : 26

## பிப்ரவரி 5

**"நான் (இயேசு) பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன் என்றார். " – யோவான் 12 : 32**

நம்முடைய கர்த்தர், சிலுவையின் மீது மரணத்தில் உயர்த்தப்பட்டு, பின்பு உயிர்த்தெழுப்பப்பட்டதன் விளைவாக, அவர் இறுதியில் எல்லா மனுக்குலத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்வார். இங்கு இழுத்துக்கொள்ளுதல் என்பது, கர்த்தரையும் அவருடைய நோக்கங்களையும் குறித்ததான அறிவு அனைவருக்கும் கொடுக்கப்படும் என்று பொருள்படுகிறது. இயேசு, எல்லாரையும் இழுத்துக்கொள்ளும் இந்த அதிகாரத்தை தற்போது செயல்படுத்தவில்லை. காரணம், இந்த யுகத்தில் அவரிடம் வருகிறவர்களே, தேவனால் இழுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

1 தீமோத்தேயு 2 : 4

## பிப்ரவரி 6

**" நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன். " – எரேமியா 31 : 33**

சீனாய் மலையில் மோசேயின் மூலமாக தேவனால் இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயபிரமாணமானது, ஜனங்கள் கற்றுக் கொள்வதற்கென்று எழுதப்பட்டது. ஆனால், அவர்கள் அபூரணரர்களாக இருந்த காரணத்தினால் அதை பூரணமாகக் கடைப்பிடிக்க அவர்களால் முடியவில்லை. இராஜ்யத்தில் தேவன் இஸ்ரயேலலோடு ஒரு புதிய உடன்படிக்கை பண்ணுவார். அப்பொழுது கிறிஸ்து இராஜாவாக இருப்பார். பின்பு, அவர்கள் பூரணர்களாக்கப்பட்டிருப்பதன் காரணமாக அனைவரும் தேவனுடைய பரிபூரண பிரமாணத்தைக் கடைபிடிப்பவர்களாக இருந்து நித்தியஜீவனை சுதந்தரிப்பார்கள்.

எபிரெயர் 10:16

## பிப்ரவரி 7

**" நியாயபிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் நிழலாய்.... இருக்கிறது." – எபிரெயர் 10 : 1**

நிழல் என்பது அதின் சொந்தக்காரருடைய உருவப்படமாகும். அது அதின் சொந்தக்காரர் செய்வதை அப்படியே பிரதிபலிக்கும். தேவனுடைய "நிழல்கள்" என்பது பின்னாளில் அவர் செய்யும்படி நிர்ணயித்திருப்பவைகளை விளக்கிச் சொல்லக்கூடியவைகளாக இருக்கிறது. உதாரணத்திற்கு நியாயபிரமாண உடன்படிக்கையாகது, ஆயிரவருட யுகத்தில் கிறிஸ்துவும் சபையும் நிறைவேற்றப்போகும் காரியங்களுக்கு ஒரு நிழலாக அல்லது ஒரு காட்சியாக இருந்தது.

கலாத்தியர் 3 : 24

## பிப்ரவரி 8

**"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே." – லூக்கா 11 : 2**

இயேசுவின் சீஷர்கள் ஜெபம் பண்ண கற்றுக் கொடுக்கும்படி அவரிடம் கேட்டனர். அவர் இந்த எளிமையான ஜெபத்தை ஓர் உதாரணமாக அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். தேவன் பரலோகத்திலிருக்கிற அன்புக்குரிய பிதா என்றும், அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளதென்றும், நாம் அவரை எப்பொழுதும் வணக்கத்துடனும், பயபக்தியுடனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும், முதலில் நம் நினைவுகூர வேண்டும்.

சங்கீதம் 11 : 4

## பிப்ரவரி 9

**" உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக " – லூக்கா 11 : 2**

தேவனுடைய நாமம் பரிசுத்தமுள்ளது. ஆகையால் நாம் அவரிடத்தில் பயபக்தியும், மரியாதையும், அன்பும், பணிவும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இயேசு தேவனுடைய மகிமையை நமக்கு வெளிப்படுத்திக் காண்பித்ததாக வேதம் நமக்கு கூறுகிறது. இதையே நாமும் செய்ய வேண்டும். நாம் மற்றவர்களுக்கு தேவனது மகிமையான குணாதிசயம் மற்றும் அன்பின் திட்டம் ஆகியவற்றை குறித்தும் அவரது பிரமாணங்களின்படி நடக்கிறவர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் தர அவர் தயாராயிருக்கிறார் என்றும் கூறும்போது, அவர் நம்முடைய சிருஷ்டிகரும் பிதாவுமானவர் என்று அவரை கனப்படுத்துகிறோம்.

எபிரெயர் 11 : 6

## பிப்ரவரி 10

**"உம்முடைய ராஜ்யம் வருவராக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக." – லூக்கா 11 : 2**

தற்போது இந்த யுகத்தில் பூமியின்மீது தேவனுடைய சித்தம் செயல்படுத்தப்படுவதில்லை. ஆனால், தற்போது பரலோகத்தில் தேவனுக்கு கீழ்ப்படிகிறது போல பூமியிலும் கீழ்ப்படிவார்கள். எப்பொழுதெனில், தேவன் ஒவ்வொருவருடைய கண்ணீரையும் துடைத்து, அவர்களுடைய துக்கங்களையும் அலறுதலையும் நீக்கி, எல்லோரும் தேவனை அறிந்து, அவருக்கு ஒன்றிணைந்து ஊழியம் செய்யும் பொழுதே ஆகும். இந்த ராஜ்யத்திற்காகவே ஜெபிக்கும்படி இயேசு கூறினார்.

ஏசாயா 11 : 4 – 9

## பிப்ரவரி 11

**"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்." – மத்தேயு 6 : 11**

நமக்கான அன்றாட அப்பத்தை நம்முடைய பரமபிதா அருள வேண்டும் என நாம் ஜெபிக்கையில், நாம், நமது சரீரங்களுக்கு மட்டுமே ஆகாரம் தேவை என்று பொருளில் கூறுவதில்லை. நம்முடைய இருதயம் மற்றும் சிந்தைக்கும் ஆகாரம் தேவைப்படுகிறது. நாம் இந்த ஆவிக்குரிய உணவை தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்திருக்கிறோம். வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம் நானே என்று இயேசு கூறினார். அவருடைய வார்த்தைகளும், முன்மாதிரிகையுமே நாம் நாடித்தேட வேண்டிய ஆவிக்குரிய ஆகாரம்.

யோவான் 6 : 14

## பிப்ரவரி 12

**"எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்: நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்றோமே." – லூக்கா 11 : 4**

நாம் தவறு செய்யும் போது தேவனுடைய மன்னிப்பு நமக்கு அவசியமாய் இருப்பது போல, நமக்கு எதிராக செயல்ப்படக்கூடிய மற்றவரது தவறான செய்கையை நாமும் மன்னிக்கின்றவர்களாக இருக்க

வேண்டும். கடந்த காலத்திலுள்ள ஓர் உட்பகையை தொடர்ந்து வைத்திருந்தால், நமக்கும் தேவனுக்கும் இடையே ஒரு தடையை ஏற்படுத்திவிடும்.

மாற்கு 11 : 26

## பிப்ரவரி 13

**“எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.” – லூக்கா 11 : 4**

நம்முடைய பிதா, நாம் தாங்கிக்கொள்வதற்கு மேலாக நம்மை சோதிப்பது இல்லை. நமக்கு தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் அவர் நம்மோடு இருப்பார் என்றும், நாம் நம்முடைய இருதயத்தை அவரிடம் கொடுத்திருந்தால் நாம் ஒருபோதும் தனிமையாய் இருப்பதில்லை என்ற நிச்சயத்தையும் நாம் பெற்றிருக்கிறோம். அண்டசராசரங்களின் சிருஷ்டிகர் நம்மை பராமரித்து, எப்போதும் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்று அறிந்துகொள்வதே ஆறதலாக உள்ளது.

1 கொரிந்தியர் 10 : 13

## பிப்ரவரி 14

**“கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.” – பிலிப்பியர் 3 : 14**

கிறிஸ்துவர்கள் பந்தயசாலையில் ஓடிக்கொண்டிருக்கின்றனர் என்றும் நாம் எதிர்நோக்கி இருக்கும் இலக்கு பரிபூரண அன்பு என்றும் வேதாகமம் கூறுகின்றது. நாம் தேவன் மீதும், அவருடைய நீதியின் மீதும் அன்புகூர வேண்டும். நாம் நம்முடன் ஓடுபவர்களையும் அன்பு செய்ய வேண்டும். இறுதியில், நாம் நம் சத்துருக்களையும் கூட அன்பு செய்ய வேண்டும். இவைகளை நாம் செய்தால், நாம், கர்த்தர் இயேசுவின் மகிமை மற்றும் ஊழியங்களில் பங்கு பெறுவதோடு, பரம அழைப்பின் பந்தயப்பொருளையும் பெறுவோம்.

ரோமர் 2 : 6 , 7

## பிப்ரவரி 15

**“கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.”
– சங்கீதம் 37 : 4**

எது நியாயம் என்றறிந்து அதை மாத்திரம் செய்வது போதாது, நாம் அதை செய்யும் போது வாஞ்சையோடும், மகிழ்ச்சியுடனும் செய்ய வேண்டும். தெய்வீக வழிநடத்துதலுக்காக உறுதியோடு ஜெபசிந்தையில் காத்துக்கொண்டிருக்கும் இருதயம், எப்போதும் ஜெப சிந்தையில் இருக்கும். நாம் நமக்காக கேட்டுக்கொள்பவைகள், தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்குமாயின், நம்முடைய விருப்பங்கள் நமக்கு அளிக்கப்படும்.

சங்கீதம் 40 : 8

## பிப்ரவரி 16

**“அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்.” – சங்கீதம் 91 : 4**

ஒரு தாய் கோழியை அதின் குஞ்சுகளை சேர்த்துக்கொள்வதை என்றாவது கவனித்திருக்கிறீர்களா? அந்த தாய் கோழி, தனது ஒவ்வொரு குஞ்சின் மீது அதிகளவு கவனம் கொடுத்து, ஆபத்தின் அறிகுறியை ஆரம்பத்திலேயே அறிந்து, அவைகளுக்கு ஒரு அழைப்பு விடுக்கும். அவைகள் விரைவாக தாயினிடத்தில் ஓடி அதன் செட்டையினுடைய பாதுகாப்பின் கீழ் அடைக்கலம் புகும். நமது கர்த்தருடைய பாதுகாப்பின் பராமரிப்பிற்கு இது எவ்வளவு அருமையான உதாரணமாக இருக்கிறது. அவருடைய செட்டைகள் விசாலமாய் இருப்பதினால், எல்லா ஆபத்துகளிலும், நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம்.

சங்கீதம் 17 : 8

## பிப்ரவரி 17

**“ஏற்றகாலத்திலே, . . . ஆசீர்வாதமான மழை பெய்யும்.” – எசேக்கியேல் 34 : 26**

நம்முடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் அன்பு, புசிப்பதற்கான உணவு, தங்க இருப்பிடம், மழை மற்றும் வெயில், தேவனுடைய வார்த்தையின் மூலம் ஆறுதல் ஆகியவைகளே ஆசீர்வாதங்கள் என நாம் பெரும்பாலும் கருதிக்கொள்கிறோம். இந்த யுகத்தில் இப்படிப்பட்ட அநுகூலங்களில் வெகு சிலவற்றையே பெரும்பாலானோர் பெற்றுள்ளனர். ஆயிரவருட யுகத்தில், தேவன், இந்த கிருபைகளை அனைவருக்கும் அளவில்லாமல் அனுப்புவார். இவைகளோடு கூட, இறுதியாக மனதார வாஞ்சையும், கீழ்ப்படிதலும் உள்ள அனைவருக்கும் ஜீவன் பெறும் ஆசீர்வாதத்தையும் அனுப்புவார்.

மல்கியா 3 : 10

## பிப்ரவரி 18

**“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.” – மத்தேயு 6 : 33**

இவ்வுலகத்தின் காரியங்கள், தற்காலிகமான சந்தோஷத்தை மட்டுமே கொடுக்கக் கூடியது என்பதை தேவன் அறிந்திருக்கிறபடியால், அவர், தேவனுடைய இராஜ்யத்தோடு சம்பந்தமுடைய காரியங்கள் மீது நம்முடைய நேரம், பலம், மற்றும் முயற்சியை செலவிடும்படி நமக்கு கற்பிக்கிறார் அதிகப்படியான பூமிக்குரிய உடைமைகளை பெற்றிருப்பதைக் காட்டிலும், கிறிஸ்துவர்களுக்குரிய குணலட்சணங்களை வளர்ப்பதே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மத்தேயு 22 : 37

## பிப்ரவரி 19

**“பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது.” – பிரசங்கி 1 : 4**

பூமி என்னும் நம்முடைய கிரகம், என்றென்றும் நிலைத்திருக்கும் என தேவன் நமக்கு உறுதியளித்திருக்கிறார். அது எவ்விதத்திலும் அழிக்கப்பட்டோ, எரிக்கப்பட்டோ, அல்லது முழுவதுமாக அழிக்கப்பட்டோ போவதில்லை. தேவன், மனுக்குலத்திற்கான ஒரு வீடாக பூமியை ஆயத்தப்படுத்தியிருப்பதினால், ஏற்றக்காலத்தில் அது ஒரு பூரண நிலைக்குக் கொண்டு வரப்படும், மேலும், பூரணமடைந்த மனுக்குலம் அதில், என்றென்றும் ஜீவனோடு இருப்பார்கள்.

ஏசாயா 45 : 18 , 19

## பிப்ரவரி 20

**“அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமைஹமாயிருக்கிறது: அவருடைய ராஜ்யம்: அவருடைய ஆளகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்”**
**– தானியேல் 4 : 3**

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கண்ட தரிசனத்திற்கான விளக்கமாக, தேவன் தானியேலிடம், ஆளகை செய்யும்படி அடுத்தடுத்து நான்கு உலகப் பேரரசுகள் ஸ்தாபிக்கப்படும் எனக் கூறினார். இனி ஒருபோதும் அழியாதபடி இருக்கப்போகும், அடுத்த உலகளாவிய இராஜ்யத்தை தேவன் ஸ்தாபிக்கும் வரை, அந்த இராஜ்யங்கள் ஒவ்வொன்றும் வீழ்ச்சி அடையும். இறுதியான இராஜ்யம் தேவனுடைய இராஜ்யமாக இருக்கும்.

2 பேதுரு 1 : 11

## பிப்ரவரி 21

**“கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது”**
**– நீதிமொழிகள் 15 : 3**

நம்முடைய சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன், மகா பெரியவரும், வல்லமையுமுள்ள ஆவிக்குரிய ஜீவியாக இருக்கிறார். அவருடைய தூதர்கள், காவலாளிகள் என்றும் பரிசுத்த ஜீவிகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஆகையால், தேவன் இவர்கள் மூலமாக, சகல ஜனங்களைக் குறித்தும், சகல காரியங்களைக் குறித்தும் அறிந்துகொள்கிறார். அவர் நம்முடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளை மட்டுமே அறிந்திராமல், நம்முடைய எண்ணங்களையும் கூட அறிந்தவராக இருக்கிறார். அனனியாவும், சப்பீராளும் அவரை வஞ்சிக்க நினைத்தபோது, அவர் வஞ்சிக்கப்படவில்லை. மாறாக அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

அப்போஸ்தலர் 5 : 1 – 5

## பிப்ரவரி 22

**“பின்பு தேவன்: நமது சாயாலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. . . என்றார்.”**
**– ஆதியாகமம் 1 : 26**

மனிதன், தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது, மனிதன், தேவனைப் போன்ற ஒரு சிந்தை, ஒரு ஞாபகத்திறன், திட்டம் பண்ணும் திறன் மற்றும் நியாயமாய் சிந்திப்பவனாயும் இருக்கிறான் என்று பொருள்படுகிறது. தேவன், அண்டசராசரங்களின் மீது அதிகாரம் (ஆளுகைத் தன்மை) கொண்டிருந்ததுபோல, ஆதாம் இந்த பூமியின் மீது ஆளகை செய்கிறவராக இருந்தார் என்ற காரியத்தையும் உள்ளடக்குவதாக இருக்கிறது. அவர் இராஜாவாக இருக்கும் உரிமையை இழந்தார். ஆனால், ஆயிரவருட யுகத்தில், இது திரும்பக் கொடுக்கப்படும்.

மத்தேயு 19 : 4

## பிப்ரவரி 23

**“நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.” – 1 கொரிந்தியர் 1 : 3**

அப்போஸ்தலர்கள், சபையின் அங்கங்களுக்கு நிருபங்கள் எழுதியபோது, இந்த வாழ்த்துதலை அல்லது இந்த ஜெபத்தையே அடிக்கடி பயன்படுத்தினார்கள். கிருபை என்பது “**இரக்கம்**” மற்றும் சிலசமயங்களில் “**தயவு**” என்றும் பொருள்படும் அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்துவிலுள்ள கிறிஸ்துவர்களுக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் சமாதானத்தின் ஆசீர்வாதமும் அளிக்கப்படும்படி ஜெபித்தபோது, அவருடைய வார்த்தைகள், அவருடைய உடன் கிறிஸ்துவர்களை அவர் எவ்வளவாய் நேசித்தார் என்பதைக் காண்பித்தது.

2 தெசலோனிக்கேயர் 1 : 2

## பிப்ரவரி 24

**“மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக.” – யாத்திராகமம் 25 : 2**

இஸ்ரயேலர், எகிப்தில் அடிமைகளாக இருந்த சமயத்தில், வெகு சில பூலோக உடைமைகளையே பெற்றிருந்தனர். ஆனால், தேவன், அவர்களிடம் ஆசாரிப்புக் கூடாரம் கட்டுவதற்கு அவர்களிடம் உள்ளதைக் கொடுக்கும்படி கேட்டபோது, எகிப்திலிருந்து அவர்கள் வெளியேறினபோது எகிப்தியர்கள் அவர்களுக்குக் கொடுத்த விலையேறப்பெற்ற பொன் மற்றும் ஆபரணங்கள் உட்பட, தேவைக்கும் அதிகமானவைகளை அவர்கள் வாஞ்சையோடு கொடுத்தனர். பின்னர், தேவன் இதற்குமேல் வேறெதுவும் கொண்டுவர வேண்டாம் என அவர்களிடம் கூறினார். இது நாம் பின்பற்றத்தக்க எத்துனை நன்மாதிரியாய் உள்ளது.

2 கொரிந்தியர் 9 : 7

## பிப்ரவரி 25

**"அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." – பிலிப்பியர் 4 : 8**

அப்போஸ்தலனாகிய பவுல், நம்மிடம், உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் என்று கூறகிறார். இவை அனைத்தும் நிறைந்திருக்கும் தேவனையும், நம்முடைய அன்பின் கர்த்தர் இயேசுவையும் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நம்மீதான அவர்கள் அன்பையும், இரட்சிப்புக்கான ஆச்சரியமான திட்டத்தையும் நாம் ஆழ்ந்து சிந்தித்தால், நம் இருதயங்கள் அன்பையும், துதியையும் ஏறெடுக்கும்.

மல்கியா 3 : 16

## பிப்ரவரி 26

**"ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள், அவையாவன: மேட்டிமையான கண்." – நீதிமொழிகள் 6 : 16 – 17**

நாம் பெற்றிருக்கும் அனைத்துமே நமது கர்த்தரிடமிருந்து வந்ததே. அவரில்லாமல் நாம் ஜீவித்திருக்கவே முடியாது. நாம் நீதியுள்ளவைகளைச் செய்யும் போது நாம் செய்கிறதெல்லாம் நமக்கு ஜீவன் தந்த தேவனுக்கு நன்றியுள்ளவர்களாய் எதை செய்ய வேண்டுமோ அதை மாத்திரமே செய்து கொண்டு இருக்கிறோம். பெருமைக்கு நேர் எதிரானது மனத்தாழ்மை, இயேசு கிறிஸ்து எவ்வளவு சிறந்தவராக இருந்தார் என்றும், நாம் செய்ய வேண்டியதைப் பார்க்கிலும் எவ்வளவு குறையுள்ளவர்களாகச் செய்கிறோம் என்பதையும் மனத்தாழ்மையோடு உணரும்போது, மேட்டிமையான கண் வருவதற்கு இடமிராது.

எரேமியா 13 : 15

## பிப்ரவரி 27

**"பொய் நாவை கர்த்தர் வெறுக்கிறார்." – நீதிமொழிகள் 6 : 16 – 17**

உண்மையில்லாத வார்த்தைகள் தவறியாகிலும் வந்துவிடாதபடி, நாம் நம்முடைய நாவுகளை எவ்வளவு கவனமாகக் காக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மிகைப்படுத்தின அல்லது முற்றிலும் தவறான காரியங்களை நாம் பேசுவதை நாமே உணரும்போது உடனடியாக அவைகளை நாம் திருத்திக் கொள்ள வேண்டும். மிகைப்படுத்தின அல்லது உண்மையற்ற காரியங்களைக் குறித்ததான பேச்சிலிருந்து நாம் முற்றிலும் விலகுவதற்கு முன்பு, இவ்வாறு நம்மை திருத்தும் விஷயங்களை நாம் அநேகமுறை செயல்படுத்த வேண்டியதாய் உள்ளது.

சங்கீதம் 119 : 29

## பிப்ரவரி 28

**" குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கையை" கர்த்தர் வெறுக்கிறார். – நீதிமொழிகள் 6 : 16 – 17**

தேவனுக்கு வெறுப்பும், பாழாக்கும் அருவருப்பாய் இருக்கும் இந்த காரியத்தில் நம்மில் ஒருவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களாய் இருப்பதில்லை. இருந்தபோதிலும், இதை செய்வதற்கான வேறொரு வழி என்னவெனில், ஜனங்களுக்கு மிகுந்த காயம் ஏற்படுத்துவதன் மூலம் குற்றவாளிகள் ஆகக்கூடும் மற்றவரின் தப்பிதங்களைக் குறித்து பேசுவது, அவர்களுடைய நற்பெயரை பாதிக்கச் செய்யும். மற்றவருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த காரியத்தைக் குறித்தும் பேசாமல் இருப்பது சிறந்ததாய் இருக்கும்.

ஏசாயா 1 : 15

## பிப்ரவரி 29

**“துராலோசனையைப் பிணைக்கும் இருதயத்தை ” கர்த்தர் வெறுக்கிறார். – நீதிமொழிகள் 6 : 16 – 18**

சிலர் எப்போதும் பிரச்சனையை கிளப்பிவிட்டு, மற்றவர்களுக்கு துக்கம் ஏற்படும் வரை சந்தோஷமடையாமல் இருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். வேதத்தில் மற்றொரு இடத்தில், நமக்கு தேவையில்லாத காரியங்களில் பேசி, அந்நிய காரியங்களில் தலையிடுதல் நல்லதல்ல என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. ஆனால், தங்களுடைய விஷயங்கள் வெளிப்பட்டால், தாங்கள் வெட்கத்திற்குள்ளாக்கப்படுவர் என்றுள்ள விஷயங்களை செயல்படுத்தும் ஆலோசனையில் நேரம் செலவழிப்பவர்களாக இருக்கும் சில மகிழ்ச்சியற்ற நபர்களும் உண்டு.

ரோமர் 1 : 21

## மார்ச் 1

**"தீங்கு செய்ய விரைந்தோடுங்காலை" தேவன் வெறுக்கிறார். – நீதிமொழிகள் 6:16–18.**

நாம் பிறருக்கு செய்யும் தீங்குகளை ஒருவரும் கண்டுபிடிக்காவிட்டாலும், தேவனுடைய பார்வையிலிருந்து ஒன்றும் மறைக்கப்படுவதில்லை. உண்மையில் இரகசியமாக ஒன்றும் செய்யப்படுவதுமில்லை. ஏனெனில், தூதர்களுக்கு நாம் ஒரு காட்சிப்பொருளாக இருப்பதாக வேதம் நமக்கு கூறுகிறது. அவர்கள் நம்மை கண்காணிக்கின்றனர். மேலும் பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசுவும் நாம் என்ன செய்கிறோம், என்ன சொல்லுகிறோம் என்பவைகளை அறிந்திருக்கின்றனர். குற்றமில்லாத மனசாட்சியையே நாம் பெற்றிருக்க வேண்டிய உண்மையானதொன்றாகும்.

ஏசாயா 59:7.

## மார்ச் 2

**"அபத்தம் பேசும் பொய்சாட்சியை" தேவன் வெறுக்கிறார் – நீதிமொழிகள் 6:16–19.**

மற்ற நபரைக் குறித்து உண்மையற்ற விஷயங்கள் எதையாகிலும் நாம் கூறுகையில், நாம் முக்கியமானவர்களாகவும், மற்றவரின் கவனத்தை ஈர்க்கின்றவர்களாகவும் கருதப்படலாம். சுத்தமான பொய்யாக இராமல் ஒருவேளை இது கொஞ்சம் மிகைப்படுத்திக் கூறுவதாகக்கூட இருக்கலாம். உண்மையில் அது முழுவதும் உண்மையானதாக இராவிட்டாலும் அது பொய்யே. புறணிகள் சிலவற்றை பேசுவதால் அல்லது ஏதோ ஒன்றைக் குறித்து பழி தூற்றும் விதத்தில் பேசுவதால், மற்றவர்கள் மத்தியில் நமக்குக் கிடைக்கும் சிறிதளவு கவனம் என்பது (கவனத்திற்குரியவர்களாகுதல்) நாம் பல மணி நேரங்கள் அடையவிருக்கும் குற்ற உணர்ச்சிகள் மற்றும் நாம் பேசினது தவறானது என்று நாம் அறிந்து கொண்டதற்கு முன்பாக, ஒன்றும் இல்லை.

யாத்திராகமம் 20:16.

## மார்ச் 3

**"சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதலை" தேவன் வெறுக்கிறார்." – நீதிமொழிகள் 6:16–19.**

இந்த வேத வாக்கியம் சபையிலுள்ள நம்முடைய சகோதரர்களுக்கோ அல்லது நம்முடைய குடும்பத்தினருக்கோ பொருந்தக்கூடும். விரோதத்தை விதைப்பது தேவனுக்குப் பிரியமாய் இராத சண்டை மற்றும் மகிழ்ச்சியின்மையை உண்டாகச் செய்யும். மற்றவருடைய குற்றத்தைக் குறிப்பாக சுட்டிக்காட்டுவதைப் பார்க்கிலும், அன்புக்கு ஒரு உதாரணமாக இருந்து மற்றவருடைய நலனுக்காக பிராயாசப்படுகிறவர்களோடு நம்முடைய நேரத்தை செலவிடுவது சிறந்ததாகும்.

பிலிப்பியர் 2:14.

## மார்ச் 4

**"யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றான்." மாற்கு 1:14,15.**

யோவான் ஸ்நானனின் ஊழியம் தங்கள் இரட்சகரை ஏற்றுக்கொள்ள இஸ்ரயேல் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதாக இருந்தது. யோவான் ஸ்நானன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, இயேசு வரவிருக்கும் தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், மேலான அழைப்பு அல்லது பரத்திற்குரிய வெகுமதியை சுகந்தரிக்கும் வழியை திறந்து வைக்கவும், தமது ஊழியத்தைத் துவக்கினார்.

யோவான் 1:29.

## மார்ச் 5

**"அப்பொழுது அவர் பன்னிரெண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், . . . அவர்களை ஏற்படுத்தினார்." மாற்கு 3:14.**

இயேசுவின் அப்போஸ்தலர்களாகும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பேரானவர்கள் யாரெனில்: சீமோன் பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா, பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன் மற்றும் யூதாஸ்காரியோத் என்பவர்களே. பின்னர் பவுல் தகுதியில்லாத யூதாசுக்குப் பதிலாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார். இந்த அப்போஸ்தலர்கள் மரித்தபின்பு, அவர்களுக்கு பதிலாக வேறொருவரும் அவர்களுடைய ஸ்தானத்திற்கு ஒருபோதும் நியமிக்கப்படவில்லை.

லூக்கா 6:13–16.

## மார்ச் 6

**"நீங்கள் . . . கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்." எபேசியர் 5:15,17.**

நம் மீதான தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்வதற்கு, அவருடைய வார்த்தையின் மீதான தொடர்ச்சியான ஆராய்ச்சியும், சத்தியம் மற்றும் நீதியோடு முழு இசைவாயிருந்து, இருதயத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நன்கு அறிந்துணரும் மனப்பான்மையும் இருக்க வேண்டும். உண்மை மற்றும் பொய், நீதி மற்றும் அநீதிக்கு இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்வதற்கு நாம் தவித்துக் கொண்டிருக்கும்போது, நாம் ஜெபத்தின் மூலம் தேவனுடைய உதவியை நாட வேண்டும்.

லூக்கா 12:34.

## மார்ச் 7

**"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." நீதிமொழிகள் 4:23.**

மாம்சீக மற்றும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு இருதயமே மையமாக இருக்கிறது. அது வேலை செய்வது நிறுத்தப்பட்டால் மரணமே பின் தொடரும். இருதயம் நம்முடைய சித்தம் மற்றும் அன்புணர்வுகளை அடையாளப்படுத்துகிறது. நாம் அன்பில் அனல் உள்ளவர்களாகவும், தேவனுடைய சித்தத்திற்கு இசைவாய் உள்ள எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் அபிவிருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும். ஜீவஊற்று குறித்த விஷயத்தில் நம்முடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகள் இருதயத்தினால் காக்கப்பட்டும், ஏவப்பட்டும் வருகின்றது.

எபிரெயர் 2:7,8.

## மார்ச் 8

**"கர்த்தர்: நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். என்று திருவுளம்பற்றுகிறார்."   வெளிப்படுத்தல் 1:8.**

அல்பா என்பது கிரேக்க எழுத்தின் முதல் எழுத்தும், ஒமெகா என்பது கடைசி எழுத்தும் ஆகும். நம்முடைய பரலோகப்பிதாவின் ஒரே நேரடி சிருஷ்டிப்பு லோகோஸ் – இது இயேசுவின் மாம்சத்தில் வருவதற்கு முன்பிருந்த நிலையாகும். தேவன் அவரை சிருஷ்டித்த பின்னர் லோகோஸ் பரலோகப்பிதாவின் வல்லமையினால் அனைத்துக் காரியங்களையும் சிருஷ்டித்தார்.

கொலோசெயர் 1:16,17.

## மார்ச் 9

**"சகலமும் அவர் மூலமாய் (லோகோஸ்) உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."   யோவான் 1:3.**

சர்வ வல்லமையுள்ள தேவன் சகல காரியங்களையும் சிருஷ்டிக்க உதவியாக வார்த்தையை அல்லது லோகோஸைப் பெற்றிருந்தார். இது ஒரு கட்டட கலைஞர் மற்றும் ஒரு சிற்பியைப் போன்று சொல்லப்பட்டுள்ளது. கட்டட கலைஞராகிய தேவன், திட்டங்களை வகுத்து அதற்கு தேவையான வல்லமையைப் பெற்றிருந்தார். லோகோஸாகிய கர்த்தர் இயேசு சிற்பியாக இருந்தார். தேவனுடைய திட்டங்களையும், வல்லமையையும் பயன்படுத்தி, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள சகல காரியங்களையும் சிருஷ்டிக்கும் வேலையை அவர் (இயேசு) செய்தார்.

எபேசியர் 3:9.

## மார்ச் 10

**"இயேசு, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றான்." மத்தேயு 4:19.**

மீன் பிடிப்பது மிகப் பொருத்தமான அடையாளமாயிருக்கிறது. காரணம், இதற்கு ஆற்றல், பொருத்தமான கவர்ந்திழுக்கும் இரை, மீன்களைப் பற்றின அறிவாற்றல் அவசியப்படுகிறது. ஆகையால் மீன் பிடிப்பவர் தம்மைத்தாமே மறைத்துக் கொள்வார். வேதத்தின் மீது ஜனங்களை ஆர்வங் கொள்ளச் செய்வதற்கு நாம் கர்த்தர் இயேசுவின் நன்மையும் நீதியும் கொண்ட உற்சாகப்படுத்தும் செய்தி மற்றும், தேவனுடைய திட்டத்தில் இசைவு மற்றும் நியாயமானவைகளை அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்போது நம்மைநாமே மறைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மாற்கு 1:17.

## மார்ச் 11

**"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்: ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."   1 யோவான் 2:15.**

இது யோவான் 3:16,17–ல் சொல்லப்பட்ட வசனத்துக்கு எதிர்மாறானது போல தோன்றலாம். ஆனால் அங்கு சொல்லப்பட்டுள்ள தேவனுடைய அன்பு, இரக்க மனப்பான்மை கொண்ட அன்பாகும். இது உலகின் ஜனங்கள் மீது நாம் காண்பிப்பதற்கு ஏதுவானதாக இருக்கிறது. " எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யுங்கள் தற்கால உலகத்தின் மீது நமக்கு இருக்கக் கூடாத அன்பு என்னவெனில், தேவனுக்கும் அவருடைய ஆவிக்கும் எதிராக இருக்கும் அதின் ஐக்கியம், அதன் மீதான நாட்டம், அதின் வழிமுறை மீதான விருப்பமும் ஆகும்.

மத்தேயு 6:24.

## மார்ச் 12

**"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்." நீதிமொழிகள் 24:16.**

நாம் ஒரு இலக்கை அடைவதில் வெற்றிப்பெறவில்லையெனில் நாம் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. அநேக ஜனங்கள் முதன்முதலில் தோல்வி அடைவதுண்டு. ஆனால் அவர்கள் நம்பிக்கை இழப்பதில்லை. அவர்கள் தொடந்து முயற்சித்துக் கொண்டே இருப்பார்கள். பிறகு தேவனுடைய உதவியைக் கொண்டு அவர்கள் தங்கள் இலக்கை அடைவார்கள். நம்முடைய குறிக்கோள்கள் நமக்கான தேவனுடைய சித்தத்தோடு இசைவாக இருந்தால், நாம் விழும்போது அவர் நம்மை தூக்கி விடுவார்.

மீகா 7:8.

## மார்ச் 13

**"அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." மாற்கு 1:35.**

இயேசு தம்முடைய பிதாவோடு தொடர்பு கொள்வது, அதாவது அவரிடத்தில் ஜெபிப்பதையும், அவருடைய அன்பான பராமரிப்பை உணர்ந்து கொள்வதையும், அவசியம் என உணர்ந்தார். அதுபோலவே, நாமும் நம்முடைய பரலோகப்பிதாவை தொழுது கொள்ளவும், அவருடைய ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி சொல்லவும் ஒவ்வொரு நாளும் அவருடைய உதவியையும், வழிநடத்துதலையும் கேட்பதற்காகவும் நேரம் நமக்கு அவசியமாக இருக்கின்றது. இயேசு அடிக்கடி ஜெபம் செய்து வந்த செயலானது, நாம் பின்பற்றுவதற்கு ஒரு சிறந்த உதாரணமாக இருக்கின்றது.

நீதிமொழிகள் 15:29.

## மார்ச் 14

**"யோவான், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன் என்றார்." மத்தேயு 3:11.**

யூதர்களுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ள தவறிய யூதர்களுக்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தபோது, அந்த பிரமாணத்திற்கு எதிரான அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட்டுவிட்டதாக எண்ணப்பட்டது. யோவான் கொடுத்த ஞானஸ்நானம் புறஜாதியாருக்கானது அல்ல. ஏனெனில், அவர்கள் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல, ஆகவே அந்த பிரமாணத்துக்கு எதிராக பாவம் செய்ய முடியாது. யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்தவர்களுக்கானதும் அல்ல. இவர்களுடைய ஞானஸ்நானம் மிக வித்தியாசமான ஒரு நோக்கத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. மேலும் இது பிரமாணத்திற்கு விரோதமான அவர்களது பாவங்களைக் கழுவுவதற்காகக் கொடுக்கப்படுவது இல்லை.

அப்போஸ்தலர் 19:4,5.

## மார்ச் 15

**"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்." மத்தேயு 17:5.**

தேவன் இந்த வார்த்தைகளைப் பேசினபோது அவை அவரது நேசக்குமாரனாகிய இயேசுவைக் குறித்து பேசப்பட்டதாகும். "தமது பிதாவினிடத்தில் காண்பித்த உண்மையினிமித்தம்" கர்த்தர் இயேசுவுக்கு இது எப்படிப்பட்ட அருமையான புகழ்ச்சியாக இருந்திருக்கும். நாமும்கூட தேவனை

பிரியப்படுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நாம் அபூரணர் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். ஆனாலும் அவர் நம்முடைய மாம்சத்தின் அபூரண நிலையிலிருந்து பார்க்காமல், நம்முடைய இருதயத்தின் நோக்கங்களையே பார்க்கிறார்.

அப்போஸ்தலர் 3:22.

## மார்ச் 16

**"யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான் அப்பொழுது ஒரு புருஷர் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, . . . அங்கே அவனை ஆசீர்வதித்தார்." ஆதியாகமம் 32:24,29.**

யாக்கோபு விரும்பிய ஆசீர்வாதத்தை அவருக்குக் கொடுக்க தேவன் பிரியப்படவில்லை என நாம் கருதிவிடக்கூடாது. காரணம் என்னவெனில், ஒரு சில காலம் ஆசீர்வதிப்பதை தள்ளிவைப்பதன்மூலம், அதிகமதிப்புமிக்கதாக இருந்து, அவருடைய இருதயத்தில் மாபெரும் பலம் ஏற்படும் என்பதேயாகும். ஆகையால் நாமும் நம்முடைய ஜெபங்களில் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும் பட்சத்தில், நாம் வேண்டிக்கொள்ளும் காரியங்களின் மீதான ஆவலை இழந்துவிடக் கூடாது.

ஏசாயா 30:2.

## மார்ச் 17

**"ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது." யோவான் 10:4.**

ஆடுகள் தங்கள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்து, அவரை பின்பற்றுவது போல, நாமும் நமது மேய்ப்பராகிய இயேசுவின் சத்தத்தை அறிந்து அவரை பின்பற்றுகிறோம். மேய்ப்பன் தன் ஆடுகளை பாதுகாத்து பராமரிப்பது போல இயேசு தம்மை பின்பற்றுகிறவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்."

சங்கீதம் 79:13.

## மார்ச் 18

**"தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான் ?" 1 யோவான் 4:20.**

நாம் காணாதவர்களிடத்தில் அன்பாய் இருக்கிறோம் என்று நாவால் சொல்வது சுலபமான காரியம். ஆனால் நிரந்தரமாக நம்மோடிருக்கும் ஜனங்கள் மீது அக்கறைக் கொண்டு அவர்கள் நலனுக்காக செயல்படுவதில் நம்முடைய அன்பை வெளிக்காட்டுவது மிகக் கடினமான காரியமாகும். அன்பு என்பது ஒரு உணர்வு அல்ல. அன்பு செய்கையாய் இருக்கிறது. அன்பின் நிஜத்தோற்றம் நம்முடைய வார்த்தைகளிலில்லாமல் நம்முடைய நடவடிக்கைகளில் உள்ளது. தேவனிடத்தில் அன்புகூருவதன் ஒரு பகுதி, அவர் நேசிப்பவர்களிடத்தில் நாமும் அன்புகூருவதாகும்.

1 யோவான் 4:21.

## மார்ச் 19

**"இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். " யோவான் 11:45.**

மரணத்திலிருந்து லாசருவை எழும்பச் செய்த இயேசுவின் அற்புதம், குறித்த நேரத்திற்கென்று

திட்டமிட்டு செய்யப்பட்டது. காரணம், அதை அநேகர் கண்டு விசுவாசித்தனர். இருந்தபோதிலும், அந்த மதத் தலைவர்களோ, ஜனங்கள் தங்களிடத்தில் நம்பிக்கைக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தர் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்துவிடுவார்களோ என அச்சம் கொண்டனர். ஆகையால் அந்நேர முதல் அவர்கள் அவரை மரணத்திற்குள்ளாக்க வகைதேடினர்.

யோவான் 2:23.

## மார்ச் 20

**"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது." – யோவான் 1:1,2.**

நீங்கள் எம்பாடிக் டையகலாட்( Emphatic Diaglott) வைத்திருப்பீர்களானால், அதில் வரிகளுக்கிடையே எழுதப்பெற்ற அல்லது இடது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் இவ்வசனத்தை நீங்கள் பார்க்கலாம். இவ்வசனத்தைப் புரிந்துகொள்ளச் செய்வதற்கான அதிகப்படியான வார்த்தைகள்அங்கு கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். கர்த்தர் இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் அல்ல, மாறாக அவர் ஒரு வல்லமையுள்ள தேவன். பூமிக்குரிய தகப்பனும் மகனும் இரண்டு தனிப்பட்ட நபர்களாக இருப்பதுபோலவே, பிதாவாகிய தேவனும் இயேசுவும் இருக்கின்றனர். இருந்தபோதிலும், அவர்கள் நோக்கத்தில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர்.

யோவான் 17:21.

## மார்ச் 21

**"அந்த வார்த்தை மாம்சமாகி, . . . நமக்குள்ளே வாசம்பண்ணினார்." யோவான் 1:14.**

இயேசு இப்பூமிக்கு வந்து பெத்லகேமில் குழந்தையாய் பிறப்பதற்கு முன்புவரை, தமது பிதாவாகிய யேகோவா தேவனோடு பரலோகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர். பரலோகத்தில் அவர் "வார்த்தை" அல்லது பேசுபவர்என்று அர்த்தம் கொள்ளும் லோகோஸ் என அழைக்கப்பட்டு வந்தார். முற்காலத்தில் பெரும்பாலும் இராஜாக்கள் தங்கள் சார்பில் ஜனங்களிடம் பேசுவதற்கு ஒரு விசேஷமான நபரை வைத்திருந்தார்கள். இயேசு தேவனிடத்திலிருந்து மற்றவர்களுக்கு செய்திகளைக் கொடுத்து வந்த தேவனுடைய விசேஷித்த செய்தியாளராக இருந்தார்.

ரோமர் 1:3.

## மார்ச் 22

**"அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்." லூக்கா 2:51.**

இயேசு வெகு சீக்கிரத்திலேயே தமது ஊழியத்தைத் துவங்க ஆவலாக இருந்தார். நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவராக முப்பது வயது ஆகும்வரை அவரால் அவ்வாறு செய்ய இயலாது என்பதைக் கற்றுணர்ந்தபடியால், அவர் தம்முடைய பெற்றொருடன் இல்லத்திற்குச் சென்று விட்டார். இச்சம்பவம் நடந்த தருணத்தில் இயேசுவுக்கு வெறும் பன்னிரண்டு வயதே ஆகியிருந்தது. மேலும் இது, குழந்தைகள் கேள்விகள் கேட்கலாம் எனவும், ஆச்சரியமான மற்றும் ஆற்றல் மிக்க பதில்களை அளிக்க முடியும் என்பதற்கு நமக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.

எபேசியர் 6:1.

## மார்ச் 23

**"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." லூக்கா 2:52.**

யூத சிறுவர்களுக்கான முறைமையின்படி இயேசு ஒவ்வொரு ஓய்வு நாளிலும் தேவாலய கூடுகையில் பங்கு கொண்டுஅங்கு வாசிக்கப்படும் வேதவாக்கியங்களைக் கேட்டார். அவர் பன்னிரெண்டு வயதானபோது, நியாயசாஸ்திரிகள் அவருடைய புரிந்துகொள்ளுதலையும், பதில்களையும் கண்டு ஆச்சரியப்பட்டனர். அவர் பாவத்தினால் கறைப்படாதவராக இருந்தபடியால், ஒரு பூரணமான ஞாபகசக்தியையும், விழிப்புடன், கூடிய சிந்தையையும் பெற்றிருந்தார். மேலும் அவர் தமது நேரத்தை தம்முடைய பரலோகப்பிதாவினுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு அடுத்த காரியங்களில் தம்மால் முடிந்தமட்டும் படிப்பதிலும், கற்றுணர்வதிலும் செலவிட்டார்.

1 சாமுயேல் 2:26.

## மார்ச் 24

**"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. " யோவான் 10:27.**

தம்முடைய பின்னடியார்களாகிய தம்முடைய சீஷர்களைக் குறித்து பேசும்போது, இவைகளே இயேசுவின் வார்த்தைகளாக இருந்தது, அவர் ஒரு நல்ல மேய்ப்பராக இருந்தார் அதை சீஷர்கள் உணர்ந்து, ஆடுகள் தங்கள் தலைவனை பின்பற்றுவதுபோல, அவரை பின்பற்றினார். நாமும் இயேசுவை நம்முடைய மேய்ப்பராக எண்ணி நேசித்து, ஆடுகள் தங்கள் மேய்ப்பனை பின்பற்றுவது போல, அவரை பின்பற்ற முயற்சிக்க வேண்டும்.

சங்கீதம் 23.

## மார்ச் 25

**"உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து." உபாகமம் 5:9.**

தேவன் தம்மைத்தாமே ஓர் எரிச்சலுள்ள தேவன் என்று அழைக்கும்போது, நம்முடைய பிரியம் (அன்பு), நம்பிக்கை பற்று அவருக்கே உரியதாக வேண்டுமென்று அர்த்தம் கொள்கிறார். நம்முடைய வாழ்வில் அவருடைய சித்தத்தையே முக்கியமானதாக பெற்றிருக்க வேண்டும் என அவர் விரும்புகிறார். அவரை பொறுத்தவரையில் இது சுயநலம் வாய்ந்தது அல்ல. ஏனெனில், நம்முடைய ஜீவியத்தில் அவருடைய சித்தம் ஆளுகை செய்ய அனுமதிப்பது, நம்முடைய நடவடிக்கைகள் அனைத்திலும் அதிக மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் நமக்கு கொண்டுவந்து, அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்காக அவர் வைத்திருக்கும் ஆசீர்வாதத்தை அடையும்படி நம்மை சிறந்தவர்களாக தயார்படுத்துகிறது.

யாத்திராகமம் 20:5.

## மார்ச் 26

**"பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு (சீஷர்கள்) அருளப்பட்டது, அவர்களுக்கோ (மக்கள் கூட்டம்) அருளப்படவில்லை." மத்தேயு 13:10,11.**

இயேசு தமது செய்தியை அநேகர் புரிந்துகொள்ளாத விதத்தில் பிரசங்கித்தது ஏன்? அச்சமயத்திலும், இந்த யுகம் முழுவதிலும், தேவனால் எவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டிருக்கிறதோ, அவர்கள் மாத்திரமே இவ்வுலகத்தின் இரட்சிப்புக்கான அவருடைய திட்டத்தை முழுவதும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யமாகிய அடுத்த யுகத்தில், ஒவ்வொருவரும்

புரிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள்.

செப்பனியா 3:19.

## மார்ச் 27

**"அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்." மத்தேயு 8:20.**

இயேசுவிற்கு வீடு என்று சொல்வதற்கு எவ்விடமும் இருக்கவில்லை. ஏனெனில் அவர் இஸ்ரயேல் தேசமெங்கும் பிரயாணம் செய்து, ஜனங்களுக்குப் போதித்து, அவர்களுக்கு நன்மை செய்து வந்தார். அவர் தம்முடைய சொந்த சௌகரியத்தை நாடாமல், தேவனுக்கு கனம் சேர்க்கும் காரியங்கள் எவைளோ, அவைகளையே செய்ய வேண்டுமென விரும்பினார். இந்த விஷயத்தில் அனைவருக்கும் அவர் ஓர் அருமையான மாதிரியாக இருக்கிறார்.

2 கொரிந்தியர் 8:9.

## மார்ச் 28

**"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும், கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் . . . " மாற்கு 9:31.**

இயேசு எந்த பஸ்காவில் தாம் மரணத்திற்கு உட்படுத்தப்படுவார் என்பதை அறிந்திருந்தார். காரணம், அவர் வேதத்தின் தீர்க்கதரிசனங்களை புரிந்திருந்தார். ஒவ்வொரு வருடமும் பஸ்காவின் சமயத்தில் அவர் அதை குறித்ததான ஒரு பாடத்தின் அர்த்தத்தைக் கற்றுக்கொடுத்தார். இந்த சமயத்தில் அவர் தாம் மரணத்திற்கு உட்படுத்தப்படப்போவதையும், மூன்றாம் நாளில் மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வரப்படுவார் என்பதையும் தம்முடைய சீஷர்களிடம் கூறினார்.

1 கொரிந்தியர் 6:14.

## மார்ச் 29

**"உம்முடைய வருகைக்கும் (வந்திருத்தல்) இந்த உலகத்தின் (யுகம்) முடிவுக்கும் அடையாளம் என்ன ? "
மத்தேயு 24:3.**

இந்த வசனத்தில் வருகை என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தைக்கான கிரேக்க பதம் பரொசியா என்பதாகும். இதற்கு "வந்திருத்தல்" என்று பொருள். ஆகவே கேள்வி என்னவெனில், கர்த்தருடைய வந்திருத்தலுக்கான அடையாளம் என்னவாக இருக்கும்? இது சுட்டிக்காட்டுவது என்னவெனில், அவர் வந்திருக்கிறார் என்பதைக் குறித்து அனைவருக்கும் தெளிவாய் காணப்படாது. காரணம், அதை உறுதியாய் தெரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு அடையாளம் தேவைப்படும். இந்த அடையாளங்கள் என்னவென்பதை கர்த்தர் இயேசு இந்த அதிகாரம் முழுவதிலும் தொடர்ந்து கூறுகிறார்.

லூக்கா 21:7.

## மார்ச் 30

**"தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. " 2 கொரிந்தியர் 1:20**

"ஆம்" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டதையும், "மெய்யாகவே","நிச்சயமாகவே" என்றும் அர்த்தம் கொடுக்கிறது. "ஆமென்" என்ற வார்த்தை "நிலையான" அல்லது "நம்பத்தகுந்த" "நிச்சயமாக" அல்லது "அப்படியே ஆகக்கடவது" என்று அர்த்தம் கொடுக்கிறது. இந்த இரண்டு வார்த்தைகளும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் முற்றிலும் உண்மையானது என்றும், நிலையானது என்றும், தடுமாற்றமோ, நிச்சயமற்றதாகவோ இராமல் நிறைவேறுதலின் நிச்சயம் கொண்டது என்றும் நமக்கு சொல்கிறது. இதன் பொருள் என்னவெனில், நாம் எப்பொழுதும் அவரிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்பதேயாகும்.

ஏசாயா 55:11.

## மார்ச் 31

**“வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது” –சங்கீதம் 19:1**

வானத்தின் சத்துவங்கள் தங்கள் எண்ணிலடங்கா எண்ணிக்கையிலும், விண்மீன் கூட்டங்களில் ஒழுங்குடன் கூட்டப்பட்டு, தொடர்ந்து இன்றுவரை ஒன்றோடொன்று சேர்ந்து மோதாமலும், பரிபூரண இசைவுடனும் பிரமாண்டமான அளவினாலும் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. இவையனைத்தும் ஞானமுள்ள ஒரு சிருஷ்டிகரைக் குறித்து பேசுகிறது. பகல் மற்றும் இரவு நேரங்களில் வானங்களில் தோன்றும் ஆச்சரியமான காட்சியானது, சர்வ லோகத்துக்கும் தேவனாகிய உன்னதமானவரிடத்தில் நம்முடைய இருதயங்களில் பரிசுத்தமும், பயபக்திக்குரிய தத்தம் செய்தலை எழுச்சியூட்டக்கூடியதாக இருக்கும்.

## ஏப்ரல் 1

**“இயேசு, ஆவியினாலே வனாந்தரத்திற்கு கொண்டுபோகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்” – லூக்கா 4 : 1–2**

இயேசு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டபின்பு, தாம் பூமிக்கு அனுப்பப்பட வேண்டியதற்கான தேவனுடைய நோக்கத்தை அவரால் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது. இயேசு தமது பசியை திருப்தி செய்து கொள்வதற்கும், மரணத்துக்கு உட்படாமல் இப்பூமியை ஆளுகை செய்வதற்கும், இவர் தேவனுடைய குமாரன் என்பதை ஒரு விறுவிறுப்பான முறையைப் பயன்படுத்தி, ஜனங்களுக்கு காண்பிக்கும்படி, தேவனுடைய வல்லமையை சுயநல நோக்கத்திற்காக பயன்படுத்தும்படி சாத்தான் அவரை சோதித்தான். ஆகையால், சாத்தான் அவரை விட்டு ஓடிப்போனான்.

எபிரெயர் 2 : 8

## ஏப்ரல் 2

**அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறினார் – மத்தேயு14:23**

இயேசு, திரளான ஜனங்கள் போஷிக்கப்படும்படி ஏற்பாடு செய்தார். அதன் பின்பு, அவர் தம்முடைய பரலோகப் பிதாவிடம் ஜெபம் அமைதலான ஒரு இடத்திற்கு தனிமையாக சென்றார். இயேசு, தம்முடைய பிதாவை மிகவும் நேசித்தார். அவரிடம் அடிக்கடி ஜெபமும் பண்ணினார். மேலும், தேவனும், இயேசுவை

மிகவும் நேசித்து, அவரை தம்முடைய நேசகுமாரன் என்று அழைத்தார். ஜனங்களை சுகப்படுத்தவும், அவர்களுக்கு போதிக்கவும், தேவன் அவருக்கு பெலனையும், வல்லமையையும் கொடுத்தார். கர்த்தரும், நம்முடைய ஜெபங்களுக்கான பதிலாக நமக்கு பெலனையும், வழிநடத்துதலையும் கொடுக்கின்றார்.

லூக்கா 6 : 16

## ஏப்ரல் 3

**"அவர் அவர்களை நோக்கி, வனாந்தரமான ஒரு இடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்" – மாற்கு 6 : 31**

அப்போஸ்தலர், இஸ்ரயேலின் சகல கிராமங்களிலும் இராஜ்யத்தின் நற்செய்திகளைக்கூறி, ஜனங்களுக்குப் போதிக்கவும், அவர்களுக்கு உதவி செய்யவும், விசேஷமாக தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். இயேசு, அவர்கள் சோர்வடைந்திருந்ததை அறிந்தபடியால், அவர்கள் இளைப்பாறுவதற்கென்று அமைதலான ஓரிடத்திற்குச் செல்லும்படி அவர்களிடம் கூறினார். இயேசு எவ்வளவு தயவும் அக்கறையும் உள்ளவராக இருந்தார் பிறரிடத்திலான தயவு மற்றும் அக்கறைக்கான இயேசுவின் முன்மாதிரியை நாம் பின்பற்ற முயற்சிக்கையில் நம் எல்லாருக்கும் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பவைகள் எவைகளோ, அவைகளை செய்ய நாம் திராணியுள்ளவர்களாகும்படிக்கு இளைப்பாறுதல் அவசியமாக இருக்கிறது.

மத்தேயு 11: 28

## ஏப்ரல் 4

**"இதோ தேவ ஆட்டுக்குட்டி". – யோவான் 1 : 36**

தேவன், வேதாகமம் எங்கும் அடையாள பாஷையைப் பயப்படுத்துகிறார். இங்கு அவர் இயேசுவை ஒரு ஆட்டுக்குட்டி என அழைக்கின்றார். ஆட்டுக்குட்டிகள் கீழ்ப்படிதலுள்ளவைகளாக இருந்து தங்களை வழிநடத்துவதற்கும், பராமரிப்பதற்கும் தங்களுடைய மேய்ப்பர்களை எதிர்நோக்கி இருக்கும். இயேசு வாழ்ந்தவிதமாகவே நாமும் நம்மால் முடிந்தளவு அப்படிப்பட்ட ஜீவியத்தை ஜீவிக்க முயற்சிபோமாக. அவர் சொல்லிய மற்றும் செய்த காரியங்களிலிருந்து நமக்கான பாடங்களை நாம் எடுத்துக் கொண்டும், அப்போஸ்தலரின் எழுத்துக்கள் மூலம் அவர் நமக்கு கொடுத்த அறிவுரைகளை கற்றுக்கொண்டும், நாம் நம்மையே நோக்காமல் இயேசுவின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

1 பேதுரு 1: 12

## ஏப்ரல் 5

**"மனுஷரால் (ஆதாம்) மரணமுண்டானபடியினால், மனுஷனால், (இயேசு) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." – 1 கொரிந்தியர் 15 : 21, 22**

பாவமும் மரணமும் ஆதாமினுடைய கீழ்ப்படியாமையின் காரணமாக மனுக்குலத்திற்கு வந்தது. மரணம் என்பது ஒரு நண்பன் அல்ல, ஒரு சத்துரு ஆகும். நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் மூலம் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் காரணமாக, சகல ஜனங்களும் ஏற்றக்காலத்தில் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார்கள்.

யோவான் 11 : 25.

## ஏப்ரல் 6

**"கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் (தாவீது) தேடி" – 1 சாமுயேல் 13 : 14**

தாவீது, பெலவீனங்கள் மற்றும் பூரணமற்ற தன்மைகள் கொண்ட குணநலன்களைப் பெற்றிருந்தவராக இருந்தாலும், அவருடைய இருதயமோ தேவனுக்கு ஊழியம் செய்யவும், அவரை மகிமைப்படுத்தவும் வாஞ்சித்தது. அவர் சில கடுமையான தவறுகள் செய்தபோது, அவைகளுக்காக அவர் மனஸ்தாபப்பட்டு, முழு இருதயத்தோடும் மனம்மாறி, தேவனுடைய உயர்ந்த நிறைவான கொள்கைகளுக்கு ஏற்றவாறு ஜீவிக்க முயற்சித்தார். தாவீது எழுதின அநேக சங்கீதங்களில் கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கறிார், வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது என்பவைகள் அவருடைய வார்த்தைகளாகும்.

அப்போஸ்தலர் 13 : 22

## ஏப்ரல் 7

**“பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் (கனப்படுத்தினேன்) நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளை செய்து முடித்தேன்.” –யோவான்17:4**

இயேசு, அற்புதங்கள் வாயிலாகவும், சத்தியத்தின் வாயிலாகவும் தேவனுடைய வல்லமை மற்றும் காருணியத்தை ஜனங்களுக்குக் காண்பித்தார். அவர் தமக்கென்று சில நூற்றுக்கணக்கானோரை சேர்த்துக் கொண்டு, அவர்களுக்கு தேவனுடைய மகத்துவங்களை சாட்சி பகர்ந்தார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் இழந்த பரிபூரண ஜீவனை மீட்டுத்தர, ஒரு சரிநிகர் சமான விலையாக, ஒரு ஈடாக தம்முடைய மாம்சீக ஜீவனைக் கொடுப்பதற்கு அதுவே தருணம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

யோவான் 19 : 30

## ஏப்ரல் 8

**“..பயப்படாதிருங்கள்: சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை தேடுகிறீர்கள் என்று அறிவேன் அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்” –மத்தேயு 28 : 5, 6**

இயேசு, தாம் மரிக்க இருப்பதையும், பின்பு உயிர்த்தெழுப்பப்பட போவதையும் தம்முடைய சீஷர்களுக்கும், நண்பர்களுக்கும் பலவிதங்களில் சொல்லியிருந்த போதிலும், அவர்கள் அதை புரிந்துக்கொள்ளவில்லை. காரணம், அக்காலத்தில் அவர் யூதர்களை ஆளுகை செய்வார் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். அதுவரையிலும் அவர்கள் தேவனுடைய திட்டத்தையும் அல்லது கீழ்ப்படியாமையினாலே ஆதாம் இழந்துபோன பரிபூரண ஜீவனை மீட்டுத்தர வேண்டும் என்ற முக்கியமான நோக்கத்திற்காகவே இயேசு பூமிக்கு வந்திருந்தார் என்ற உண்மையையும் புரிந்துகொள்ளாதிருந்தார்கள்.

மத்தேயு 17 : 23

## ஏப்ரல் 9

**“ மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” எசேக்கியேல் 18 : 32**

சகல ஜனங்களும் பிழைத்திருக்கவே தேவன் விரும்புகிறார். அதனாலேயே அவர் இயேசுவை அனுப்பினார். அதனாலேயே, மரணத்திலிருந்து ஒரு உயிர்த்தெழுதலை திட்டமும் பண்ணினார். அக்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட இருதயமும், தேவனிடத்தில் முறையான ஆவியும், தேவனிடத்திற்கு முழு கீழ்ப்படிதலுமே எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலும் இவைகளை நிறைவேற்றுவதற்கு அவரிடத்திலிருந்து வரும் உதவி சகலருக்கும் அளிக்கப்படும்.

1 தீமோத்தேயு 2 : 4

## ஏப்ரல் 10

**"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, ..நான் மறுபடியும் வருவேன் .." – யோவான் 14 : 3**

இயேசு, தம்முடைய பிதாவோடு இருக்கும்படி பரலோகத்திற்கு திரும்பிச் செல்ல வேண்டுமென்றும், ஆனாலும் தம்முடைய இராஜ்யத்தை ஆயத்தப்படுத்துவதற்குத் திரும்பிவருவேன் என்றும் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். இது, அவர் மீண்டும் மனிதனாக வருவார் என பொருள்படுவதில்லை. ஏன்னென்றால், அவர் உலகத்திற்காக தம்முடைய மாம்சத்தை அல்லது மாம்சீக ஜீவனைக் கொடுத்துவிட்டார். இனி அவர் நித்தியத்திற்கும் ஒரு ஆவியின் ஜீவியாக இருந்துஅந்நிலையில் பிதாவின் திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்துவார்.

1கொரிந்தியர் 2 : 9

## ஏப்ரல் 11

**"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." எபிரெயர் 12 : 3**

தேவனுடைய குமாரனாகிய இயேசு, பூரணராக இருந்தும், அநேக பொல்லாத ஜனங்களால் எதிர்க்கப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டவராகவும் இருந்தார் என்பதை கவனமாக சிந்திப்போமாக. ஆயினும் அவர் தம்மை எதிர்த்தவர்களிடம் எல்லா சூழ்நிலையிலும் தயவாயும், பெருந்தன்மையோடும் நடந்து கொண்டார். அவர் நன்மை செய்யவும், பொறுமையாய் இருக்கவும் ஒருபோதும் சோர்ந்து போகவில்லை. நமக்கு இது எப்பேர்ப்பட்ட முன்மாதிரிகை.

கலாத்தியர் 6 : 9

## ஏப்ரல் 12

**" நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." யோவான் 17 : 21**

இயேசு, தம்முடைய பின்னடியார்கள் ஒரே ஆவி உடையவர்களாகவும், ஒரே இலக்கை வைத்து வேலை செய்கிறவர்களாகவும், தாமும், தம்முடைய பிதாவும் கொண்டிருந்த அதே இருதயத்தின் விருப்பங்களைக் கொண்டவர்களாகும்படி விண்ணப்பம் பண்ணினார். இந்த வேதவாக்கியம் இயேசுவானாவர், தேவனுடைய நேசகுமாரன் என்றும், அவர் தேவன் அல்ல என்றும் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. ஒன்றாயிருக்கவும் என்ற வார்த்தைக்குப் பதிலாக நாம் இங்கு ஒத்த நிலையில் எனற் வார்த்தையை பயன்படுத்துவோமாகில், இவ்வாக்கியத்தின் பொருள் தெளிவாய் இருக்கும். தேவனும் இயேசுவும் தங்களுடைய சிந்தை மற்றும் நோக்கங்களில் ஒத்தநிலையில் இருப்பது போல், நாமும் அவர்களை போன்று இருக்க வேண்டும்.

யோவான் 10 : 38

## ஏப்ரல் 13

**"அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலை பார்த்து : இரையாதே, அமைதலாயிரு என்றார், அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று" – மாற்கு 4 : 39**

இயேசுவும் தம்முடைய சீஷர்களும் ஒரு படகில் கலிலேயே கடலை கடக்கும்போது, திடீரென்று பலத்த காற்று வீசிற்று. சீஷர்கள் பயந்தனர். இயேசு காற்றையும், கடலையும் பார்த்து: அமைதலாயிரு என்றார். அதற்கு அவைகள் கீழ்ப்படிந்தன. இச்சம்பவம், இயேசு, வர இருக்கும் தம்முடைய இராஜ்யத்தில்

எல்லா உபத்திரவங்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதை அடையாளப்படுத்துகிறது. அதாவது, அப்பொழுது யுத்தங்களும், சுகவீனங்களும் அல்லது துக்கங்களும் இருப்பதில்லை என்பதை சித்தரிக்கின்றது.

சங்கீதம் 89 : 9

## ஏப்ரல் 14

**"ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" –யோவான் 12 : 13**

திரளான யூதர்கள், இயேசு தங்களுக்கு இராஜவாக இருப்பார் என நினைத்து களிக்கூர்ந்தனர். ஆனால், முதலில் அவர் மரிக்க வேண்டும் என்றும் பின்பு, மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், அவருடைய சமாதானத்தின் இராஜ்யம் அநேக நூற்றாண்டுகளுக்கு வராது என்பதையும், அவர்கள் புரிந்துகொள்ளாதிருந்தனர், எனினும், மெய்யாகவே இயேசு இராஜவாக: யூதர்களுக்கு மட்டும் அல்லாமல், பூமியின் சகல ஜனங்களுக்கும் இராஜாவாக இருக்கும்போது, அனைவரும் இருதய பூர்வமாக மகிழ்ந்து களிகூறுவார்கள். இதனாலேயே கிறிஸ்தவர்கள், உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கின்றனர்.

சங்கீதம் 72 : 17

## ஏப்ரல் 15

**" மனுஷன் எதை விதைக்கிறானோ (செடிகள்), அதையே அறுப்பான் (சேகரிப்பான்)" – கலாத்தியர் 6 : 7**

இந்த யுகத்தில், ஓர் அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவின் ஒவ்வொரு எண்ணமும், வார்த்தையும் அல்லது செய்கையும் அவன் பரலோக பலனாகிய நித்தியஜீவனைப் பெறுவதற்கு பாத்திரவானா அல்லது இல்லையா என்பதை நிர்ணயிக்கின்றது. ஒரு மனுஷன் பரீட்சைக் காலமாகிய தன்னுடைய ஜீவிய காலத்தில் எதை விதைக்கிறானோ, அதே குணநலன்களையே அறுக்கிறான். அதாவது ஓர் அன்பான குணலட்சணமோ அல்லது அற்பமான குணலட்சணமோ அறுக்கப்படலாம். ஓர் இரக்கமுள்ள குணலட்சணமோ அல்லது பொறாமையுள்ள குணலட்சணமோ அறுக்கப்படலாம்.

நீதிமொழிகள் 11 : 18

## ஏப்ரல் 16

**"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்கு செய்ததுபோல, நீங்களும் செய்யும்படி அவர்களுக்கு மாதிரியை காண்பித்தேன்." யோவான் 13 : 14, 15**

அப்போஸ்தலருடைய நாட்களில், பெரும்பாலான ஜனங்கள் வார் செருப்பு அணிந்து நடைப்பயணம் செய்தபடியினால், விருந்தினரின் பாதங்களைக் கழுவுவது விருந்தோம்பலாகக் கருதப்பட்டது. வழக்கமாக, வேலைக்காரர் இந்த பணியை நிறைவேற்றுவர். இயேசு தாழ்மைக்குரிய ஒரு பாடத்தை நமக்கு கற்றுக்கொடுக்க இந்த மரபு வழக்கத்தை பயன்படுத்தினார். ஜீவியத்தின் மிக அற்பமான நடவடிக்கைகள் கூட நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் செய்வதை ஒரு சிலாக்கியமாக நாம் கருத வேண்டும்.

ரோமர் 12 : 10

## ஏப்ரல் 17

**"பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்." யோவான் 17 : 5**

பூமியானது சிருஷ்டிக்கப்படும் முன்பே, இயேசு லோகோஸாக பிதாவோடு இருந்தார். அவர்கள் ஓர் அருமையான தனிப்பட்ட உறவைக் கொண்டிருந்தனர். தேவன், இயேசுவுக்கு அதிகப்படியான கூடுதல் மகிமைகளை வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்ததை அறிந்திருந்தாலும், முன்பிருந்த அதே நெருங்கிய உறவு முறையை திரும்பக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

நீதிமொழிகள் 8 : 2, 3

## ஏப்ரல் 18

**"மனுஷக் குமாரன் மனுஷன் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார், அவர்கள் அவரை கொலை செய்வார்கள் ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார்". மத்தேயு 17 : 22, 23**

இயேசு, தாம் மரிக்கப்போவதையும், பின்பு மூன்றாம் நாளில் ஜீவனோடு எழுப்பப்படுவதையும் அநேகந்தரம் தம்முடைய சீஷர்களுக்கு சொல்லியிருந்த போதிலும் அவர் கொலை செய்யப்பட்ட போது அவர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். அதன் பின்பு அவர்கள் தேவனிடத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலமாக, இயேசு ஆதாமுக்கும் மனுக்குலம் அனைவருக்காகவும் ஏன் மீட்கும் பொருளாக மரிக்க வேண்டியிருந்தது என்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

லூக்கா 18 : 33

## ஏப்ரல் 19

**"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார்"– 1 கொரிந்தியர் 5 : 7**

இயேசு, திராட்சரசத்தையும், புளிப்பில்லா அப்பத்தையும் எடுத்து, என்னை நினைவுக்கூரும்படி இதை செய்யுங்கள் என்றார். அவர், அப்பத்தை எடுத்து அதை பிட்டு, இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கிறதை நினைவுகூறுங்கள் என்றார். பின்பு, அவர் பாத்திரத்தை எடுத்து, இது உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறதை நினைவுகூறுங்கள் என்றார். இதனாலேயே இயேசுவின் பின்னடியார்கள், ஒவ்வொரு வருடமும் நினைவுகூருவதற்காக கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்கின்றனர்.ஏசாயா 53 : 7

## ஏப்ரல் 20

**"ஒருவன் தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை". யோவான் 15 : 13**

இயேசுவின் சிநேகிதர் அனைவரும் மனுக்குல சந்ததியினரே. இயேசு பரலோகத்தில் தாம் பெற்றிருந்த அனைத்தையும் விட்டுவிட்டு (இயேசு தாம் பரலோகத்தில் பெற்றிருந்த அனைத்தையும் விட்டுவிட ஒப்புதல் அளித்ததோடு, குழந்தையாக பிறப்பதற்கேற்ற, சுபாவங்களை அடைந்து பெத்லகேமில் பிறந்தார்). அவர் மனித ஜீவியாக மாறவும், ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமையின் மூலமாக ஆதாம் இழந்த ஜீவனுக்காக விலைக்கொடுக்க, தம்முடைய பரிபூரண மாம்சீக ஜீவனை முழுமனதோடு கொடுக்கவும் ஒப்புக்கொண்டார்.

எபேசியர் 5 : 2

## ஏப்ரல் 21

**" அவர் குமாரானாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு". எபிரேயர் 5 : 8**

மாம்சத்தில் வருவதற்கு முன் இருந்த நிலையில் இயேசு, எப்போதும் கீழ்ப்படிந்திருந்தது, நித்தமும் பிதாவின் மனமகிழ்ச்சியாயிரந்தார். நீதிமொழிகள் 8 : 30. ஆனால் இப்பொழுதோ சாதகமற்ற சூழ்நிலைகளில் கீழ்ப்படிதலுடன் இருப்பது எப்படி என்றும், அவர் கற்க வேண்டியிருந்தது. மேலும் அவர் தம்முடைய சத்துருக்களுடைய எதிர்ப்பின் மத்தியிலும் முழுமையான கீழ்ப்படிதலின் மூலமாக பிதாவினுடைய சித்தத்தை செய்வதில் அவருடைய உண்மையை நிரூபித்தார். அவருக்கு பாடுகள் வந்ததினிமித்தம் நாம் அவரை பாவி என்று கருதக்கூடாது. மாறாக அவருடைய பாடுகள் அவருடைய உண்மைக்கான பரீட்சையாகவே இருந்தது.

பிலிப்பியர் 2 : 8

## ஏப்ரல் 22

**"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்". அப்போஸ்தலர் 4 : 12**

இயேசு, ஒருவரே இரட்சிப்பை அளித்தவர். ஆனால் நாம் எதிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா ? எரி நரகத்தின் நித்திய வாதையிலிருந்து நாம் இரட்சிக்கப்பட்டுள்ளதாக சிலர் கருதுகின்றனர். தேவன் ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையின் தேவன் என்பதை புரிந்துகொள்வதன் மூலம் நாம் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் உணருகிறோம். நம்முடைய இரட்சகராகிய இயேசு எல்லா ஜனங்களும் நித்தியஜீவனை சுதந்தரிக்க ஏதுவாகும்படி செய்திருக்கிறார்.

மத்தேயு 1: 21

## ஏப்ரல் 23

**"கிறிஸ்துவும் . . . மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." 1 பேதுரு 3 : 18**

இயேசு, ஒரு மாம்ச ஜீவியாக கொலையுண்டார், ஆனால் ஓர் ஆவியின் ஜீவியாக மீண்டும் ஜீவனுக்குக் கொண்டு வரப்பட்டார். மாம்சமாகிய பூமிக்குரிய சரீரம், உலகத்தின் சார்பாக பலியிடப்பட்டு மரணத்தை தழுவியது. உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே (யோவான் 6 : 51). ஒரு தெய்வீக ஆவிக்குரிய ஜீவியாக, தூதர்களுக்கும் மேலாக உயர்ந்தவராக என்றென்றும் நிலைத்திருப்பார்.

லூக்கா 24 : 7

## ஏப்ரல் 24

**"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது." – 1 தீமோத்தேயு 2:6**

தேவனுடைய பிரமாணம் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், ஜீவனுக்கு ஜீவன் என்று துல்லியமாக உள்ளது. (உபாகமம் 19:21) தேவனுக்குக் கீழ்ப்படியாத ஆதாமுக்கு, சரி நிகராக ஒரு பரிபூரண மாம்சீக ஜீவன் கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தது. இந்த ஜீவன் ஒரு பாவியினுடைய ஜீவன் போன்றோ அல்லது உங்களையும் என்னையும் போன்று தவறுகள் செய்யக்கூடிய யாராவது ஒருவரைப்போன்றோ இருக்கக்கூடாது. இந்த ஜீவன் ஒரு தூதனுடையதாகவும் இருக்கக்கூடாது. ஆதாம் பாவம் செய்வதற்கு முன் இருந்த பரிபூரண மனிதனைப் போன்று இருக்க வேண்டும். இயேசுவே இந்த பரிபூரண மனிதனாவார்.

மத்தேயு 20:28

## ஏப்ரல் 25

**“ஏன் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர்” – அப்போஸ்தலர் 2:27, 31**

இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து, தீர்க்கதரிசியாகிய தாவீது இந்த வார்த்தைகளை எழுதினார். அவைகளின் அர்த்தம் என்ன ? இயேசுவின், “ஆத்துமா” என்பது, ஜீவி, அவருடைய ஜீவன் என்று பொருள்படுகிறது. மேலும் வேதாகமம் “நரகம்” என்பது கல்லறை அல்லது மரண நிலை என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இயேசு, கல்லறைக்குள்ளாகவே இருக்க வேண்டியதில்லை. மாறாக மூன்று நாட்களில், மரண நிலையிலிருந்து எழுப்பப்பட வேண்டியவராக இருந்தார்.

சங்கீதம் 16:10

## ஏப்ரல் 26

**"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” – யோவான் 3 : 16**

தேவன் தம்முடைய நேச குமாரனை உலக ஜனங்களின் மீட்பராக அல்லது இரட்சகராக அனுப்பியதன் மூலமாக, அவர்களுக்காக அவர் கொண்டிருக்கும் அதிகப்படியான அன்பை தெரியப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் தற்போது இயேசுவில் விசுவாசம் வைத்து அவருடைய எடுத்துக்காட்டைப் பின்பற்ற தங்களால் இயன்றதை செய்கின்றனர். வர இருக்கும் ஆயிரவருட யுகத்தில், முழு உலகமும் அவரை விசுவாசித்து, நித்திய ஜீவனை சுதந்தரிக்கும் வாய்ப்பை பெறுவார்கள்.

ரோமர் 5 : 8

## ஏப்ரல் 27

**“அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு .. வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்”**
**– அப்போஸ்தலர் 2 : 1–4**

இயேசு சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியை அனுப்பின போது, அநேக இடங்களிலிருந்து (டுயனேள) வந்திருந்த ஜனங்களுக்குப் போதிக்கும்படியாக அந்நிய பாஷைகளைப் பேச அவர்களால் முடிந்தது. இயேசு அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த அநேகக் காரியங்களையும் அவர்களால் மிகத் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது. சில காரியங்கள், ஆவிக்குரிய பிரகாரமாகப் புரிந்துகொள்ள வேண்டியதாக உள்ளது. ஆகையால் அவர்களுடைய சிந்தனைகள் அறிவூட்டப்பட அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வது அவசியமாக இருந்தது.

2 கொரிந்தியர் 12 : 10

## ஏப்ரல் 28

**“மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது” – அப்போஸ்தலர் 5 : 29**

பிரதான ஆசாரியனும், யூதர்களின் தலைவர்களும், இனி இயேசுவின் நாமத்திலே பிரசங்கிக்க அப்போஸ்தலர்களை தடை செய்தனர். ஆனால் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும், இராஜ்யத்தில் அவர்களும் மற்ற எல்லா ஜனங்களும் ஜீவன் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்தார் என்று காரியத்தைக் குறித்து அவர்களால் முடிந்த அளவு எத்தனை ஜனத்திற்கு சொல்லமுடியுமோ அத்தனை பேருக்கும் சொல்வதே தேவனுடைய சித்தமாக இருந்ததை அறிந்திருந்தனர். ஆகையால் அப்போஸ்தலர்கள் தாங்கள் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என தைரியமாக யூதர்களின் தலைவர்களிடம் கூறினார். தாங்கள் சரியென அறிந்திருந்தவைகளைச் செய்ய அவர்கள் அஞ்சவில்லை.

1தெசலோனிக்கேயர் 2:4

## ஏப்ரல் 29

**"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்".**

**–**

**மத்தேயு 28:20**

சீஷர்கள் தங்களுடைய அன்புக்குரிய போதகர்(Master) சிலுவையில் கொலை செய்யப்பட்ட போது மிகவும் வேதனைக்குள்ளாயினர், கவலையும் அடைந்தனர். ஆரம்பத்தில் அவர்கள் இது உலக மனுக்குலத்தின் மீட்பிற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி என்பதை உணராதிருந்தனர். அவர்கள், அவரை நித்தியத்துக்குமாக இழந்துவிட்டதாக எண்ணினர். என்றாலும், அவர் உயிர்தெழுந்து வந்த பின்பு, இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தத்தை அவர்களுக்குக் கொடுத்தார். நாம் இந்த யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வாக்குத்தத்தம் நமக்கும் பொருந்தக்கூடியதாயிருக்கிறது.

எபிரேயர் 13:5

## ஏப்ரல் 30

**"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறா".**
**– லூக்கா 12 : 32**

இயேசு தமது சீஷர்களை சிறுமந்தை என்று அழைக்கிறார். ஏனெனில், அவருடைய பின்னடியார்களாகிய உண்மை கிறிஸ்தவர்கள் சொற்ப எண்ணிக்கையில் காணப்பட்டனர். ஏன் சிறுமந்தை பயப்படக்கூடாதா? ஏனெனில், அவருடைய அன்பின் பரலோகப் பிதாவானவர் அவர்களுக்காக ஒரு அற்புதமான திட்டம் வைத்திருக்கின்றார். மேலும், அவர் அவர்களுக்கு உதவி செய்ய எப்பொழுதும் தயாராக இருக்கின்றார். இப்பொழுது அவர்கள் அவருக்கு உண்மையாக ஊழியம் செய்வார்களேயானால், இராஜ்யத்தின் வேலையில் கிறிஸ்துவோடுகூட பங்குள்ளவர்கள் ஆவார்கள். இந்த வேலையானது, மரண நிலையிலிருந்து பூமியின் இலட்சக்கணக்கான மக்கள் அனைவரையும் திரும்பவும் மீட்டுக் கொள்ளும் வேலையாக இருக்கும்.

யாக்கோபு 2:5

## மே 1

**"சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்." – ரோமர் 2 : 7**

சிலர் பொறுமையோடு அழியாமையைத் தேடுகின்றனர். ஆனால் இது நாடித்தேடி முயற்சியால் ஜெயங்கொள்ளக்கூடிய ஒன்று என விளங்குகின்றது. ஆனால், நாம் தற்போது அதைப்பெற்றிருக்கவில்லை. வேதத்தில் அழியாத ஆத்துமா என்ற சொற்றொடர் எங்குமே காணப்படவில்லை என்பது கவனத்தை ஈர்க்கின்றது. நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். (வெளிப்படுத்தல் 3:21)ல் கூறப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே மகிமையாகவும் கனமுள்ளதாகவும் உள்ளது.

2 பேதுரு 1:4

## மே 2

**"பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." – எசேக்கியேல் 18:4**

தேவன், இந்த பூமியின் மூலப்பொருட்களிலிருந்து ஆதாமின் சரீரத்தை உருவாக்கிய போது, அது பரிபூரணமாக இருந்தது. ஆனால், ஜீவனோடு இல்லை. தேவன், அவருடைய நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதும்வரை உணர்வடையவோ, இயங்கவோ (நகர்ந்து செல்லவோ) கூடாதிருந்தார். இவ்விதமாக

அவருடைய சரீரம் உயிரூட்டப்பட்டது. பின்பு ஆதாம் ஜீவாத்துமாவானார். இவ்வாறாக சரீரமும், ஜீவசுவாசமும் ஒருங்கிணையும் போதே ஆத்துமா உருவாக்கப்படுகிறது. சரீரத்திலிருந்து ஜீவ சுவாசம் பிரியும்போது அது ஆத்துமா மரிப்பதற்கு காரணமாய் உள்ளது.

அப்போஸ்தலர் 3 :23

## மே 3

**“என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா: உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக”. – நீதி 23 :26**

இருதயம், அன்பின் மையமாகவும், அடையாளமாகவும் உள்ளது. கண்கள் மனதின் ஜன்னல்– பலகணி என்று அழைக்கப்படுகிறது. நாம் நம்முடைய இருதயம் மற்றும் அன்பை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்த பின்பு, வேத ஆராய்ச்சி மூலம் பரிசுத்த ஆவியினால் நாம் அறிவூட்டப்படும்போது, அது நம்முடைய ஜீவியத்தின் பலிகளை அதிகமாய் கிறிஸ்துவைப் போலவும், அவருக்கு பிரியமாகவும் இருக்கும்படி. அவருடைய வழிநடத்தல்களை பார்க்க அல்லது புரிந்துகொள்ள உதவும்.

எரேமியா 24 : 7

## மே 4

**“கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார் (வருங்கால தேவைக்கான ஏற்பாடு)” – சங்கீதம் 55 : 22**

ஒவ்வொருவரும் தங்களுக்கே உரியதும், தகுந்ததுமான பாரத்தை சுமக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகையில், நம்மால் சுமக்க முடியாத பாரம் வரும் போது கர்த்தர் நமக்கு உதவி செய்வார். இரண்டு பேர்களால் பங்கிட்டு சுமக்கும்போது, பெரும்பாலான சுமைகள் இலகுவாகக் காணப்படும், மேலும் இது தான், நமக்கு வாக்குத்தத்தமாகவும் பண்ணப்பட்டுள்ளது. நம்முடைய பெலத்திற்கு மிஞ்சி நம்முடைய அக்கறையின் சுமை இருக்குமேயானால் தேவன் நமக்கு உதவி செய்வார்.

சங்கீதம் 94 : 22

## மே 5

**“இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனக்குப் பயந்தவனுமாயிருந்தது, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்” – அப்போஸ்தலர் 10 : 1–2**

கொர்நேலியு என்னும் முதல் புறஜாதியான் அல்லது யூதர் அல்லாத இவர், தான் கிறிஸ்துவர் ஆகும்படி அழைக்கப்பட்டிருந்தார். இதற்கு முன் இநத் அழைப்பு யூதர்களுக்கு மட்டுமே அழைக்கப்பட்டிருந்தது. ஆனால், கொர்நேலியுவின் காலம் முதல் இதே வாய்ப்பு புறஜாதிகளுக்குச் சென்றது. கொர்நேலியு எப்பொழுதும் தெடர்ந்து தேவனிடம் ஜெபித்துக் கொண்டிருந்தார். இயேசு அடிக்கடி தேவனிடம் ஜெபம் செய்யபவராக இருந்தார். இதை போல் நாமும் ஜெபிக்கவும், ஜெபம் செய்ய விரும்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

யோசுவா 24 : 1

## மே 6

**“நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்” – பிலிப்பியர் 4 : 11**

விசாரணையை எதிர்நோக்கி ரோமாபுரியின் சிறைச்சாலையில் அப்போஸ்தலர் பவுல் இருந்தபொழுது இந்த வார்த்தைகளை அவர் எழுதினார். அவர் எந்த சூழ்நிலையிலோ அல்லது

சந்தர்ப்பத்திலோ காணப்பட்டாலும் தேவன் தன்னை காப்பார் என்ற மனநிறைவில் காணப்பட்டார். நமக்கு தேவையான அனைத்தும் நம்மிடம் காணப்பட்டாலும், ஜீவியத்திற்கான நன்மைகளை இன்னும் அதிகமாக வேண்டும் என அடிக்கடி வாஞ்சிக்கிறோம். நமக்கு கிடைத்த அனைத்து ஆசீர்வாதங்களையும் எழுதுவதற்கு சில நிமிடங்கள் நாம் எடுத்துகொண்டால், அந்த பட்டியலின் நீளத்தைப் பார்க்கும்போது நாமே ஆச்சரியப்படுவோம்.

1 தீமோத்தேயு 6 : 6

## மே 7

**“நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்”. – யோவான் 9 : 25**

இயேசு தம்முடைய மற்ற அற்புதங்களில் செய்ததுபோலவே, மனுக்குலம் அனைத்தையும் அசீர்வதிக்கும்படியாக பயன்படுத்தப்படப்போகிற தேவனுடைய குணமாக்கும் வல்லமைக்கு ஆதாரமளிக்கும் விதத்தில் குருடனான மனிதனுக்கு பார்வை அளித்தார். தற்போது **. காணும் கண்கள்** என்பது, இயேசுவின் பின்னடியார்களின் ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதல் அல்லது மனக்கண்களின் திறத்தலை உருவகப்படுத்துகின்றது. வரவிருக்கும் இராஜ்யத்தில் இவைகள் சொல்லர்த்தமான குருட்டுத்தனத்தை சொஸ்தப்படுத்துவதையும், அதேசமயம் அனைத்து ஜனங்களின், பார்க்க இயலாத ஆவிக்குரிய குருடான கண்களைத் திறப்பதையும் உருவகப்படுத்துகின்றது.

எபேசியர் 1 : 18

## மே 8

**“கர்த்தர் நல்லவர் இக்கட்டு நாளிலேயே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்”**
**– நாகூம் 1 : 7**

நாம் தேவனிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தால், அவர் நமக்கு பெலன் கொடுத்து, மிகவும் தனிப்பட்ட முறையில் நம்மை அறிகிறவராய் இருப்பார். அவரை நம்முடைய ஜீவியத்தில் அதிகமாய் அனுமதிக்கவும் நம்முடைய நினைவுகள் மற்றும் செயல்பாடுகளை அவர் பால் மையம் கொண்டிருக்கச் செய்யும்போது, அவர் நம்மேல் அதிகமாய் அக்கறை வைத்து, ஒவ்வொரு சிறிய காரியங்களையும் பொறுப்பெடுத்துக் கொள்வார். காரணம், அவர் அப்படியே செய்ய நாம் விரும்புகிறோம். ஆனால், முதலாவதாக நாம் அவரை அனுமதிக்க வேண்டும்

.
சங்கீதம் 18 : 2

## மே 9

**“வழியை நாங்கள் எப்படி அறிவோம்” – யோவான் 14 : 5**

இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். அவராலே அல்லாமல் ஒருவனும் தேவனிடத்தில் வரான் என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகிறது. அதாவது, ஆதாமுக்காக மீட்கும் பொருள் கொடுப்பதற்காக கிறஸ்து சிலுவையில் மரித்தார் என்று அர்த்தம் கொள்கிறது. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமை என்ற பாவத்தை ஆதாம் செய்தார். நாம் தேவனுக்கு பிரியமானவர்களாகும் பொருட்டு இயேசு ஓர் புது வழியை திறந்து வைத்தார். நாம் எப்பொழுதும் இயேசுவின் நாமத்திலேயே ஜெபிக்க வேண்டும். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்.– வேத வாக்கியங்களில் தேடி வழியைக் கண்டுபிடிக்கவும்.

யோவான் 8 : 12

## மே 10

**“ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது”**
**– ரோமர் 4 : 3**

இயேசு பூமிக்கு வருவதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் ஆபிரகாம். இவர் மாபெரும் விசுவாசம் கொண்ட ஓர் மனிதனாக இருந்தார். மேலும், அந்த விசுவாசம் தேவனுக்கு மிகவும் விலையேறப்பெற்றதாக இருந்தது. அது நமக்குள்ளும் இருக்கின்றது. நாம் பரிபூரணர் அல்ல, நாம் தவறுகள் செய்வதுண்டு. மேலும், சில சமயங்களில் நாம் மிகவும் வருத்தம் கொள்ளத்தக்கதான பொல்லாத காரியங்களை செய்வதும் உண்டு. ஆனால், உண்மை கிறிஸ்தவர்களோ நம்முடைய பரலோகத்தின் பிதாவிடம் முழுமையான விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருப்பர். மேலும், அவர் நம்மை அன்புகூருகிறார் என்றும், அவர் எப்போதும் நம்மோடிருக்கிறார் என்றும் அறிந்திருக்கின்றனர்.

ஆதியாகமம் 15 : 6

## மே 11

**மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க. – எபிரெயர் 12 : 1**

தேவனிடத்தில் விசுவாசம் கொண்டு, பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட புருஷர்களும், ஸ்திரீகளுமாகிய இவர்களே இந்த சாட்சிகள். அதாவது, ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, ராகாப், மோசே, தாவீது, தானியேல் மற்றும் பலர். தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பின இவர்கள் முற்பிதாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் அபூர்ணர்களாக இருந்தபோதிலும், தேவனுடைய திட்டத்தை நாம் சிறந்த முறையில் புரிந்துகொள்ளும்படியாக தேவன் அவர்களை எடுத்துக்காட்டுகளாகவும், நிழலாகவும், அடையாளங்களாகவும் பலவழிகளில் உபயோகித்தார்.

2 பேதுரு 1 : 21

## மே 12

**“இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்: அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்: பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” – மத்தேயு 19 : 14**

இராஜ்யத்தில் பங்கடைய விரும்புவோர், தங்கள் பெற்றோரிடத்தில் அன்பும், நம்பிக்கையும். கீழ்ப்படிதலையும் காண்பிக்கும் சிறு பிள்ளைகளைப் போன்று, அன்பானவர்களும், நம்பிக்கையுள்ளவர்களும், கற்க ஆர்வமுள்ளவர்களும், கீழ்ப்படிதலுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். வேலையின் பாரம் அவரை அழுத்திக் கொண்டிருந்த போதிலும், தன்னுடைய பூமிக்குரிய வாழ்வு முடிவை நெருங்கும் வேளையிலும் இயேசுவுக்கு குழந்தைகளோடு செலவழிக்க நேரம் இருந்தது.

2 பேதுரு 4 : 1

## மே 13

**“உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்” – மத்தேயு 20 : 27**

கிறிஸ்துவ சபை, ஒரு தலைவரின் கீழ் மற்றவர்கள் அனைத்து வேலையை செய்யும் முறையைக் கொண்டுள்ள உலக அமைப்புகள் போன்றது அல்ல. சபையில் வழிநடத்துனராக இருக்கும் ஒருவர் வேலைகளை செய்வதன் மூலமும், மற்றவர்களுக்கு அவர்களின் வேத ஆராய்ச்சிகளிலும், அன்றாட ஜீவியத்திலும் உதவி செய்வதன் மூலமும் வழிநடத்த வேண்டும். சபையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் உடன் அங்கங்களுக்கு உதவி செய்ய அவசியம் நேரிடும் பொழுது, அதை செய்ய ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

மத்தேயு 18 : 4

## மே 14

**“நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரம்பைப்பார்க்கிறதென்ன ?” – மத்தேயு 7 : 3**

நம்முடைய சகோதரர்களின் குற்றங்களை குற்றமாக சுட்டிகாட்டுவதற்குப் பதிலாக, நாம் முதலில் நம்முடைய சொந்த குற்றங்களை உணர்ந்து, அவைகளை ஜெயம் கொள்ள முயற்சிக்க வேண்டும். துரும்பு என்பது ஒரு சிறு புள்ளியைப் போன்று இருக்கும். ஆனால் உத்திரம் என்பது, மரத்துண்டின் ஒரு சிறிய துண்டு. இது மற்றவரிடம் விலக்க வேண்டும் என்று நாம் கூறும் குற்றங்களைக் காட்டிலும் நம்முடைய சொந்த குற்றங்கள் மிகவும் ஆபத்தாய் இருக்க வாய்ப்பு உண்டு என்பதை விளக்குகின்றது, அல்லது தெளிவுபடுத்துகின்றது.

மத்தேயு 7 : 1

## மே 15

**“கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்”** – சங்கீதம் 100:1

நாம் மனமகிழ்ச்சியான இன்ப முகங்களைக் கொண்டிருந்து, நம்முடைய குரல்களினாலும். நம்முடைய இருதயங்களிலும் ஆனந்த சத்தம் எழுப்ப முடியும். ஒவ்வொரு நாளும் நம்முடைய கர்த்தர், நமக்கு கொடுக்கும் அனைத்துப் பாடங்களுக்காகவும், ஆசீர்வாதங்களுக்குகாகவும் அவருக்குள் நாம் மகிழ்ந்து களிக்கூருகிறோம். நமக்கு இன்னது தேவை என்பதை அவர் நன்றாய் அறிந்திருக்கிறார் என்பதை நினைவில் கொண்டு, கசப்பிலும், இன்பத்திலும், மழையிலும், வெயிலிலும் நாம் களிகூர்ந்து மகிழ்கிறோம். **அவர் உங்களை விசாரிக்கிறவராய் இருக்கிறார்.1 பேதுரு 5 : 7**

சங்கீதம் 81 : 1

## மே 16

**“மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்: உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்”– 1 கொரிந்தியர் 10 : 13**

அனைத்து மனுக்குலத்திற்கும் உண்டாகும் அனுபவங்கள் போன்று கிறிஸ்வர்களுக்கு இருக்காது என்று இவர்களுக்கு உத்திரவாதம் கொடுக்கப்படவில்லை. ஆனால் நாம் அவரை முழுமையாய் நம்பிக்கை வைக்கும் பட்சத்தில், தப்பித்துக் கொள்ளும்படியான போக்கை ஏற்படுத்துவார் என்றும், நாம் அந்த கடுஞ்சோதனையிலிருந்து ஜெயம் கொள்ளலாம் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுள்ளோம்.

எபிரேயர் 2 : 18

## மே 17

**“ உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறார்.” – யாக்கோபு 4 : 4**

தற்போதைய இந்த உலகம், தேவனுடைய வழிகளுக்கு இசைவாயிராமல் எதிர்மாறாக உள்ளது. ஆகையால், அதிகாரத்தில் இருப்பவர்களோடு சிநேகம் வைத்துக்கொள்ள விரும்புவது, அவர்களுடைய பூலோக வழிகளோடு நாமும் இசைந்தவர்களாய் இருப்பதைக் குறிப்பாய் தெரிவிக்கிறது. தேவனுடைய ஜனங்கள் தங்கள் குடியிருப்பை பரலோகத்தில் பெற்றிருப்பதால், பூமியிலே அவர்கள் யாத்திரிகர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். நாம் தேவனுக்கு உண்மையாய் இருக்கும் பட்சத்தில் இங்கு ஏறக்குறைய அந்நியர்களாகவே இருக்கின்றோம். இன்னும் சில கோணங்களில் பார்க்கும்பொழுது இங்கு பொருத்தம் இல்லாதவர்களாகவே இருக்கின்றோம்.

யோவான் 15 : 19

## மே 18

**“ அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்வுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்”– எபேசியர் 4 : 15**

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் கற்று வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும்போது நம்மால் வேதத்தையும், அதன் ஆச்சரியமான சத்தியத்தையும் அதிகமதிகமாய் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், நம்முடைய ஜீவியத்தில் நாம் கற்றுக்கொண்டவைகளை பயன்படுத்தி கிறிஸ்துவைப்போல் அதிகமதிகமாய் நாம் இருக்கத்தக்கதாக நம்முடைய குணலட்சணங்களை உருவாக்க வேண்டும். வேதாகமம், கிறிஸ்துவை தலையாகவும், சபையை அவருடைய சரீரமாகவும் உருவகப்படுத்தி, அவர்களது நெருக்கமான உறவை உணர்ந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

2 பேதுரு 3 : 18

## மே 19

**“தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்”.**
**– கலாத்தியர் 1 :15, 16**

தேவன், அப்போஸ்தலர் பவுலுக்கு, இயேசு தான் உண்மையிலேயே தம்முடைய நேசகுமாரன் என்றும், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அப்போஸ்தலர் பவுலுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்தினார். அப்போஸ்தலர் பவுல் காலத்தை வீணடிக்காமல், தேவன் தனக்கு அதிகாரம் கொடுத்து செய்யும்படியாகக்கூறின பிரசங்கிக்கும் வேலைக்கு தன்னைத்தானே தயார்ப்படுத்திக்கொள்ள உடனடியாக அவர் அரபு தேசத்திற்குச் சென்றார்.

மத்தேயு 16 : 17

## மே 20

**“இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்: நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்”–** எஸ்தர் 4 : 16

இராஜஸ்திரீயாகிய எஸ்தர் மிகவும் துணிவு மிக்கவர், காரணம், இராஜா தன்னை அழைக்காமல் இருந்த போதிலும் தன்னுடைய ஜீவனை பணயம் வைத்து இராஜாவை அணுகினார். எஸ்தர், தன்னுடைய வேண்டுகோளை தாராளமாய் கூறலாம் என்று இராஜா அவருக்கு குறிப்பால் ,அடையாளத்தால் தெரிவித்தார். ஒரு குறிப்பிட்ட தேதியில், கொல்லப்பட வேண்டியிருந்த தமது ஜனமாகிய இஸ்ரயேல் அனைவருக்காகவும் வேண்டிக் கொண்டார். இவரது வரலாறு, ஆபத்தான சூழ்நிலையில் உண்மையாயிருப்பதற்கும், அதேசமயம் நாம் ஜெபிக்கும்போது, வாய்ப்புகளுக்காக விழித்திருப்பதற்குமான ஒரு பாடமாக இருக்கிறது. அதற்கு பின்வரும் விளைவுகளை கர்த்தரிடத்தில் நாம் விட்டுவிட வேண்டும்.

நீதிமொழிகள் 29:25

## மே 21

**“வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்”. – ஏசாயா 1 : 18**

சத்தியம் என்பது எப்பொழுதும் பகுத்தறிவோடுகூடியதாக இருக்கின்றது. வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் மற்ற பகுதிகளுடன் இசைவுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய திட்டத்தின் சில பாகங்கள், உருவக பாஷையில் கூறப்பட்டிருப்பதினால் அவைகள் மற்றவைகளைக் காட்டிலும் புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமாய் உள்ளது. மற்றவைகள், சொல்லர்த்தமான பொருளில் கூறப்பட்டிருப்பதால் அதற்குரிய விளக்கத்தையே தருகின்றன. வேதவாக்கியங்களை நாம் வாசித்தும், ஏற்கனவே வாசித்த மற்ற வசனங்களோடு ஒப்பிட்டு, ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யும்போது (தியானிக்கும் போது) அவைகள் தெளிவாகின்றன.

1 சாமுயேல் 12 : 7

## மே 22

**“பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்” – ஆபகூக் 2 : 14**

வேதவாக்கியங்களை நாம் படிக்கையில், இந்த கருப்பொருள் மீண்டும் மீண்டுமாக வந்திருப்பதை நாம் காணலாம். நம்முடைய பரலோகத்தின் பிதாவானவர் தாமே வானம் மற்றும் பூமியில் உள்ள சகல காரியங்களின் மாபெரும் சிருஷ்டிகர் என்று அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என விரும்புகின்றார். இயற்கையின் அதிசயங்களைப் பார்க்கையில், அது கிறிஸ்வர்களாகிய நம்மை அவைகளை வடிவமைத்தவரை எண்ணி வியப்படையச் செய்கின்றது. அதாவது, நியாயமாகவே பிதாவாகிய தேவனைக் குறித்து வியப்பில் ஆழ்த்துகின்றது.

ஆயிர வருட அரசாட்சியில் அனைத்து ஜனங்களும் தேவனை அறிந்து அவரை துதிப்பார்கள் என்று எண்ணும்போது நாம் மகிழ்ச்சி அடைகிறோம்

எரேமியா 31 : 34

## மே 23

**“சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும்” – லூக்கா 18 : 1**

நம்முடைய ஜெபங்கள் உகச்தவைகளாக இருந்தால், அவைகள் பதிலளிக்கப்படும் என்பதில் நாம் உறுதி கொள்ளலாம். நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பது குறித்து வேதம் அநேகப் அறிவுரைகளைக கொடுக்கின்றது. இ ந்த வசனப்பகுதி தெரிவிக்கிற ஒரு காரியம் என்னவெனில், நம்முடைய ஜெபங்கள் பதிலளிக்கப்படுவதற்கு முன் சில கால அவகாசம் தேவைப்படக்கூடும் என்பதே. மேலும், உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என் கர்த்தரின் ஜெபமானது, நாம் நம்முடைய ஜீவியத்தில் நம்முடைய சொந்த சித்தத்திற்க பதிலாக தேவனுடைய சித்தத்தையே எப்பொழுதும் நாடித்தேடி செல்கிறவர்களாக இருக்க வேண்டும் என்றே சுட்டிக்காட்டுகின்றது.

கொலோசெயர் 4 : 2

## மே 24

**“கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து”<br>– எபிரெயர் 12 : 6**

தேவனோ, இயேசுவோ அல்லது பரிசுத்த தூதர்களோ தவறுகள் செய்வதில்லை. ஆனால், பூமியில் ஜீவித்த மற்ற அனைவரும் தவறுகள் செய்துள்ளனர். கர்த்தரிடத்தில் அன்புகூருகிற ஜனங்கள், தாங்கள் தவறானவைகளை செய்யும்போது மனஸ்தாபப்படுகின்றனர். மேலும், நலமானவைகளை செய்யும்படி தொடர்ந்து முயற்விக்கின்றனர். ஆனால், நாம் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், நாம் அனைவரும் இன்னமும் ஆபூரணர்களே. ஆகவே, கர்த்தருடைய உதவியும், மன்னிப்பும், தேவைப்படுகின்றது. இவைகளுக்காக நாம் ஜெபிக்கும் போதும், நாம்மால் முயன்றதை நாம் செய்யும்போதும் இவைகள் எப்போதும் நமக்குண்டு.

வெளிப்படுத்தல் 3 : 19

## மே 25

**“(பரிசுத்த) ஆவியினாலே நிறைந்தது” – எபேசியர் 5 : 18**

தேவனுடைய பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுவதற்கு நமக்கிருக்கும் ஒரே வழி, முதலில் நாம் நம்மையே வெறுமையாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது, நம்முடைய சிந்தைகளை வேதவாக்கியங்கள் மீதும், விசேஷமாக இயேசுவின் முன்மாதிரி மற்றம் போதனைகள் மீதும் மையம் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். இதன் மூலம், நாம் இந்த நினைவுகளாலும், ஜெபங்களாலும் (சிந்தையில்) ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறோம். மேலும், மாம்ச சிந்தைக்கு இயல்பாக உள்ள, அதிகமாக

உலகக்காரியங்களுக்கு செலவிட நம்மிடம் குறைவான நேரமே இருக்கும். ஆனால் கிறிஸ்துவ குணலட்சணங்களை உருவாக்க இவை உதவாது.

1 கொரிந்தியர் 2 : 12

## மே 26

**" பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்" – சங்கீதம் 90 : 2**

இந்த சங்கீதத்தில் மோசே, தேவன் எல்லாக்காலங்களிலும் இருக்கிறவர் என்றும், அவருக்கு ஆதி இல்லை என்றும் நமக்கு கூறகிறார். இது புரிந்துகொள்வதற்கு சுலபமானது அல்ல. காரணம், ஏதோ ஒரு காலத்தை ஆதியாகக் கொண்ட அனைத்து விஷயங்களுடன் தான் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். விண்வெளிக்கு எந்த முற்றுப்புள்ளியும் இல்லாததுபோல காலத்திற்கு ஆதியோ அல்லது அந்தமோ இல்லாததையும் மாம்ச சிந்தையால் உண்மையில் புரிந்துகொள்ள முடியாது. தேவன் எல்லாக்காலங்களிலும் இருந்தார் எனவும், லோகோஸ் என்பவர் தேவன் சிருஷ்டித்த முதல் ஜீவியான இருந்தார் எனவும் நாம் அறிவோம்.

ஏசாயா 57 : 15

## மே 27

**"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (நம்முடைய தேவைகளை சந்திப்பவர்) – எபிரெயர் 7 : 26**

இயேசு முற்றிலும் பூரணரும், முற்றிலும் பரிசுத்தருமாக இருந்தார். அவர் இவ்வுலகிற்கு வரும் முன் ஒரு பூரணமான ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார் எனவும், பூமியில் இருக்கும் போது அவர், ஒரு பரிபூரணமான மனுஷராக இருந்தார் எனவும் நாம் அறிந்திருக்கிறோம். அவர் பரலோகத்தில் இருக்கிற தம்முடைய பிதாவினிடத்தில் திரும்பின போதும், தொடர்ந்து பரிபூரணராகவே இருந்தார்.

எபிரேயர் 5 : 9

## மே 28

**"நம்முடைய சகாயம் வாகத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது"**
**– சங்கீதம் 124 : 8**

தேவன், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களை சிருஷ்டித்ததோடல்லாமல். அவரும், அவருடைய குமாரனாகிய லோகோசும், பரலோகத்தில் மாட்சிமைப்பொருந்திய தூதர்களையும், நம்முடைய பூமியாகிய இங்கு, ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தார்கள். இந்த முதல் ஜோடி தங்களுக்கு குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றெடுத்து ஒரு குடும்பத்தை உருவாக்கவும், பிறகு அவருடைய பிள்ளைகள் தங்களுக்கு சொந்தமாக பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும்படியாக தேவன் ஏற்பாடு செய்தார். இதனிமித்தம், பூமியானது பல இலட்சக்கணக்கானவர்களைக் கொண்ட மாபெரும் மனித குடும்பத்தின் வீடாகத் திகழும்.

எபிரெயர் 13 : 6

## மே 29

**"இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" – ஆதியாகமம் 3 : 22**

தகவல் பரிமாற்றம், அனுபவம் மற்றும் கூர்ந்துகவனித்தல் ஆகிய வழிகளில் மூலமாக நாம்

கற்பிக்கப்படுகிறோம். அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ளுதலே மிகவும் ஆற்றல் மிக்க முறையாகும். 6000 வருடங்களாக, உலகத்தில் தீமையை தழைத்தோங்க அனுமதித்ததன் மூலம், பாவத்தின் விளைவுகளான கடும் துயரத்தைக் குறித்து தேவன் உலகத்திற்கு போதித்துக் கொண்டிருக்கிறார். நீதியை விதிமுறையாகக் கொண்ட இராஜ்யத்தில், நன்மை மற்றும் தீமையின் விளைவுகளுக்கு இடையே உள்ள முரண்பாடு, அனைவருக்கும் மிகவும் தெளிவாகும்போது, ஜனங்களால் நேர்த்தியானதை கொள்ள முடியும்.

ஆதியாகமம் 3 : 5

## மே 30

**“நான் கர்ப்பத்தில்தானே அழியாமலும் .. போனதென்ன ? அப்படியில்லாதிருந்தால், அசையாமல் கிடந்து அமர்ந்திருந்து, இப்பொழுது தூங்கி இளைப்பாறுவேனே” – யோபு 3 : 11, 13.**

யோபுவின் நேர்மையும், உண்மையும் தேவனிடத்தில் எத்தன்மையது என்று மாபெரும் பரீட்சை வைக்கப்பட்டது. அவர், தன்னுடைய குடும்பம் மற்றும் தன்னுடைய கால்நடைகளை இழந்ததோடு அவருடைய சரீரம் முழுவதிலும் கொடிய பருக்களால் உண்டாகி மிகவும் நோயுற்றார். இவ்வசனங்களில் யோபு, மரணம் என்பது வேறுபட்ட நிலைமையில் இருக்கக்கூடிய ஒரு ஜீவனத்தின் நிலையைக் குறிக்காமல், மாறாக, உயிர்த்தெழுதல்வரை இளைப்பாறுதல் அல்லது அழ்ந்த உறக்கத்தில் இருக்கும் நிலையைக் காண்பிக்கிறார்.

பிரசங்கி 9 : 10

## மே 31

**“ காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்” – யோவான் 20 : 29**

இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று சீஷர்கள் விசுவாசிப்பது, மிகவும் முக்கியமாய் இருந்தபடியினால் இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலை அடையாளம் கண்டுகொள்ளும்படிச் செய்தார். அதிகளவில் விசுவாசம் கொண்டிருந்த சீஷர்கள், அவருடைய குரலின் தொனியையும், அப்பம் பிட்கும் முறையின் மூலமாகவும் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். குறைவான விசுவாசம் கொண்டவரையும் தான் உயிரோடிருக்கிறேன் என்று நம்பவைப்பதிலும் நிச்சயித்துக்கொண்டார். தோமா, இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது இருந்த காட்சியில் அவருக்கு தோற்றமளித்ததைப் பார்த்தபோது, ஒரு உறுதியான விசுவாசியாக மாறினார்.

1 பேதுரு 1 : 8

## ஜூன் 1

**“ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்”– 1 கொரிந்தியர் 10 : 31**

நம்முடைய உணவு மற்றும் பானத்தின் பிறப்பிடத்தைவிட, அவைகளிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் பெலத்தை எவ்விதம் பயன்படுத்தகிறோம் என்பதே முக்கியமானது. நாம் உண்ணும் உணவும், தேவ வார்த்தையின் மீதான ஆராய்ச்சியில் நாம் பெறக்கூடிய ஆவிக்குரிய போஷாக்கும், நம்முடைய கிறிஸ்தவ குணலட்சணங்களை அபிவிருத்தியடையும் வேலைக்கு நம்மை பெலப்படுத்தும்.

மத்தேயு 5 : 16

## ஜூன் 2

**“ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால். அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” – மத்தேயு 16 : 24**

இயேசு, பூமியில் தம்முடைய ஜீவியத்தை ஒரு முன்மாதிரியாக இருக்கவும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும் பயன்படுத்தினார். அது அவரை கொடூரமான மரணத்திற்க முன்நடத்தியதோடு

அவரை அறையவேண்டிய சிலுவையை அவரே சுமந்து செல்லும்படியும் செய்தது. நாம் நம்முடைய ஜீவியங்களை நம்முடைய போதகரின் பணிக்கென்று அர்ப்பணித்து, நம்முடைய சுய விருப்பங்களை பலி செய்தும் நாம் நம்முடைய சிலுவைகளை சுமக்கிறோம். நம்முடைய போதகர் என்னைப் பின்பற்று என்று கூறுகையில் நாம் அவரை நம்பலாம். காரணம், அவர் நம்மை சரியான பாதையில் நடத்திடுவார் – அதாவது, பரலோகப் பிதாவினிடத்தில் நடத்திடுவார்.

2 தீமோத்தேயு 3 : 12

## ஜூன் 3

**“திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்: நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே” – உன்னதப்பாட்டு 2 : 15**

இந்த சிறுநரிகள், நாம் சில சமயங்களில் வெளிக்காட்டும் சிறு பிழைகளான அற்பமான பார்வை, மற்றவரை புண்படுத்தும் வார்த்தைகள், சுயநலமான சிறு செயல்கள் போன்றவைகளைக் குறிக்கின்றது. சிறுநரிகள், பார்ப்பதற்கு மிகவும் கபடற்றதாயும், அழகான விலங்குகளாயும் இருந்தாலும், அவைகள் பிஞ்சு திராட்சிப்பழங்களைப் புசித்து, அவைகளை அழித்து, அதிக சேதம் ஏற்படுத்தக்கூடிய இயல்பைக் கொண்டதாக இருக்கிறது. இந்த திராட்சப்பழங்கள் நம்முடைய குணாதிசயங்களைக் குறிக்கின்றது. ஆகையால், நம்முடைய குணாதிசயங்களை சேதப்படுத்தக்கூடிய சிறு பிழைகளைக் குறித்து நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்.

சங்கீதம் 19 : 3

## ஜூன் 4

**“எல்லாரும் அழுது அவளைக்குறித்துக் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்”– லூக்கா 8 : 52**

ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் இழந்துபோன ஜீவனை மீண்டும் பெறுவதற்காக, இயேசு தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்த காரணத்தினால், மரணத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருக்கும் அனைவரும் உயிர்த்தெழுதலில் எழுந்திருப்பார்கள். வர இருக்கும் இராஜ்யத்தில், அனைத்து மனுக்குலத்திற்குமான பொதுவான உயிர்த்தெழுதலின் ஒரு காட்சியாகத் தான், இயேசு, இந்த சிறு பெண்ணை மரணத்திலிருந்து எழுப்பினார்.

யோவான் 11 : 11 – 15

## ஜூன் 5

**“அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்” – லூக்கா 24 : 6**

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்னர் மூன்றாம் நாள் அதிகாலையில் அவருடைய பெண் சீஷிகளில் சிலர், அவருடைய கல்லறைக்குச் சென்றபோது, இயேசு உயிரோடு எழுந்துவிட்டார் என்ற ஆச்சரியமான செய்தியை அவர்களுக்குச் சொல்லிய இரண்டு தேவதூதர்களை சந்தித்தனர். அந்த ஸ்திரீகள் அப்போஸ்தலர்களிடம் இந்த நற்செய்தியைச் சொல்லும்படி விரைந்தோடினா. இயேசு ஓர் ஆவிக்குரிய ஜீவியாக எழுப்பப்பட்டிருந்தபோதிலும் அவருடைய சீஷர்கள் அவரை கண்டு, அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று அறிந்துகொள்ளும்படியாக மனுஷரூபத்தில் தோன்றினார்.

1 கொரிந்தியர் 15 : 4

## ஜூன் 6

**“அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்” – ஆதியாகமம் 2 : 17**

ஆதாமும் ஏவாளும், அந்த விலக்கப்பட்ட கனியை புசித்து பின்னர், 24 மணி நேர கால

அளவுக்குள்ளாக மரித்துவிடவில்லை. ஆனால், மரிக்கும் தன்மையோ உடனடியாக ஆரம்பித்துவிட்டது. அவர்களின் பரிபூரணமான ஜீவியத்திற்கு ஆதாரமாய் இருந்த (ஆதரித்த) பரிபூரண சூழ்நிலைகளிலிருந்தும், ஏதேன் தோட்டத்திலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர், பல நூறு ஆண்டுகள் வாழ்ந்தனர். என்றாலும், இந்த காலப்பகுதிகள் முழுவதிலும் ஜீவசக்தியை இழந்துக்கொண்டே வந்தனர்.

ரோமர் 5 : 12

## ஜூன் 7

**“ஒருவனையும் தூஷியாமலும்..” – தீத்து 3 : 2**

ஒரு நபரை தூஷிப்பது, களவு செய்வதற்கு ஒத்திருக்கிறது. காரணம், பொக்கிஷங்களைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதான அவருடைய நற்பெறரையும், கீர்த்தியையும் திருடிவிடுகிறது. பொன்னும் வெள்ளியும் திருடாய் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் மீண்டும் சம்பாதித்து விடலாம். ஆனால், யாரொருவரால் ஒரு நற்பெயர் அழிந்துபோனால், அதை மீண்டும் பெறுவது என்பது பெரும்பாலும் கூடாத காரியமாகும், ஒரு முறை ஒரு தூஷிணம் பேசப்பட்டால் அதை திரும்பி எடுப்பதற்க எவ்வழியும் இல்லை. ஆகிலும், பேசுவதற்கு முன்பு சிந்திப்போமேயாகில் , அது நம்முடைய வார்த்தைகள் பிரயோஜனமாகவும், உற்சாக மூட்டுகிறதாகவும் இருக்குமோ அல்லது பேசாமல் விட்டுவிடுவது நலமாய் இருக்குமோ என்று தீர்மானிக்க நமக்கு கால அவகாசம் அளிக்கும்.

எபேசியர் 4 : 31

## ஜூன் 8

**“...ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்றும், எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கப்படும்” – எபேசியர் 3 : 11**

ஒரு மாபெரும் சிற்பியின் நிறைவு பெறாத வேலையைப்பார்த்து அவருடைய ஞானம் மற்றும் திறமையை அறியாமையில் சிலர் தவறாக மதிப்பிடுவது போன்றே, தேவனுடைய நிறைவு பெறாத திட்டத்தைக், குறித்தும் சிலர் தவறாக மதிப்பிடலாம். ஆயினும் ஏற்றகாலத்தில் அனைவரும், யுகங்களைக் குறித்தான தேவனுடைய மாபெரும் திட்டம் உண்மையில் கால அட்டவணையின்படியே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அறிந்துகொள்வார்கள், தேவனை சிற்பியாக கொண்ட இந்த திட்டம், மனிதனுடைய சிருஷ்டிப்பில் ஆரம்பித்து, வரைமுறையற்ற எதிர்காலத்திற்குள் சென்றடையும்.

எபிரெயர் 12 : 2

## ஜூன் 9

**“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்” – சங்கீதம் 31 : 24**

திட மனது குறித்து வேதத்தில் அநேக உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிங்கங்களை எதிர் நோக்க தானியேலுக்கு திடமனது இருந்தது. கோலியாத் என்னும் இராட்சதனை எதிர்கொள்ள தாவீதுக்கு திடமனது இருந்தது. ஆரம்ப கால சபையை ஸ்தாபிக்கச் சென்றபோது, சீஷர்களும் திடமான மனதையே காண்பித்தனர். இயேசு தாம் சிலுவையில் அறைய நேரிடும் என்பதை அறிந்திருந்தும் துணிந்து எருசலேமுக்குச் சென்றபோது, அவருடைய திடமனதையே வெளிப்படுத்தினார். அவர்களைப் போலவே நாமும் திட மனதைக் காண்பிக்க முடியும். காரணம், நம்முடைய அனைத்து நம்பிக்கையும் நம்முடைய இருதயங்களைப் பெலப்படுத்துகிற தேவன் பேரிலே இருக்கின்றது

.

யோசுவா 1 : 6

## ஜூன் 10

**“ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்”– 1 தெசலோனிக்கேயர் 5 : 15**

நமக்கு தீமை செய்த ஒருவரை பழிக்குப்பழி வாங்குவது என்பது ஒரு மோசமான சூழ்நிலையை சீர்செய்து, உறவை வளர்க்காது தேவனுடைய உதவியைக் கொண்டு தீமைக்கு பதிலாக நன்மை செய்வது சாத்தியமான ஒன்றாகும். சில சமயங்களில் தீங்கான காரியங்களை செய்யும் ஒரு நபர் தன்பால் இரக்கமும் மன்னிப்பும் காட்டப்படும் போது, தன்னுடைய கிரியைகளினிமித்தம் வெட்கம் அடைகிறார். இயேசு நமக்கு நல்ல ஒரு மாதிரியாக இருந்தார். அவர் தம்மை காயப்படுத்தினவர்களிடத்தில் தம்முடைய இருதயத்தில் அனுதாபமும், மன்னிப்பும் அன்பும் கொண்டிருந்தார்.

நீதிமொழிகள் 20 : 22

## ஜூன் 11

**“கர்த்தருக்குக் காத்திரு” – சங்கீதம் 27 : 14**

யோபு பொறுமைக்கு ஒரு நல்ல உதாரணம். அவர் அநேக இழப்புக்குள்ளாகி சாத்தானால் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்ட போதிலும், அவர் உண்மையுள்ளவராகவே இருப்பார் என்று நிரூபிக்கும்படி, அவரை சாத்தான் சோதிக்கும்படி, தேவன் அனுமதித்தார், அவர் கர்த்தருக்கு பொறுமையாகக் காத்திருந்ததினால் பலனளிக்கப்பட்டார். நம்முடைய பூலோக பெற்றோரைப்போலவே நம்முடைய பரலோகப் பிதாவும், எப்பொழுதும் நாம் கேட்கிறதையும், கேட்கும் சமயத்திலேயும் அப்படியே நமக்கு வழங்குவதில்லை. மாறாக, அவர்பால் நாம் அன்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் பட்சத்தில் நமக்கு நன்மையானவற்றை அவர் செய்வார்.

யாக்கோபு 5 : 11

## ஜூன் 12

**“சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக”– யாக்1:13**

நாம் செய்யக்கூடாதக் காரியங்களைச் செய்வதற்கு ஏற்படும் தூண்டுதல், மனிதனுடைய பெலவீனமான பண்புகளில் ஒன்றாகும். நம்முடைய மாம்ச பெவீனங்களே நம்மை சோதிக்கிறதேயல்லாமல், தேவன் நம்மை சோதிப்பதில்லை. நம்முடைய சிந்தையில் தவறு செய்ய வேண்டும் என்பதற்கான தூண்டுதல் நுழைந்த அத்தருணத்திலேயே, எதிர்த்து போர் செய்யப்பட வேண்டும்.

மத்தேயு 26 : 41

## ஜூன் 13

**“நியாயஞ்செய்து. இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்” – மீகா 6 : 8**

நாம் நியாயத்துடனும், கருணையுடனும், தாழ்மையுடனும் இருக்க வேண்டும். நாம் அதிகப்படியான அன்பு பெற்றிருந்தால், இந்த மூன்று மனோபாவங்களையும் சுலபமாகப் பெறமுடியும். நமக்கு சகலரிடத்திலும் அன்பு இருக்குமாயின், அவர்களிடத்தில் நாம் நியாயமாக நடந்து கொள்வோம். நமக்கு அன்பு இருக்குமாயின், நாம் பாசம் உள்ளவர்களாகவும், இரக்கம் காட்டுகிறவர்களாகவும் இருப்போம். மேலும், நமக்கு அன்பு இருக்குமாயின், மற்றவர்களிடம் நாம் நடந்துகொள்ளும் முறையிலும், தேவனுக்கு முன்பாகவும் அடக்கத்தை வெளிக்காட்டுபவர்களாய் இருப்போம்.

1 பேதுரு 5 : 6

## ஜூன் 14

**“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” – ஆதியாகமம் 1 :1**

சில புவியியல் ஆராய்ச்சி நிபுணர்கள், பூமியானது பல மில்லையன் வருடங்களுக்கு முன் உருவானது என்று கூறகின்றனர். பூமி எப்போது உருவானது என்பது குறித்து வேதம் நமக்கு ஒன்றுமே கூறாமல், தேவன் அதை மனிதனுடைய குடியிருப்புக்காக ஆயத்தம்பண்ண தொடங்குவதற்கு முன்னமே அது இருந்தது என்று மாத்திரமே கூறுகின்றது. உண்மையான அறிவியலுக்கும் வேதத்துக்கும் அடையே எந்த முரண்பாடும் இல்லை.

யோபு 38 : 4

## ஜூன் 15

**“நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” – கொலோசெயர் 3:3**

ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் மனுக்குலத்தின் மீது வந்த மரண தண்டனையின் கீழ் அனைவரும் இருக்கும் காரணத்தினிமித்தம், தேவன் நம் அனைவரையும் மரித்தவர்களாக அல்லது மரித்துக்கொண்டிருக்கின்றவர்களாகவே கருதுகின்றார். ஆனால், கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களோ தேவனால் புது ஜீவனை உடையவர்களாகக் கருதப்படுகின்றனர். அதாவது, ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, முடிவில் பரலோகத்தில் பிறக்கப்போகும் ஓர் ஜீவனின் ஆரம்பத்தை உடையவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ரோமர் 6 :8

## ஜூன் 16

**“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்” – 1 தெசலோனிக்கேயர் 5 : 17**

இடைவிடாமல் ஜெபத்தில் தரித்திப்பதற்கு தானியேல் நமக்கு ஒரு நல்ல மாதிரியாய் உள்ளார். அனைவரும் பார்க்கும்படி ஜன்னல்கள் திறந்த நிலையில், அவர் முழங்காற்படியின் நாள் ஒன்றிற்கு மூன்று முறை தேவனிடம் ஜெபம் பண்ணினார். என்றாலும், இரு அவரை அவருடைய சத்துருக்கள் சிங்கெபியில் எறிவதற்குக் காரணமாய் இருந்தது. தானியேலின் மாபெரும் நம்பிக்கையின் காரணமாக, தேவன் அவரை சிங்கத்தின் பற்களிலிருந்து விடுவித்தார். நீங்கள் சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெயியுங்கள் என்று இயேசு கூறியுள்ளார். ஜெபத்தின் மூலம் அவர் அடைந்த பெலன், சோதனையை எதிர்க்கவும், மரணபரியந்தம் உண்மையுள்ளவராயிருக்கவும், அவருக்கு வலுவூட்டியது.

லூக்கா 18 : 1

## ஜூன் 17

**“நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்”– உபாகமம் 7 : 6**

தேவன், தம்முடைய விசேஷித்த ஜனமாக இருக்கும்படி இஸ்ரயேல் தேசத்தை தெரிந்துகொண்டு, யாக்கோபின் மரணம் முதல், இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பின்னர் தொடர்ந்த மூன்றரை வருடங்கள் வரையிலும் அவர்களோடு தொடர்பு வைத்திருந்தார். தேவன் தாம் தொடர்புகொள்ளும்படி இஸ்ரயேலைத் தெரிந்தெடுத்தது, மீதியான உலகத்திற்கு முன்மாதிரியாய் இருப்பதற்கேயாகும். அவரை நம்பி கீழ்ப்படிந்தபோது அவர்கள் செழித்தனர். அவர்கள் கீழ்ப்படியாதபோதோ துரதிஷ்டமாக துன்பம் அடைந்தனர்.

சங்கீதம் 135 : 4

## ஜூன் 18

**"கர்த்தருக்குப் பயப்படுதல் (பயபக்தியாயிருத்தல்) ஞானத்தைப் போதிக்கும் மேன்மைக்கு முன்னானது தாழ்மை" – நீதிமொழிகள் 15:33**

நாம் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி நம்மை குறித்து எண்ணாமல் இருப்பது சற்று கடினமே. முதலில் மற்றவர்களைக் குறித்து சிந்தித்து மற்றவர்களுக்காகக் காரியங்கள் செய்வது நம்மை தாழ்மையுள்ளவர்களாக்கும். பிதாவாகிய தேவனிடத்திலான இயேசுவின் கீழ்ப்படிதல், அவருடைய உண்மையான மனத்தாழ்மையைக் காண்ப்பிக்கிறது. அவர் நித்திய மரணத்திலிருந்து உலகத்தை இரட்சிக்க தம்முடைய ஜீவனையே கொடுத்தார். முதலில் அவர் தம்மைத் தாழ்த்தினார், பின்னரோ மேன்மைப்படுத்தப்பட்டார்.

பிலிப்பியர் 8 : 9

## ஜூன் 19

**"ஆண்டவரே. நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும் ? அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்றார்" – மத்தேயு 18 : 21, 22**

இயேசு ஓர் உவமையைக் கூறினார், அதென்னவெனில், அதிக கடன்பட்ட வேலைக்காரன் ஒருவனை எஜமான் மன்னிக்கிறார். ஆனால் அந்த வேலைக்காரனோ திரும்பிப்போய் தன்னிடம் சொற்பமாய் கடன்பட்ட ஒருவனை மன்னிக்க மறுத்துவிடுகிறான். அவன் எஜமான் மிகவும் கோபம் அடைந்து, அவனை சிறையில் போடுவித்தான். இந்த ஒரு பாடம், தேவன் எவ்வளவாய் நம்மை மன்னித்திருக்கிறார், ஆகையால் நாமும் மற்றவர்களையும் மன்னிக்க வேண்டும் என்பதை உணர்வதற்கு நமக்கு உதவியாய் இருக்கிறது.

கொலோசெயர் 3 : 13

## ஜூன் 20

**"உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். – கலாத்தியர் 5 : 14**

நாம் கீழ்ப்படிய, இயேசு நமக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுத்தார். இதற்குள் தேவனுடைய பிரமாணங்கள் அனைத்தும் உள்ளடங்கியுள்ளது. அதென்னவெனில், நாம் நம்மிடத்தில் அன்புகூருவது போல் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும் என்பதேயாகும், மற்றவருடைய தேவைகளையும், விருப்பங்களையும் நம்முடைய சொந்த தேவைகள், விருப்பங்களைப் போன்றே நாம் எப்போதும் எண்ண வேண்டும், நாம் மற்ற ஜனங்கள் மீது உண்மையில் அக்கறை எடுப்பதை கற்றுக்கொள்ளும்போது, இந்த அன்பில் வளர்வது சுலபமாகிவிடுகின்றது. மேலும், தேவன் நமக்கு உதவி செய்து நம்முடைய முயற்சிகளில் மிகவும் பிரியப்படுகிறவராகவும் இருப்பார்.

லேவியராகமம் 19 :18

## ஜூன் 21

**"லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக்கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்: அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினது" – கொலோசெயர் 2 : 8**

தேவனுடைய தெய்வீகத் திட்டங்களை நாம் கற்கும்போது, அதிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் நாம் புரிந்துகொண்ட விதம் முழுவேதத்தோடு இசைவுள்ளதாக இருக்கிறதா என்று நிச்சயித்துக்கொள்ள தேவனடைய வார்த்தைகளை நாம் கவனமாய் ஆராய்வது அவசியமாய் உள்ளது. முதலில் சில தவறான போதனைகள், வேதாகத்தின் பிரகாரம் சரியானதாகத் தோன்றும். ஆனால், பின்பு அது தவறானது என நிரூபிக்கப்படும், பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் ஒப்பிட்டு பார்ப்பதன் மூலம் உண்மைக்கும் தவறுக்கும் உள்ள வித்தியாசத்தை நம்மால் காணமுடியும்.

எரேமியா 29 : 8

## ஜூன் 22

**“கற்பனையின்மேல் கற்பனையும், ... பிரமாணத்தின்மேல் பிரமாணமும், .... இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்” – ஏசாயா 28 : 10**

கணிதம், வேதியியல் அல்லது வேறெந்த பாடத்தையும் நாம் படிப்படியாகக் கற்றுக்கொள்வதுபோலவே, சத்தியமும் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். முதலில் நாம் அறிவு என்னும் அஸ்திபாரத்தைக் கட்டி, பிறகு நாம் தொடர்ந்து கற்பவற்றையும், அதோடு சேர்த்து கட்டி வர வேண்டும்.

சங்கீதம் 119 : 27

## ஜூன் 23

**“என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக” – யோபு 14 : 15**

ஆயிரவருட அரசாட்சியில், தேவனுடைய பிரதிநிதியாக நின்று கிறிஸ்து அழைக்கும்போது பிரேதகுழிகளிலிருந்து அனைவரும் எழுந்து வருவர், கீழ்ப்படிந்து ஜீவிக்கும் பரிபூரண ஜனங்களை இப்பூமியில் பெற்றிருப்பதே கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது. இவர்களே அவருடைய வேலைப்பாடு.

யோபு 5 : 25

## ஜூன் 24

**“வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்தார்” – ஏசாயா 45 : 18**

தேவன், இப்பூமியை சிருஷ்டித்த போது, ஒரு திட்டத்தை தம் மனதில் வைத்திருந்தார் என்பதை நாம் அறிவோம். அதை அவர் மனுஷ ஜாதியின் குடியிருப்புக்காக உண்டாக்கினார். கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியில் இயேசுவினாலும், இந்த சுவிசேஷ யுகத்தின் உண்மை கிறிஸ்தவர்களாகிய அவருடைய மாணவாட்டியினாலும் உயர்ப்பிக்கப்பட்ட உலகஜனம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். கிறிஸ்துவும் அவரது சபையும் பார்க்கக்கூடாத ஆவிக்குரிய ஜீவிகளாக இருந்தாலும், அவர்களின் ஆசீர்வாதங்களை அனைவரும் உணர்ந்து அவைகளை ஏற்றுக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைவர்.

எபிரெயர் 1 : 10

## ஜூன் 25

**“தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்” – எபிரெயர் 1 : 1 , 2**

இயேசு பூமிக்கு வரும் முன் தேவன் மனிதர்களிடம் தேவதூதர்களை தூதுவர்களாக அனுப்பினார். மற்றவர்கள் வாசிக்கும்படியாக தங்கள் செய்திகளைப் பதிவு செய்வதற்கு தீர்க்கதரிசிகள் ஏவப்பட்டனர். தேவதூதர்களின் செய்திகளுக்கான அவசியங்களை முடிவுக்குக் கொண்டு வரும்படியாக, கர்த்தர் இயேசு மற்றும் அப்போஸ்தலரின் வார்த்தைகளையும், கிரியைகளையும் விவரித்து கூறுவதற்கு புதியஏற்பாட்டு எழுத்தாளர்களை தேவன் ஏவினார். தேவனுடைய திட்டங்களைக் குறித்து அறிய நமக்கு அவசியமாய் இருக்கிற எல்லாவற்றையும் நமக்குப் போதிப்பதற்கு எழுதப்பட்ட இவை இரண்டையும் நாம் பெற்றிருக்கிறோம்.

எபிரெயர் 1 : 10

## ஜூன் 26

**“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” – சங்கீதம் 119:105**

வேதம், தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றபடியினால், இந்த புத்தகம் நம்முடைய விளக்காக

இருக்கின்றது என சங்கீதங்கள் நமக்கு மேற்கோளிட்டுக்காட்டுகின்றது. ஒரு சாதாரண விளக்கு ஒரு அறையை (அ) இருளான இரவின் பாதையை எப்படி வெளிச்சமூட்டுகின்றதோ அதைப்போலவே இதுவும் நம்முடைய மனங்களைப் பிரகாசிக்கின்றது. வேதத்திலிருந்து நாம் தேவனையும் அவருடைய திட்டங்களையும் குறித்து அறிகிறோம். மெய்யாகவே இது ஒரு மிகப் பிரமாண்டமான தீபமாகும்.

2 சாமுயேல் 22 : 29

## ஜுன் 27

**"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்: உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" – சங்கீதம் 32 : 8**

கண், ஞானத்திற்கு அடையாளமாக இருக்கிறது என வேதம் நமக்கு கூறுகிறது. தேவன், தம்முடைய ஞானத்தைக் கொண்டு நம்மை வழிநடத்துகிறார். கீழ்ப்படிதலுள்ள குாந்தை, தனது பெற்றோரை கூர்ந்து கவனிப்பான். மேலும், அவன் தனது பெற்றோரின் கண்களில் விசனப்பார்வையைக் காண்கையில், தனது நடக்கையை சரியான மாற்றம் ஏற்படும்படி செயலாற்றுவான். இதை போன்றே நமக்கும் உள்ளது. நாம் தேவனால் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. மாறாக, அவருடைய வழிக்காட்டுதலுக்கு எதிர்பார்த்து, அதின் பிரகாரம் நடந்து கொள்ள வேண்டும்.

சங்கீதம் 25 :4

## ஜுன் 28

**"நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று" – அப்போஸ்தலர் 24 : 15**

அப்போஸ்தலர் பவுல், யூதாவின் ஆளநராகிய பேலிக்ஸ் இடம், தேவன் நல்லோராகிலும் சரி, பொல்லோராகிலும் சரி மரித்துப்போன சகல ஜனங்களையும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உயிர்த்தெழுப்பவோ அல்லது மீண்டும் ஜீவனுக்கு உயர்த்தப்படுவதற்கு திட்டமிட்டிருக்கிறார் என்று கூறினார். இந்த வாக்குத்தத்தமானது, இலட்சக்கணக்கான மக்களுக்கு ஒரு மாபெரும் ஆறுதலாக இருந்து வருகிறது. நம்முடைய பரமபிதாவின் மனுக்குலத்திற்கான அன்பின் திட்டங்களில் சிலவற்றை அறிவதற்கு நாம் மிகவும் அதிர்ஷ்டம் வாய்ந்தவர்களாக இருக்கிறோம்.

அப்போஸ்தலர் 26 : 8

## ஜுன் 29

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" – சங்கீதம் 91 : 11**

மனுஷஜீவிகள், தேவதூதர்களிலும் சற்று சிறியவர்களாக சிருஷ்டிக்கப்பட்டனர் என்று வேதத்தில் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. தூதர் என்ற வார்த்தைக்கு தூதுவர் அல்லது செய்தியாளர் என்று அர்த்தமாம். இவ்வாறு தேவதூதர்கள் தேவனுடைய தூதுவர்களாக இருக்கின்றனர். தேவன், அவர்கள் செய்யும்படிக்கு வேலை கொடுக்கிறார். இந்த வேலை சிலசமயம் தேவனுடைய மனுஷீகப் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் விதத்திலும், இருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு சரியானவைகளை செய்ய உதவி செய்வதே, பரலோக தூதர்களது விசேஷித்த பணியாய் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட உதவி தூதர்கள் மூலமாக கிடைப்பதை அறியும்போது, அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

லூக்கா 4 : 10

## ஜுன் 30

**ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். – மத்தேயு 24 : 14**

கிறிஸ்தவர்கள், இயேசுவின் ஈடுபலி மற்றும் வர இருக்கும் இராஜ்யத்தின் நற்செய்திகளைப் பகிர்ந்தளிப்பதில், உலகம் முழுவதற்கும் சாட்சி பகரவேண்டியவர்களாய் இருக்கின்றனர். மற்றொரு இடத்தில் அவர், தமது இரண்டாம் வருகையில், இதுவரை சம்பவித்திராத மகா உபத்திரவம்

உண்டாயிருக்கும் என குறிப்பிட்டிருக்கிறார். அவர் திரும்பி வந்த உடனேயே பொதுவான உலகஜனம் அவரிடம் மனமாற்றப்பட்மாட்டார்கள் என்பதை இக்காரியம் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

கலாத்தியர் 1 : 23

## ஜுலை 1

**"நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" ஆதியாகமம் 2:17.**

இந்த விசேஷமான மரத்தின் கனியை புசிக்கவேண்டாம் என தேவன், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கட்டளை கொடுத்தபோது, அவர் அவர்களுடைய கீழ்ப்படிதலை சோதித்துக் கொண்டிருந்தார். அந்த கனி, தாமே அவர்களுக்கு நன்மை தீமையை அற்புதமான விதத்தில் கற்றுக்கொடுக்கவில்லை. ஆனால் புசிக்க வேண்டாம் என விலக்கப்பட்டிருந்தது எதுவோ அதை புசித்ததின் மூலமாக, தேவனுக்கு கீழ்ப்படியாமல் போன அந்த செய்கையினாலே, தீமைக்கும் அதின் விளைவுகளுக்கும் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.

ஆதியாகமம் 3:3.

## ஜுலை 2

**"பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா ? " 1 கொரிந்தியர் 6:2.**

ஆயிரவருட யுகத்தின் பொழுது, இந்த சுவிசேஷயுகத்தில் உண்மையாய் இருந்திட்ட கிறிஸ்தவர்கள், பூமியை நியாயம் தீர்ப்பதிலும், ஆசீர்வதிப்பதிலும் கிறிஸ்துவோடுகூட இணைந்து செயல்படுவர் என்பதை அப்போஸ்தலர் பவுல், கொரிந்துவில் உள்ள சீஷர்களுக்கு நினைவுபடுத்தினார். இந்த ஆயிரவருட நியாயத்தீர்ப்பின் நாள், கற்றுக்கொள்ளவும், மகிழ்ச்சியாக இருப்பதற்குமான ஒரு காலப்பகுதியாக இருக்கும். சகல ஜனங்களும், தேவனுடைய அன்பின் குணாதியசங்களை அறிந்துகொள்ளுவதற்கும், அவருடைய பூரணமான கட்டளைகளுக்கு உறுதியாய் கீழ்ப்படிவதன் மூலமாய் வரக்கூடிய சந்தோஷத்தில் மகிழ்ந்து களிகூறவும் அவரிடத்தில் வருவார்கள்.

தானியேல் 7:22.

## ஜுலை 3

**"நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். " எரேமியா 31:33.**

இராஜ்யத்தில், அனுபவங்கள், எடுத்துக்காட்டுக்கள் மற்றும் திருத்தங்களின் மூலமாக தேவனுடைய பிரமாணமானது, தனித்தனியே ஒவ்வொரு நபருடைய குணாதிசயத்தின் ஒரு பகுதியாக மாறும். தேவனுடைய பிரமாணங்களோடு இசைந்து வாழ்வதே, இயற்கையான மற்றும் ஜீவிப்பதற்கு விரும்பப்படத்தக்க வழியாக இருக்கும். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" என்று தங்கள் இருதயங்களில் சொல்லக்கூடிய ஜனங்களால், பூமியானது நிறைந்திருக்கும்.

எசேக்கியேல் 11:9.

## ஜுலை 4

**"கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்." ஏசாயா 35:1.**

இந்த அருமையான வேதவாக்கியமானது, கிறிஸ்துவின் இராஜ்யத்தையும், அதற்கு பின் என்றென்றும் இருக்கக்கூடிய காலத்தையும் குறித்து பேசுகிறது. அதாவது, இந்த பூமி பூரணமான மற்றும் ஏராளமான உணவு மற்றும் புஷ்பங்களைப் பிறப்பிக்கும்போது, இருக்கக்கூடிய காலத்தைக் குறிக்கிறது. ஜனங்கள் மாத்திரம் அல்ல, மாறாக பூமியும் அதில் உள்ளவைகளும் பூரணமாக்கப்படும்.

ஏசாயா 35:7.

## ஜுலை 5

**"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பிற்று. "**
**– வெளிப்படுத்தல் 21:4.**

அந்த சூழ்நிலை எவ்வளவு மகிமையானதாக இருக்கும் என சிந்தித்துப் பாருங்கள். ஆயிரவருட யுகத்திற்கு பின்பு வரக்கூடிய யுகாயுகத்தில், துன்பம் ஏற்படுத்தக்கூடிய எந்த காரணகாரியமும் இல்லாத, பரிபூரண ஜனங்களால் குடியேற்றப்பட்ட பரிபூரண பூமி அங்கு காணப்படும். ஒட்டு மொத்த மனுக்குலமும் சதாகாலத்திற்கு கர்த்தர் இயேசுவை தங்களது இரட்சகராகவும், மீட்பராகவும், விடுவிக்கிறவராகவும் கனப்படுத்துவார்கள்.

ஏசாயா 25:8.

## ஜுலை 6

**"சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வனே. "   2 கொரிந்தியர் 11:14.**

ஜனங்களை வஞ்சிக்கவும், தேவனிடத்திலிருந்து அவர்களை பிரித்து நடத்தவும் சாத்தான் அநேக வேறுபட்ட வழிகளை உபயோகித்து வருகிறான். அவன் கையாண்டுவரும் ஒருமுறை என்னவெனில், அவன் தன்னை தேவன்போல் காண்பித்து, தேவனிடத்திலிருந்து சத்தியத்தையும் வெளிச்சத்தையும் கொண்டுவருவதுபோல பாசாங்கு செய்து கொண்டிருக்கிறான். உண்மையில் பார்க்கும்போது, அவன் தப்பறைகளையும் இருளையுமே கொண்டு வருகிறான்.

யோவான் 8:44.

## ஜுலை 7

**"நற்சீர் பொருந்துங்கள்"   2 கொரிந்தியர் 13:11.**

சீர்பொருந்துவதற்கான அர்த்தங்களில் ஒன்று "முதிர்ச்சியடைதல்" ஆகும். கற்றுக்கொள்வதினாலும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதன் மூலமாகவும், தேவன் பேரிலும், கர்த்தர் பேரிலும் காணப்படும் நம்முடைய அன்பை அதிகப்படுத்துவதன் மூலமாகவும், கிறிஸ்தவர்களாக நாம் அதிக முதிர்ச்சி அடைய முடியும். முதிர்ச்சி அடைதலுக்கான நம்முடைய இலக்கு, பூரண அன்பை அடைதலாகும். அதாவது, நம்முடைய சத்துருக்களையும் கூட நம்மால் அன்பு செய்ய முடிகிற நிலை ஆகும்.

மத்தேயு 5:48.

## ஜுலை 8

**"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."**
**– 1 பேதுரு 5:5.**

பெருமையுள்ளவர்கள், தங்களுக்கு தேவன் தேவை இல்லை என நினைக்கின்றனர். மேலும் அவர்கள், தங்களால் எல்லாவற்றையும் செய்துகொள்ள முடியும் என நினைக்கின்றனர். தாழ்மையானவர்கள் தங்களைத் தாங்களே நம்புவதைப் பார்க்கிலும், தேவன் மீது நம்பிக்கை கொண்டிருப்பர். முக்கியமானக் காரியங்களைச் செய்ய விருப்பப்படுவதில், பெருமை பெரும்பாலும் மற்றவர்களைப் புறம்பே தள்ளி தங்களிடத்தில் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும். தேவன் இந்த மனப்பான்மைக்கு எதிர்த்து நிற்கின்றார். மேலும், வழிநடத்துதலுக்காக தம்மையே நோக்கிப்பார்ப்பவர்களுக்குக் கிருபை அளிக்கிறார்.

நீதிமொழிகள் 29:23.

## ஜூலை 9

**"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக: உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்பவைகளையே என்றார்." மத்தேயு 19:19.**

நம்மைநாமே எந்த அளவு நாம் நேசிக்கின்றோமோ, அந்த அளவு மற்றவர்களை நாம் நேசிக்கும்போது, நாம் அவர்கள் சந்தோஷங்களில் அவர்களோடுகூட மகிழ்ந்து, அவர்களுடைய வேதனைகளில் அவர்களோடுகூட இரக்கம் காட்டுகிறவர்களாகவும் இருப்போம். நம்முடைய முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூரவும், நம்மிடத்தில் நாம் அன்புகூருவதுபோல, பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்ற இந்த கட்டளைக்குக் கீழ்ப்படிவதால், இந்த இரண்டு பிரமாணங்களே போதுமானதென்று நாம் காண்கிறோம். இவைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நாம் ஒருபோதும் உள்நோக்கத்தோடு மற்றவர்களை வேதனைப்படுத்தாதிருப்போம்.

கலாத்தியர் 5:14.

## ஜூலை 10

**"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல். " 1 பேதுரு 4:12.**

கடினமான அனுபவங்கள், தேவனிடத்தில் நம்பிக்கை கொள்ளும்படி நாம் கற்றுக்கொள்வதற்கும், பெலத்திற்காகவும், வழிநடத்துதலுக்காகவும் அவரை நோக்கிப் பார்க்கும்படி நாம் கற்றுக்கொள்வதற்கும், அவரைப்போல வேறெவரும் நம்மை பராமரிக்கவோ (அல்லது) திருப்திசெய்யவோ முடியாது என்பதை நாம் உணர்ந்துக்கொள்வதற்கும் உதவுகின்றது. அவைகள், கர்த்தரிடத்தில் நம்முடைய அன்பையும், நேர்மையையும் கூட சோதித்து, நம் குணலட்சணத்தைப் பெலப்படுத்துகிறது.

1 பேதுரு 1:7.

## ஜூலை 11

**"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்: நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர்
உன்னிடத்தில் கேட்கிறார்" – மீகா 6:8.**

கர்த்தரோடு நிலைத்து நிற்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த குணாதிசயங்கள் தேவையான ஒன்றாகும். மேலும் இவைகள் பிரமாணத்தின் சுருக்கமாக இருக்கிறது. இந்த அறிக்கை இஸ்ரயேலருக்கு மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. இதற்குள்ளாக, எல்லா கட்டளைகளையும் கர்த்தர் அடக்கியுள்ளார். ஆயிரவருட யுக முடிவில், இந்த ஒட்டு மொத்த மனுக்குலமும் இதே நிலைப்பாட்டுக்கு தங்களை உட்படுத்தி வாழ வேண்டியது அவசியமானதாக இருக்கும்.

பிலிப்பியர் 4:8,9.

## ஜூலை 12

**"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் தேவவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தார்கள். " அப்போஸ்தலர் 17:11.**

பெரோயா பட்டணத்து சகோதரர்கள், பவுலும், சீலாவும் தங்களுக்கு போதிக்கும் சத்தியம் உண்மையுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அநுதினமும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதில் ஞானம் உள்ளவர்களாய் இருந்தனர். இது நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. வேதத்தை ஆராய்ந்து பார்ப்பதன் மூலமாக, ஒவ்வொரு ஆராய்ச்சிப் பொருளைக் குறித்தும் தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மட்டுமே நாம் சத்தியமாக அங்கீகரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சங்கீதம் 34:16.

## ஜூலை 13

**"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். " 1 பேதுரு 5:7.**

இந்த ஒரு வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கவும், தேவன் நம் பேரில் அக்கறை உள்ளவராக இருக்கின்றார் என்பதை அறிவதும், எவ்வளவு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது, நம்முடைய கவலைகள், பிரச்சனைகள் அனைத்தையும் அவரிடம் ஜெபத்தில் கொண்டு வந்து, அவருடைய பராமரிப்பு மற்றும் வழிநடத்துதலுக்குள் ஒவ்வொரு நாளும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

சங்கீதம் 37:5.

## ஜூலை 14

**"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." யாக்கோபு 4:7.**

பிசாசு, இயேசுவை சோதித்தபோது, அவர் உடனடியாக "அப்பாலே போ சாத்தானே" என்று கூறினார். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, பொல்லாங்கனின் கருத்துக்களை எதிர்ப்பதற்கு உறுதியான, உடனடியான முடிவு எடுப்பது மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

எபேசியர் 4:27.

## ஜூலை 15

**"நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்." யோவான் 11:11–14.**

மரணம் என்பது, தூங்குவதற்கு ஒத்த விஷயம் போன்ற காரியம் என்று இயேசு தம்முடைய நண்பர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார். இரவில் உறக்கத்திற்கு செல்லும்போது, மறுநாள் காலை விழித்துவிடுவோம் என்று நாம் எதிர்ப்பார்ப்பது போன்று, ஆயிரவருட யுகத்தின் காலை வேளையில் மரணமாகிய உறக்கத்திலிருந்து எழுப்பப்படுவதை நாம் எதிர்ப்பார்க்கிறோம். ஏற்றக்காலத்தில் மரணமாகிய நித்திரையிலிருந்து அனைவரும் எழுப்பப்படுவார்கள். ஏனெனில், கீழ்ப்படியாமையின் மூலமாக ஆதாம் இழந்துபோன ஜீவனுக்கு ஈட்டுத்தொகையாக இயேசு தம் ஜீவனைக் கொடுத்தார்.

தானியேல் 12:2.

## ஜூலை 16

**"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." சங்கீதம் 119:11.**

தேவனை அறிகிற ஞானத்திற்கு வழிகாட்டியாக இருக்க தேவனுடைய வார்த்தை அவசியமாக இருக்கிறது. இதற்கும் மேலாக வேதத்தின் சத்தியங்களால் இருதயங்களை நிரப்பி வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. இவ்வண்ணமாகவே நாம் தேவனை அறிந்து கொண்டு, அவருடைய மகிமையான குணநலன்களைப் புரிந்து நம் ஜீவியத்தில் இப்படிப்பட்ட பாடங்களை கடைப்பிடிக்க முடியும்.

லூக்கா 2:19.

## ஜூலை 17

**"கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை சிட்சிக்கிறார்." நீதிமொழிகள் 3:12.**

நல்ல பெற்றோர் தங்கள் குழந்தைகள் தவறு செய்யும்போது, சிட்சித்து சரியானது எது என்பதை அவர்களுக்கு கற்றுக்கொடுப்பார்கள். தேவனும் தம்முடைய பிள்ளைகளை நேசிக்கிறபடியால் அவர் நம்மை சிட்சித்து சரியானது இன்னது என்பதை நமக்கு காண்பித்து, அதை நிறைவேற்ற அல்லது அதை செய்ய நமக்கு உதவி செய்கிறார். நாம் தவறு செய்யும்போது, அடிக்கடி நாம் நமக்கு நாமே துன்பங்களை வருவித்துக் கொள்ளக்கூடும். சில சமயங்களில் அது மற்றவர்களுக்கும் துன்பங்களை ஏற்படுத்தும்.

உபாகமம் 8:5.

## ஜூலை 18

**"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்: அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். " ஆதியாகமம் 2:24.**

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் நேசிக்கும்போது, அவர்களது குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்து வந்த குடும்பத்தை விட்டுப் பிரிந்து, ஒன்றாக சேர்ந்து ஒரு புதிய குடும்பத்தை உருவாக்கி, மீதமுள்ள தங்கள் ஜீவகாலம் முழுவதற்கும் ஒருவனிடத்தில் ஒருவர் அன்பாகவும், உதவியாகவும் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாக இருந்தது. ஒரு கணவன், தன் மணவாட்டியை நேசிக்கும் அதே விதத்திலேயே, இயேசுவும் தமது சபையை நேசிக்கின்றார். அவர் சபையைப் பாதுகாத்து, அவளுடைய நன்மைக்கேதுவாக அவளைப் பராமரிக்கின்றார்.

மாற்கு 10:7.

## ஜூலை 19

**"மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்: ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான்." நீதிமொழிகள் 29:11.**

ஒரு காரியத்தை கவனமாக எண்ணிப்பார்க்க நாம் நேரம் எடுத்துக் கொள்வதற்குமுன், அவசரப்பட்டு நாம் பேசிவிடுவதுண்டு. இப்படியாக நம்முடைய எண்ணங்களை நாம் வெளிப்படுத்தும்போது, சில சமயங்களில் அவை முற்றிலுமாக, முட்டாள்தனமுள்ளதாக இருக்கும். அதிக ஜாக்கிரதையாக ஆழ்ந்து பேசும்போது, நம்முடைய வார்த்தைகள் அதிக பயனுள்ளதாக இருக்கும். "எல்லா சந்தேகங்களையும் நிவிர்த்திசெய்ய பேசுவதைக் காட்டிலும், அமைதியை காத்துக்கொண்டு, பிறரால் மதியீனன் என்று எண்ணப்படுவது மேல்" என்று ஆபிரகாம் லிங்கன் கூறுகிறார்.

சங்கீதம் 1:7.

## ஜூலை 20

**"தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்." நீதிமொழிகள் 25:28.**

முற்காலங்களில், சுவர்கள் இல்லாதிருக்கும் பட்டணத்தைக் கைப்பற்றுவதும், உள்ளே நுழைவதும் மிகவும் சுலபமான காரியமாக இருந்தது. நம்முடைய ஜீவியத்திற்கான வழிகாட்டியாக செயல்படுவதற்கு சுயக் கட்டுப்பாடு மற்றும் சிறந்த ஒழுக்க நெறிகளோ நாம் பெற்றிருக்கவில்லையென்றால், நாமும் சுவர்கள் இல்லாதது போலவே கருதப்படுவோம். பிறகு, சுயநலம் மற்றும் அழிவுக்குரிய சிந்தைகளும், கிரியைகளும் உள்ளே நுழைந்து, நம் ஜீவியத்தை சுலபமாக ஆட்கொள்வதற்கு ஏதுவாகிவிடும்.

ரோமர் 6:12.

## ஜூலை 21

**"நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று.. நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. " ரோமர் 13:11.**

தேவனுக்கு ஊழியம் செய்யவும், பரலோகத்தில் அவரோடுகூட ஜீவிக்கவும் தேவன் கொடுத்திருக்கும் அழைப்பு மீண்டும் கொடுக்கப்பட மாட்டாது. மற்றும் இந்த யுகத்திற்குரிய வாய்ப்பு மிக விரைவில் முடிவடைகிறதாக இருக்கிறது. நாம் சோம்பலுள்ளவர்களாய் இருந்தாலோ அல்லது தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு நம் ஜீவனை தத்தம் செய்வதற்கு ஒரு முடிவு எடுக்க தவிர்த்து இருந்தாலோ, அப்படிப்பட்ட முடிவை மீண்டும் எடுக்க இதுவே காலமாக இருக்கிறது.

1 கொரிந்தியர் 15:34.

## ஜூலை 22

**"பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம் . . . நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள். " கொலோசெயர் 1:4,5.**

உயிர்த்தெழுப்பப்பட்டு, பரலோகத்தில் வாசம் செய்யும் இந்த நம்பிக்கையைக் குறித்து வேதாகமத்தில் பலமுறை இயேசுவின் பின்னடியார்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அதாவது, கிறிஸ்தவர்கள் பரமபிதாவோடும், அவருடைய நேச குமாரனோடும் நித்திய நித்திய காலத்திற்கும் தங்கியிருந்து, பூமியை பரதீசாக செய்வதற்கும், ஜனங்கள் பரிபூரண நிலையை அடைவதற்கு உதவி செய்யும் அற்புதமான வேலையில் பங்கு கொள்ளக்கூடியவர்களாக இருப்பர் என்ற இந்த நம்பிக்கையை அவர்கள் நேசத்தோடு பற்றிக்கொண்டிருக்கின்றனர்.

1 பேதுரு 1:4.

## ஜூலை 23

**"தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்." அப்போஸ்தலர் 10:34.**

தேவன், அன்பிலும், நீதியிலும், ஞானத்திலும், வல்லமையிலும் பூரணமுள்ளவராக இருக்கின்றார். தேவன், அவரை அறியவும், தொழுது கொள்ளவும், ஒவ்வொருவருக்கும் போதிய ஒரு முழுமையான வாய்ப்பைக் கொடுப்பார். மற்றவர்களை விட சில ஜனங்களுக்கு மட்டும் தேவன் பட்சபாதமுள்ளவராக இருப்பதில்லை. அவருடைய பார்வைக்கு சகல ஜனங்களும் விலையேறப் பெற்றவர்களே

2 நாளாகமம் 19:7.

## ஜூலை 24

**"நீங்கள் எனக்குக் தீமைசெய்ய நினைத்தீர்கள்: தேவனோ, . . . அதை நன்மையாக முடியப்பண்ணினார்." ஆதியாகமம் 50:20.**

யோசேப்பின் சகோதரர்கள் அவரை கொலை செய்யும்படி பேசிக் கொண்டனர். ஆனால், அதற்கு பதிலாக அவர்கள் அவரை அடிமையாக விற்று, ஒரு காட்டு விலங்கு அவரை கொன்று விட்டதாக தங்கள் தகப்பனிடம் கூறினார். அநேக வருஷங்களுக்குப் பின்னர், அவர்கள் மீண்டும் யோசேப்பை சந்தித்தபோது, விசேஷமாக அவர்கள் செய்த காரியத்திற்காக அவர்கள் எவ்வளவாய் வருத்தப்பட்டார்கள் என்பதை யோசேப்பு அறிந்தபோது, அவர், அவர்கள் மீது மனஸ்தாபம் கொள்ளவும் இல்லை, கோபம் கொள்ளவும் இல்லை. தம்முடைய சகோதரர்கள் மற்றும் தகப்பன் உட்பட அநேக ஜீவன்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்தே தேவன் தன்னை தானியங்கள் சேர்ப்பதற்கென்று, எகிப்துக்கு அனுப்பினார் என்பதை யோசேப்பு அறிந்திருந்தார்.

ஆதியாகமம் 45:5.

## ஜூலை 25

**"ஆவியின் கனியோ அன்பு" – கலாத்தியர் 5:22.**

இயேசு தம்முடைய ஜனங்கள் இருதயம் மற்றும் குணநலன்களின் வளர்ச்சியாகிய கனியைக் கொடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தம்மை திராட்சச் செடிக்கும் தமது ஜனங்களை கொடிகளுக்கும் ஒப்பிடுகிறார். இக்கனிகளில் ஒன்று அன்பு. இங்கு அன்பு என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையானது, அகாபே என்பதாகும். பிரதிபலன் எதிர்பார்க்காத, நிபந்தனையற்ற கருணைஅன்பே உச்சநிலையான அன்பாகும். தேவன் நம்மை நேசிப்பதுபோல நாம் பிறரை நேசிக்கவேண்டும்.

## ஜூலை 26

**"ஆவியின் கனியோ, . . . சந்தோஷம்." கலாத்தியர் 5:22.**

சந்தோஷம் என்பது உற்சாகம் அடைதல், மகிழ்தல், அமைதலுடன் பெருமகிழ்ச்சி கொள்ளுதல் ஆகும். தேவன் நம்மை பராமரிக்கின்றார் என்றும், ஜெபத்தின் மூலம் அவரிடத்திலும் சென்று பெலனடையவும், வழிநடத்தப்படவும், அவரால் ஆறுதல் அடையவும் ஏதுவாகிறது என்பதை அறிவது, உண்மையில் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

யோவான் 15:11.

## ஜூலை 27

**"ஆவியின் கனியோ, . . . சமாதானம்," கலாத்தியர் 5:22.**

சமாதானம் என்பது அமைதல் அல்லது இளைப்பாறுதல் என்பதாகும். ஆதிக்காலமுதல் தேவன் அனைத்து ஜனங்களுக்காகவும் இந்த உலகத்தை, ஒரு பரதீசாகிய தோட்டமாக அமைப்பதற்குரிய திட்டத்தை செயல்படுத்துகிறார் என்பதை அறியும்போது, நம் இருதயத்தில் ஒரு சமாதானம் கிடைக்கிறது. இந்த சமாதானம், நம்முடைய ஜீவியத்தில் சோகமான நிகழ்வுகள் சம்பவிக்கும் தருணத்திலும் கூட நிலைத்திருக்க வேண்டும். நாம் தேவனிடத்தில், நம்முடைய ஜீவனை தத்தம் செய்திருக்கிறோம் எனில், இப்படிப்பட்ட விரும்பத்தகாத சமயங்களும், நம்முடைய கிறிஸ்தவ குணநலன்களை வளர்க்கிறது என்பதில் நாம் உறுதி கொள்ளலாம்.

ஏசாயா 26:3.

## ஜூலை 28

**"ஆவியின் கனியோ, . . . நீடியபொறுமை. " கலாத்தியர் 5:22.**

நமக்கு வரும் சில கடினமான பாடங்கள், நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதற்காகவே அனுமதிக்கப்படுகிறது. மனித சுபாவமானது, தனக்கு வேண்டும் என்ற விஷயத்தை விரும்பும் தருணத்திலேயே பெற்றுக்கொண்டாக வேண்டும் என்ற தன்மை உடையதாகும். நம் ஜீவியத்தை வழிநடத்துவதற்கு, நாம் தேவனை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, நாம் பொறுமையை கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கின்றது. மேலும், நம் சிந்தையில் உள்ளதை செயலில் பிரயோகிப்பதற்கு முன், நமக்காக தேவன் என்னென்ன வாய்ப்புகள் மற்றும் அனுபவங்களை வைத்திருக்கிறார் என்பதை பார்ப்பதற்குக் காத்திருக்க வேண்டும்.
கொலொசெயர் 1:10,11.

## ஜூலை 29

ஜூலை 29

**"ஆவியின் கனியோ, . . . தயவு "   கலாத்தியர் 5:22.**

மற்றவர்களின் உணர்வுகளை ண்ணிப் பார்த்து, அவர்களுடைய தேவைகளுககு பரிவு காண்பிக்கும்  இரகக்மும் மென்மையுமான (சாந்தமுமான) ஜனங்கள் மத்தியில் இருக்கவே ஒவ்வொருவரும் மகிழ்ச்சி கொள்வர். இவ்வசனத்தில குறிப்பிடப்பட்டிருக்கும் அகாப்பே அல்லது நிபந்தனையற்ற அன்பிாங்ன முக்கியமான அம்சம், சாந்தகுனம் ஆகும்.

யாக்கோபு 3:17

## ஜூலை 30

**"ஆவியின் கனியோ, . . . நற்குணம் "   கலாத்தியர் 5:22.**

ஒரு  அகராதி, நற்குணம் என்ற வார்த்தைக்கு, "மிகச் சிறந்த பகுதி" என்று கொடுத்திருக்கிறது. இதுவே நற்குணத்தின் சரியான பொருளாகும். கிறிஸ்தவர்கள் தங்களுக்குரிய சிறந்த பகுதிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த சிந்த பகுதிகள் வளர்கையில், குறுகிய மனப்பான்மை, மனக்கசப்பு,

பொறுமையின்மை முதலிய குனநலன்கள் குறைந்துவிடும்.

எபேசியர் 5:9.

## ஜூலை 31

**"ஆவியின் கனியோ, . . . விசுவாசம் "   கலாத்தியர் 5:22.**

முற்காலங்களில் , தேவன் தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுரைத்தபடியே ஏற்றகாலங்களில் நிறைவேறி வந்திருக்கிறது. நிறைவேறுதலுக்கான காலம் மறும் முறைகளை மனிதர்கள் எதிர்பார்க்கும் விதத்திலேயே தவறு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில நிகழப்போகும் சம்பவங்களிலும் அவர் உலகத்தின் மீது தமது ஆதிக்கத்தை வைத்திருப்பார் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய விசுவாசம் அதிகரிக்கும்.

எபிரேயர் 11:23.

## ஆகஸ்டு 1

**"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா: உங்ன கண்கள் என் வழிகளை நோக்குவதாக" – நீதிமொழிகள் 23:26.**

நாம் தேவனிடம் நம் இருதயங்களைக் கொடுக்கும்போது, நமக்கென்று ஏதும் வைக்காமல் முழுமையாகக் கொடுக்க வேண்டும். நமக்குண்டான யாவற்றையும், முழுமையாக நம்மையும் அவருடைய பணிக்கென்று சந்தோஷமாய் கொடுத்திருக்கிறோம். நாம் அவருடைய வார்த்தையை  ஆராய்வதன் மூலம் அவருடைய டாபெரும் திட்டத்தையும், அவருடைய குணநலனின் இயல்பையும் கற்றுக்கொள்கிறோம். இப்படியாக, அவரிடத்திலான நம்முடைய அன்பும், அதிகமான அறிவுக் கூர்மைக்கும் புரிந்துகொள்ளுதலுக்குமான நம்முடைய ஆர்வமும் அதிகரிக்கின்றது. இவைகளில் ஒன்று மற்றொன்றை சார்ந்ததாக இருக்கின்றது.

1 நாளாகமம் 11:10.

## ஆகஸ்டு 2

**"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால் , நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்." –ரோமர் 12:19.**

யாரேனும் ஒருவர் காயப்படுத்தும்போது, நாம் அதற்கு பழிவாங்காமல், கர்த்தர் அவருடைய

ஏற்றவேலையில் நியாயம் விசாரிகும்படி நாம் இருக்க வேண்டும். பழிவாங்குதல் என்பது, நியாயத்தீர்பை வழங்குவதாக இருக்கிறது. ஆகையால் இக்காரியத்தைச் செய்ய நாம் தகுதியற்றவர்களாக இருக்கின்றோம்.

உபாகமம் 32:35.

## ஆகஸ்டு 3

**"கர்த்தரிடத்தில், மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்." – சங்கீதம் 37:4.**

கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாயிருப்பது என்பது அவருடைய சித்தத்தையே நம்முடைய அன்பின் மையமாக வைப்பது என்று பொருள்படும். அதாவது, நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவருடைய சித்தத்திற்காகவும் வழிநடத்துதலுக்காகவும் நாம் எதிர்ப்பார்த்திருப்பதைக் குறிக்கும். ஏனெனில், அவருடைய சித்தமே நம் சித்தம் ஆகும். அவருடைய சித்தமே நம்முடைய சித்தமாக இருக்கின்ற காரணத்தினால், நமக்கான அவருடைய நோக்கங்களுக்கும், திட்டத்திற்கும் நம்முடைய இருதயத்தின் விருப்பங்கள் இசைவாய் இருக்கும் பட்சத்தில், அவைகளை (இருதயத்தின் விருப்பங்கள்) நமக்கு வழங்குவதில் அவர் பிரியம் உள்ளவராக இருப்பார்.

ஏசாயா 58:14.

## ஆகஸ்ட் 4

**"இயேசு கண்ணீர் விட்டார்." யோவான் 11:35.**

இயேசுவின் அன்புக்குரிய நண்பனான லாசரு மரித்துப்போனபோது, அவருடைய சகோதரிகளான மரியாளும், மார்த்தாளும் கண்ணீர் விட்டனர். இயேசு அவர்களுக்காக அனுதாபப்பட்டு, அவரும் கண்ணீர் விட்டனர். பிறகு, மரித்தோர் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று அக்காலத்தைக் குறித்த எடுத்துக்காட்டாக இருக்கும்படி இயேசு, மரணமாகிய நித்திரை நிலையிலிருந்து லாசருவை எழுப்பினார். இயேசு பிறந்த அன்று இரவு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி குறித்து தூதன் பேசினது, எந்த ஆச்சரியமும் இல்லை.

லூக்கா 19:41.

## ஆகஸ்ட் 5

**"நான் உம்முடைய (தேவனுடைய) வார்த்தையை அவர்களுக்குக் (இயேசுவின் பின்னடியார்கள்) கொடுத்தேன்: நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல: ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது " –
யோவான் 17:14.**

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த அநேக, ஜனங்கள் அவரை வெறுத்தனர். ஏனென்றால், தேவனுடைய கொள்கைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிவதில் குறைவுபட்டிருந்ததை அவருடைய நற்குணம் வெளிப்படுத்தியது. தம்முடைய பின்னடியார்களும் அவர்களுடைய ஜீவியங்களில் இது உண்மையான கண்டுகொள்வார்கள் என்று இயேசு அறிந்திருந்தார்.

1 யோவான் 3:13.

## ஆகஸ்ட் 6

**"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து. "
எபேசியர் 5:18.**

சிலர் தங்களுடைய பிரச்சனைகளை தற்காலிகமாக மறப்பதற்கென்று மதுபானம் பருகுவதுண்டு. இடர்பாடுகளை நீக்க வழிகண்டு பிடிப்பதற்குப் பதிலாக மதுபானம் அருந்துவது, அநேகரை மேலும்

பாதகமான சூழ்நிலைக்கு தள்ளி, வேறே பிரச்சனைகள் உண்டாகக் காரணமாகிறது. கிறிஸ்தவர்களாகிய நாமோ, தீங்கு விளைவிக்கக்கூடிய அதிகப்படியான மதுபானம் அருந்துதலை தவிர்த்து, நம்முடைய குணநலன்களின் வளர்ச்சிக்காக நம்முடைய சிந்தை மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு திறன் மற்றும் தாலந்தை தேவனுடைய சித்தத்திற்கென்று முழுமையான அர்ப்பணிப்புக்குள் கொண்டுவருவோமாக.

நீதிமொழிகள் 20:1.

## ஆகஸ்ட் 7

**"நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." – மத்தேயு 11:24.**

கப்பர்நகூமிலிருந்த ஜனங்கள் இயேசுவின் வல்லமை வாய்ந்த கிரியைகளைப் பார்க்கவும், அவருடைய போதனைகளைக் கேட்கும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்தனர். இதை எல்லாவற்றையும் பெற்றிருந்தாலும், அவர்கள் மனம் திரும்பவில்லை. ஆனால், சோதோமியரோ, சுவிசேஷத்தின் நற்செய்தியைக் கேளாமலும், மனம் திரும்புதலுக்கான வாய்ப்பு இல்லாமலும் அழிக்கப்பட்டதினால், அந்த அளவு தங்கள் பாவங்களுக்குப் பொறுப்பானவர்கள் அல்ல.

லூக்கா 10:12.

## ஆகஸ்ட் 8

**"கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம்
ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது" – மல்கியா 3:16.**

தேவன், தாம் செய்கிற காரியங்களை விவரிப்பதில் நம்மால் புரிந்துகொள்ள இயலும் முறைகளையே பயன்படுத்துகிறார். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருக்கும் நிஜமான புத்தகம் உண்டோ, இல்லையோ, என்பது தெரியவில்லை. என்றாலும், அவரை பிரியப்படுத்த முயற்சிப்பவர்கள் மற்றும் அவருடைய சித்தம் செய்வதற்கு தங்கள் நேரத்தை செலவிட நாடுபவர்கள் அனைவரையும் அவர் அறிவார் என்ற கருத்தே விளங்குகிறது.

வெளிப்படுத்தல் 3:5.

## ஆகஸ்ட் 9

**"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், " எபேசியர் 4:14.**

தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்கத்தொடங்கின ஆரம்ப நாட்களில், சிறு குழந்தைகளாக இருந்த நாம், எளிமையான விஷயங்களை மாத்திரமே புரிந்துகொள்ள முடிந்தது. காலம் செல்ல செல்ல நம்முடைய ஆராய்ச்சியை நாம், தொடரும்போது, நாம் வளர்ச்சியடைந்து பலமுள்ளவர்களாக மாறுவோம். அப்பொழுது நாம் தேவனிடத்திலிருந்தும், சத்தியத்தினிடத்திலிருந்தும் விலகி வழிநடத்திச் செல்லும் கள்ளப்போதனைகளாலோ அல்லது கள்ளப்போதகர்களாலோ நாம் தவறான பாதையில் வழிநடத்தப்படாமல் இருப்போம்.

எபிரெயர் 13:9.

## ஆகஸ்ட் 10

**"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்" – சங்கீதம் 37:23.**

தேவன் நம்முடைய வாழ்க்கையை இயக்குகிறவராக இருந்தால், எந்த அனுபவமும், "அதிர்ஷ்டம்" அல்லது "துர்அதிர்ஷ்டம்" என்று கருதப்படுவதில்லை. ஏனெனில், நம்முடைய எல்லா சூழ்நிலைகளையும்

அவர் வனைகிறவராய் இருக்கிறார். நம் சொந்த முடிவுகள் எடுப்பதற்கு நாம் சுதந்திரவாளிகளாய் இருக்கிறோம். ஆனால், அவைகள் அவருடைய பரிசுத்தமான வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கும்போது, அவை முடிவாக நம்முடைய நன்மைக்கேதுவாகவே செயல்படும் என்பதை நாம் அறிந்துகொள்வோம்.

நீதிமொழிகள் 16:9.

## ஆகஸ்ட் 11

**"கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" – மத்தேயு 23:10.**

இயேசு மெய்யான குருவும், போதகரும், தலைவருமாக இருந்தார். அவரால் கற்பிக்கப்பட்டு அல்லது பயிற்சி பெற்றவர்களோ, சீஷர்கள் அல்லது பின்னடியார்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசு சாதாரண எந்த ஒரு போதகரைக் காட்டிலும் மிகவும் பெரியவராக இருந்தார். ஏனெனில், அவர் தேவனுடைய குமாரனும், பரிபூரணருமாக இருந்தார்.

மத்தேயு 23:8.

## ஆகஸ்ட் 12

**"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்: கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது" மத்தேயு 7:13.**

அகலமான ஒரு வாசல் நுழைவதற்கு சுலபமாக இருக்கும். இந்த வாசல், நம்முடைய சொந்த விருப்பத்திற்காகவும், சுயத்தைப் பூர்த்தி செய்வதற்காகவும் வாழ்வதை உருவகப்படுத்துகிறது. இதற்கான பரிசு தற்காலிகமானது. வருங்காலத்தில் நமக்காக ஆயத்தப்பட்டிருக்கும் நிரந்தரமான தேவனுடைய ஆசீர்வாதங்களை நோக்கி வழிநடத்திச் செல்லக்கூடிய இடுக்கமான வாசலுக்குள் நாம் நுழையும்முன் நம்முடைய இரட்சகராக இயேசுவை பெற்றிருப்பது அவசியமாகும்.

யோவான் 10:9.

## ஆகஸ்ட் 13

**"உபத்திரவம் பொறுமையை .. உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் – ரோமர் 5:3**

பிரச்சனைகளையும் பரீட்சைகளையும் பெற்றிருக்கும்போது, நம்மால் எவ்வாறு சந்தோஷமாக இருக்கமுடியும், கிறிஸ்து கடந்துசென்ற பாதைகளைப்போலவே நம்முடைய பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளவும் அல்லது பொறுமையுடன் சகித்துக்கொள்ளவும் அறிந்திருந்தால் மட்டுமே, நம்முடைய கிறிஸ்தவ குணநலனை வளரச்செய்யமுடியும். "கர்த்தாவே எனக்கு பொறுமையைக் கொடுத்தருளும், இப்பொழுதே கொடுத்தருளும்!" என்று பொறிக்கப்பட்ட அலங்காரத்தட்டை நாம் அடிக்கடி பார்த்திருப்போம். இந்த வாசகம், பொறுமை என்பது ஒரு வரம் என்பதுபோல் தெரிவிக்கிறது. எப்படியாயினும், நம்மில் பெரும்பாலானவர்கள் அநேக அனுபவங்கள் வாயிலாக தேவன்மீது வருடக்கணக்காக நம்பிக்கை வைக்கும்போதே பொறுமையானது வளர்கின்றது.

மத்தேயு 5:11

## ஆகஸ்ட் 14

**"மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்"**

உணவு பரிமாறுவதில் தனக்கு மரியாள் உதவி செய்யாமல், இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்ததைக் குறித்து மார்த்தாள் குறைகூறினபோது, இயேசு

இவ்வார்த்தைகளைக் கூறினார். இவ்வசனம்,நம் அன்றாட ஜீவியத்தின் விஷயங்களைக் காட்டிலும் முக்கியமானதாக இருப்பவைகளை, அதாவது இயேசுவைக்குறித்து கற்றுக்கொள்ள எந்தவகையில் வாய்ப்புக்கள் கிடைத்தாலும் அவைகளை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதை நமக்கு காட்டுகின்றது.

நீதிமொழிகள் 23:12

## ஆகஸ்ட் 15

**"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்'' – லூக்கா 19:10**

ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனபோது, எதை இழந்துபோனார்? அவர் தன் ஜீவனையும் அதே சமயம் மனிதனின் பூரணத்தையும் மற்றும் பூமியில் இருந்த பரதீசாகிய வீட்டையும் இழந்துபோனார். கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின்போதும், அரசாட்சியாலும் இவையாவும் திரும்ப கொடுக்கப்படும். ஏனெனில் நம்முடைய மீட்பரின் மூலமாக அவைகள் மீண்டும் விலைக்கு வாங்கப்பட்டு மீட்கப்பட்டு இருக்கின்றன.

யோவான் 3:17.

## ஆகஸ்ட் 16

**"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" – ஏசாயா 35:5, 29:18.**

கிறிஸ்துவின் இராஜ்யம் பூமியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, ஒருவரும் குருடராகவோ, செவிடராகவோ அல்லது எவ்வகையிலும் ஊனமாகவோ இருப்பதில்லை. தேவனுடைய நீதியும் நன்மையுமான பிரமாணங்களை தற்காலத்தில் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினால், குருடரும் செவிடருமாய் இருக்கும் ஒவ்வொருவரும், அக்காலத்தில் அவைகளை புரிந்துகொள்வார்கள்.

ஏசாயா 29:18.

## ஆகஸ்ட் 17

**"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, . . . நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்." லூக்கா 6:38.**

ஒரு பாத்திரம் முதன்முதலில் மாவால் நிரப்பப்படும்போது, உண்மையில் அது நிறைந்திருக்கும். ஆனால், அதை நீங்கள் குலுக்கி நன்கு கீழாக அழுத்தி அதின்மீது இன்னும் அதிகமாக குவித்தால் அந்த பாத்திரத்தில் இன்னும் அதிக மாவை உங்களால் பெறமுடியும். தேவன் நம்மை அநேக நற்காரியங்களால் ஆசீர்வதித்திருக்க நாம் பெருந்தன்மையுள்ளவர்களாக இருந்து, நாம் பெற்றுக்கொண்டிருப்பது எதுவோ, அதை சொல்லர்த்தமாகவே மற்றவர்களுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

மத்தேயு 7:2.

## ஆகஸ்ட் 18

**"விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. "**
**– 1 தீமோத்தேயு 1:2.**

அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவை ஒரு குமாரனாகவும், ஒரு சகோதரனாகவும் நேசித்தார். காரணம், அவர்கள் இருவரும் தேவன் மீதும், இயேசுவின் மீதும் ஆழமான விசுவாசம் கொண்டிருந்தார். இந்த நிரூபத்தில், தீமோத்தேயு தேவனுடைய தயவைப் பெற்றிருக்கவும், தம்முடைய வாழ்வில் தேவன் கிரியை செய்து வருகிறார் என்பதை அறிந்திருந்து, தம்மால் முடிந்த அளவு தேவபணி செய்வதனால் மட்டும் கிடைக்கப்பெறக்கூடிய சமாதானத்தை தேவன் அவருக்கு கொடுக்கவும், தீமோத்தேயுவை பட்சமாய் நடத்தவும், அப்போஸ்தலர் பவுல், ஜெபித்திருக்கிறார்.

2 தீமோத்தேயு 1:2.

## ஆகஸ்ட் 19

**"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்: இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்." – சங்கீதம் 118:24.**

ஒவ்வொரு நாளும் தேவனிடமிருந்து வரும் ஓர் ஈவு ஆகும். நம்முடைய அன்றாட வாழ்வில் நமக்காக அவர் அனுமதித்திருக்கும் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளுக்காக, நாம் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கக்கடவோம். இப்பாடங்கள் மூலமாக மட்டுமே, என்றென்றும் சந்தோஷம் பெற்றிருக்க முடியும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

ஆதியாகமம் 1:3–5.

## ஆகஸ்ட் 20

**"பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம் வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை. " நீதிமொழிகள் 16:16.**

அதிகளவில் செல்வத்தை சம்பாதிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய பரிபூரண குணலட்சணங்களாகிய ஞானம், நீதி, அன்பு, வல்லமையையும், மனுக்குலம் அனைவருக்குமான அவருடைய திட்டத்தையும் குறித்ததான அறிவை பெற்றுக்கொள்வதே அதிக முக்கியமானதாகும்.

நீதிமொழிகள் 3:13,14.

## ஆகஸ்ட் 21

**"மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்." – லூக்கா 18:8.**

இன்று உலகில் வெகுசில ஜனங்களே வேதத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்ற உண்மை ஆச்சரியமானதல்ல. இந்நிலையை இயேசு முன்னறிந்து, அதை முன்கூட்டியே அறிவித்திருக்கிறார். கிறிஸ்தவர்கள் உலகமுழுவதும் சாட்சியாய் பிரசங்கிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருக்கின்றார். மாறாக, அவர்களுடைய சாட்சியம் உலகத்தை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற செய்யும் என்று அறிவிக்கப்படவில்லை. இராஜ்யத்தில் தேவனே ஜனங்களின் இருதயத்தில் அவருடைய பிரமாணங்களை எழுதும்போது, இக்காரியம் நிகழ்ந்தேறும்.

எசேக்கியேல் 38:20.

## ஆகஸ்ட் 22

"கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால் (எண்ணுவீரானால்), யார் நிலைநிற்பான், ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. " **சங்கீதம் 130:3,4.**

நம்முடைய இருதயங்கள் செம்மையாக இருக்கும்போதும், நம்முடைய குறைபாடுகளுக்காக நாம்

அன்றாடம் மன்னிப்புக்கோரும்போதும், நமக்கு எதிராக நம்முடைய குறைபாடுகளை அவர் எண்ணுவதில்லை என்ற தேவனுடைய வாக்குறுதியைப் பெற்றிருப்பதற்கு நாம் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

சங்கீதம் 32:5.

## ஆகஸ்ட் 23

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்." – ரோமர் 1:16.

மனுக்குலத்திற்கான தேவனுடைய அன்பை குறித்ததான சத்தியங்களும், அவர்களுக்கான அவருடைய திட்டங்களுமாகிய கிறிஸ்துவின் சுவிசேஷம் அருமையாக இருக்கின்றபடியினால், அவைகளுக்கு செவிசாய்க்கின்ற யாவருக்கும் இதை அறிவிக்க அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இதை செய்ய அவர் வெட்கப்படவில்லை. ஏனெனில், சுவிசேஷம் என்பதற்கு, "நற்செய்தி" என்று பொருளாகும். இந்த நற்செய்தியை நம்முடைய நண்பர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதைப் பார்க்கிலும், நலமானதாக நாம் வேறொன்றையும் அவர்களுக்கு கொடுக்கவோ, செய்யவோ முடியாது.

2 தீமோத்தேயு 1:8.

## ஆகஸ்ட் 24

**"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூறுவாயாக. " மத்தேயு 22:37.**

இதுவே கட்டளைகளில் மிகவும் பிரதானமானது என்று இயேசு கூறினார். வேறேந்த பொருளைப் பார்க்கிலும் நாம் தேவனை அதிகமாக நேசித்தால், அவரை பிரியப்படுத்தும் காரியங்களையே நாம் செய்ய மனதாயிருப்போம். மேலும், நாம் சுயநலமற்றவர்களாக இருக்க முயற்சித்து மற்றவர்கள் மீது கவனம் வைத்து, அவர்களுக்கு உதவி செய்து, கர்த்தருடைய வார்த்தையை கற்று அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு கிட்டத்தட்ட இயேசு வாழ்ந்ததுபோலவே, முடிந்தளவு நம்முடைய வாழ்க்கையை வாழ முயற்சிக்கிறவர்களாகவும் இருப்போம்.

உபாகமம் 6:5.

## ஆகஸ்ட் 25

**"உம்முடைய எல்லா ஊழியக்காரரிலும் தாவீதைப்போல, . . . உண்மையுள்ளவன் யார் ?" 1 சாமுயேல் 22:14.**

தேவனுடைய இருதயத்திற்கேற்ற மனுஷனாக தாவீது இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அது ஏன் என்று சங்கீத புத்தகங்களைப் படித்தால் புரிந்துகொள்ளலாம். தாவீது அடிக்கடி துதியின் வார்த்தைகளையும், **தேவனுக்கான அன்பையும்**, அவருடைய அற்புதமான சிருஷ்டிப்பையும் குறித்து எழுதி இருக்கிறார். தாவீது தேவனுடைய மாட்சிமையை நன்கு புரிந்துவைத்திருந்து அவருக்கு மகிமை, கனம் மற்றும் துதிகளை ஏறெடுத்தார்.

1 சாமுயேல் 18:12.

## ஆகஸ்ட் 26

**"அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார்." 1 யோவான் 4:8.**

இங்கு அன்பிற்காக உபயோகப்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை அகாபே என்பதாகும்.

இவ்வகை அன்பு நிபந்தனையற்றது. இது தகுதியை எதிர்நோக்குவதில்லை. தேவன் அன்புகூருகிறார். ஏனெனில், அன்புகூருவது அவருடைய குணநலன்களில் ஒரு பகுதியாக இருக்கிறது. வேதத்தில் வேறு விதமான அன்பு குறித்து, விதவிதமான வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **அதாவது, வேறுவகையான அன்பு.** கடமை அன்பு, நண்பருக்கான அன்பு அல்லது உணர்ச்சிவசமான அன்பு. ஆனால், அகாபே அன்பு மிகச் சிறந்தது. இந்த அன்பு இருந்தால், மற்றவர் எதை செய்தாலும் நாம் பொருட்படுத்தாமல், அன்பு மட்டுமே தொடர்ந்து செய்வோம்.

1 யோவான் 4:20.

## ஆகஸ்ட் 27

**"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது: இவைகளில் அன்பே பெரியது "**
**– 1 கொரிந்தியர் 13:13.**

அன்புக்காக இங்கு உபயோகித்திருக்கும் வார்த்தை நேற்றைய மன்னா பகுதியில் உள்ளதுபோலவே காணப்படுகிறது. இது தகுதியை எதிர்நோக்குவதில்லை. இது, நிபந்தனையற்ற அகாபே அன்பு. தேவனிடத்தில் விசுவாசம், அவருடைய வாக்குத்தத்தங்கள் மீது நம்பிக்கையும் கொண்டிருப்பது முக்கியமானதாக இருந்தாலும், அன்பில்லாமல் அவை பூரண பயன்தாரது.

மாற்கு 12:30,31.

## ஆகஸ்ட் 28

**"உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு, போய்ப்பாருங்கள் என்றார். அவர்கள் பார்த்துவந்து: ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு என்றார்கள். " மாற்கு 6:38.**

இயேசுவின் அற்புதங்கள் வரவிருக்கும் அவருடைய இராஜ்யத்தில் பூமியின் சகல ஜனங்களின் தேவைகளை சந்தித்து திருப்திபடுத்தும் ஆசீர்வாதங்களுக்கு எப்பொழுதும் நிழலான காட்சியாய் இருக்கிறது. அற்புதம் என்பது, தேவனுடைய வல்லமையினால் மட்டுமே செயல்படுத்தக்கூடிய ஒரு செய்கையாகும். இல்லையென்றால், 5 அப்பம், 2 மீன்களை மட்டுமே வைத்து, 5000 புருஷர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் போஷிப்பது எவ்வாறு சாத்தியமாகும்.

மத்தேயு 14:17.

## ஆகஸ்ட் 29

**"அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" – 2 தீமோத்தேயு 2:12.**

கிறிஸ்துவின் இராஜ்யத்தில், அவரோடுகூட ஆளுகை செய்வது என்பது, நம்முடைய உண்மையான வாஞ்சையாக இருந்தால், நாம் சோதிக்கப்படுவதின் மூலம் நம்முடைய உண்மையை நிரூபிக்க வேண்டியது நமக்கு அவசியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த பரீட்சைகள் யாவும், நம்முடைய குணநலன்களை வளர்த்துக் கொள்ளவும், நம்முடைய பரம பிதாவினிடத்திலும், அவருடைய குமாரனாகிய இயேசுவினிடத்திலும் நாம் கொண்டுள்ள அன்பு மற்றும் கீழ்ப்படிதலை நிரூபிக்கவும் நமக்கு உதவுவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.

2 பேதுரு 4:13.

## ஆகஸ்ட் 30

**"நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" – ஏசாயா 43:12.**

தேவன் இஸ்ரயேலருக்கு அநேக வாக்குத்தத்தங்கள் கொடுத்திருந்தார். அவைகளில் சில ஏற்கனவே நிறைவேறிற்று. மற்றவை இனி நிறைவேற இருக்கிறது. வாக்குத்தத்தங்களின் ஒரு பகுதியாக யூதர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பி, மீண்டும் ஒருமுறை ஒரு தேசமாக உருவாகிய சம்பவம் இந்த இருபதாம் நூற்றாண்டில் நிறைவேறிற்று. இவரே தேவன் என்று நிரூபிப்பதற்கும், தேவனிடத்தில் உண்மையாயிருந்து வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும், இஸ்ரயேலரே சாட்சிகளானார்கள்.

ஏசாயா 44:8.

## ஆகஸ்ட் 31

**"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" – யூதா 21.**

இவ்வசனம் இரண்டு கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. அது என்னவெனில், தேவன் நம்மிடத்தில் பாராட்டும் அன்பு மற்றும் அவரிடத்தில் நாம் பாராட்டும் அன்புமாகும். நாம் தேவனுடைய அன்பிலே நம்மை காத்துக்கொண்டு, அவருடைய வார்த்தையை ஆராய்வதன் மூலமும், அவரிடம் ஜெபிப்பதன் மூலமும், நாம் எதை செய்தாலும், பேசினாலும் எல்லாவற்றிலும் அவரை பிரியப்படுத்த முயற்சிப்பதன் மூலம் அவர் நம்மிடத்தில் பாராட்டின அன்பை நாம் உணர்ந்து கொண்டிருப்பதை வெளிக்காட்டுகிறோம். தம்முடைய நேசக்குமாரனை பரிசாகக் கொடுத்ததின் மூலம், தேவன் நம்மிடம் பாராட்டின அன்பை வெளிக்காட்டினார்.

1 தீமோத்தேயு 4:10.

## செப்டம்பர் 1

**"சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்" – சங்கீதம் 143:3.**

நாம் தேவனுடைய நன்மையானவைகளை சிந்தித்து, அவர் நமக்கு சரியான பாதையை காண்பிக்கும்படி அவரிடம் வேண்டிக்கொள்வதன் மூலம் ஒவ்வொரு நாளையும் துவங்குவோமாக. அப்பொழுது நாம், நமக்கு நேரிட்ட அனைத்து காரியங்களுக்காகவும், நாம் கற்றுக்கொண்ட பாடங்களுக்காகவும்,, அவருக்கு நன்றிகளை ஏறெடுக்கக்கூடியவர்களாக இருப்போம். அந்த நாளின் முடிவில், அவருடைய உதவியைக் கொண்டு நம்மால் இயன்ற அளவு சிறப்பாக செய்ய முயற்சித்திருப்பதை உணர முடியும்.

சங்கீதம் 5:3.

## செப்டம்பர் 2

**"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" – மீகா 6:8.**

நியாயம் செய்வது : மற்றவர்கள் நமக்கு செய்ய வேண்டும் என நாம் விரும்புவது எதுவோ, அதை நாமும் மற்றவர்களுக்கு செய்வதாகும். இரக்கத்தை சிநேகிப்பது : மற்றவர்களிடம் இரக்கமும், அன்பும், புரிந்துகொள்ளுதலையும் காண்பிப்பதாகும். தேவனிடத்தில் மனத்தாழ்மையாய் நடப்பது : கற்றுக்கொள்ளும் மனப்பான்மையோடு சிந்தையை காத்துக்கொள்வதும், தேவனுடைய மகத்துவத்தையும், நம்முடைய கீழான நிலையையும் உணர்வதாகும்.

உபாகமம் 10:12.

## செப்டம்பர் 3

**"இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே, யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.. கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே. " யாக்கோபு 5:11.**

தேவனுடைய தீர்க்கதரிசிகள், பொறுமையோடே துன்பத்தை சகித்ததற்கு திருஷ்டாந்தமாக இருக்கின்றனர். யோபுவுக்கு மிகுந்த உபத்திரவமும், துக்கமும் உண்டானபோதும், அவர் தொடர்ந்து தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். தேவன் யோபுவின் ஜீவனைத்தவிர மற்றெல்லாவற்றையும் எடுத்துக்கொள்வதன் மூலம் அவருடைய உண்மையை சோதிக்கும்படி, சாத்தானை அனுமதித்தார். இறுதியாக அவருடைய உடல்நலம் மீண்டும் முன் இருந்த நிலைக்கு கொண்டுவரப்பட்டு, அவர் இழந்த யாவற்றையும் காட்டிலும் இன்னும் அதிகப்படியாக திரும்பப் பெற்றுக்கொண்டார்.

ரோமர் 5:3.

## செப்டம்பர் 4

**"துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்" – தீத்து 3:1.**

நம்முடைய அரசாங்க சட்டதிட்டங்கள் தேவனுடைய சட்டங்களுக்கு எதிராக இராதிருக்கும் பட்சத்தில், நாம் அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக இருக்கும் பட்சத்தில், சட்டம் மீறுதல் அல்லது கலகங்களில் பங்குகொள்ளாமல், தேவன் நமக்கு அனுமதித்திருக்கும் வேலையை செய்து, அமைதலாக செல்ல வேண்டும். அதாவது, அவருடைய சத்தியத்திற்கும் சாட்சி பகிர்ந்து முடிந்தளவு இயேசுவை போன்று, அவருடைய சாயலுக்கு ஏற்றவாறு, நம்முடைய ஜீவியத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

மாற்கு 12:17.

## செப்டம்பர் 5

**"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் (நோக்கத்தையும்) செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" – பிலிப்பியர் 2:13.**

தேவனிடத்தில் நம்மை ஒப்புக்கொடுத்த தருணத்திலிருந்து, நம்முடைய சொந்த இஷ்டப்படி செய்வதை விட்டுவிட்டு அவருடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொண்டு, நம் சொந்தக்காரியமாக இனி அவற்றை செய்ய வேண்டும். இந்த மாற்றங்கள் நம்முடைய ஜீவியங்களில் பிரதிபலிக்க ஆரம்பிக்க வேண்டும். அப்போது கிறிஸ்துவை போன்ற குணநலன்களில் அதிகமாக வளர்ச்சியடைய சாத்தியமாகும். பிறகு தேவனுடைய அற்புதமான திட்டத்தை செயல்படுத்துவதில் நாம் பங்கடையலாம்.

லூக்கா 11:2, யோபு 30:31.

## செப்டம்பர் 6

**"உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" – மத்தேயு 6:10.**

எல்லா ஜனங்களும் சேர்ந்து, தேவனுடைய சித்தத்தை இப்பூமியின்மீது செய்திருக்கவில்லை. இதனிமித்தம், எந்த இராஜ்யத்தைக் குறித்து ஜெபிக்கும்படி இயேசு நமக்கு கற்றுக்கொடுத்தாரோ, அந்த இராஜ்யம் இன்னும் எதிர்காலத்திற்குரியதாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கடந்த காலத்திற்குரிய தேவனுடைய தீர்க்கதரிசனங்கள் யாவும், நிறைவேறி தீர்ந்திருக்கின்றன. ஆகையால், இந்த தீர்க்கதரிசனங்களும் வரும் காலத்தில் நிறைவேறி தீரும் என, நாம் அறிந்திருக்கிறோம்.

யோவான் 6:40.

## செப்டம்பர் 7

**"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" – மத்தேயு 6:11.**

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கர்த்தர் இயேசு சாத்தானிடம் கூறினார். நம்முடைய சரீரங்களை போஷிப்பதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் உணவைப் பார்க்கிலும், ஒரு கிறிஸ்தவனாக ஆவிக்குரிய உணவினால், நாம் நம்முடைய சிந்தையை போஷிப்பது, அதிக முக்கியமானதாக இருக்கிறது.

சங்கீதம் 103:20.

## செப்டம்பர் 8

**"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"– மத்தேயு6:12.**

இந்த கடன்கள் அல்லது குற்றங்கள் என்பது, நம்முடைய அன்றாட தனிப்பட்ட பாவங்கள் மற்றும் மீறுதல்களே ஆகும். மாறாக ஆதாமுக்கும் அவருடைய சந்ததியினர் அனைவருக்கும் மரணத்தை விளைவாக ஏற்படுத்தியது ஆதாமின் பாவமல்ல . நாம் மன்னிப்பு பெற விரும்புவது போலவே, நாமும் மற்றவருக்கு மன்னிக்கும் விஷயத்தில் துரிதமாக இருப்போமாக.

லூக்கா 11:4.

## செப்டம்பர் 9

**"அவைகளை (தேவனுடைய கட்டளைகள்) உன் விரல்களில் கட்டி, அவைகளை (tablet) உன் இருதய பலகையில் எழுதிக்கொள்" – நீதிமொழிகள் 7:3.**

தேவனுடைய கட்டளைகளை நாம் விரல் நுனியில் வைத்திருப்போமானால், நம்முடைய கரங்கள் தேவனுடைய திட்டத்தை, இன்னும் கூடுதலாக செய்யும் விஷயத்தில் சுறுசுறுப்பாக காணப்படும். அவைகள் நம் இருதயங்களில் எழுதப்பட்டு, நம் சிந்தையிலும், அன்புணர்விலும் அவைகளை தெளிவாகவும், உயர்வாகவும் வைத்திருந்தால், நம் வாழ்வில் கசப்போ அல்லது தீமையோ எவ்வாறு இருக்கக்கூடும்.

உபாகமம் 6:6–8.

## செப்டம்பர் 10

**"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்: கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" – யோவான் 6:44.**

சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் நம் இருதயங்களை திறக்கின்றார். ஆனால், பிதாவாகிய தேவன், நம்மை இழுத்துக்கொள்ள முதலாவது, நாம் சில முக்கியமான குணாதிசயங்கள் பெற்றிருக்க வேண்டும். நாம் விசுவாசத்தோடும், திறந்த மனதோடும் அவரைநாடி அவரிடத்தில் கற்றுக்கொள்ளக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். நாம் மனத்தாழ்மையும், நேர்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய அன்பு, நம் இருதயங்களை தொடுகிறபடியால், ஒவ்வொரு வாய்ப்பிலும் அவரை துதிப்பதை நாம் அடக்கி வைக்கமுடியாது.

மாற்கு 10:15.

## செப்டம்பர் 11

**"முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்" – அப்போஸ்தலர் 3:20.**

இயேசு தமது முதல் வருகைக்கு பிறகு, தாம் இருக்கும் இடத்தில் தம்முடைய பின்னடியார்களும் இருக்கும்படி, அவர்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்த அவர்களை விட்டுச்சென்றார். தற்போது அவர் திரும்பி வந்திருந்து, நாம் அவரை பார்க்கக்கூடாதிருந்தும், மத்தேயு 24–ம் அதிகாரத்தில், நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அவருடைய பிரசன்னத்தின் அடையாளங்களை நிறைவேற்றி கொண்டிருக்கிறார்.

உபாகமம் 18:15.

## செப்டம்பர் 12

**"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." – அப்போஸ்தலர் 3:21**

தேவன் தமது ஆவியை அனுப்பி, பூமியின் தோற்றத்தைப் புதிதாக்குவார் என தாவீது எழுதியிருக்கிறார். கர்த்தருடைய ஈடுபலியினால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி வருவார்கள் என்று ஏசாயா எழுதியிருக்கிறார். தேவன் தம்முடைய ஜனங்களை மீண்டுமாக அவர்களுடைய தேசத்திற்கு கொண்டுவந்து, அவர்களை சுகமாய் தங்கியிருக்கப் பண்ணுவார் என எரேமியா எழுதியிருக்கிறார். மரித்தோர் மீண்டும் ஜீவனுக்குக் கொண்டுவரப்படுவார்கள் என்ற இந்த ஒரேசெய்தியையே, வேதாகமத்தில் அநேகமுறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் 1:11.

## செப்டம்பர் 13

**"அல்லேலூயா" – சங்கீதம் 146:1.**

ஆயிரவருட அரசாட்சியின்போது, "நீங்கள் கர்த்தரை அறிந்திருக்கிறீர்களா" என்று ஒருவரும் மற்றொருவரை கேட்க மாட்டார்கள். அச்சமயத்தில், சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் அவரை அறிந்திருப்பார்கள். இது சம்பவிக்கும்போது, எல்லா ஜனத்திற்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்படி பிதாவாகிய தேவனும், அவருடைய குமாரனும் ஏற்பாடு செய்த அன்பின் திட்டத்தைப் புரிந்துகொண்டு, ஒவ்வொருவரும் தேவனுடைய நன்மையை நினைத்து, அவரைத் துதிப்பார்கள்.

வெளிப்படுத்தல் 19:5.

## செப்டம்பர் 14

**"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" – யோவான் 10:27.**

செம்மறியாடு வளைந்து கொடுக்காத தன்மையுடையது. அவைகளின் மேய்ப்பர் எங்கு வழிநடத்தி செல்கிறாரோ, அங்கே அவரை பின் தொடரும். அவ்வாறே இயேசு நமக்கு நல்ல மேய்ப்பராய் இருக்கின்றார். அவர் நம்மை கனிவாக நடத்தி வருகின்றார். ஆகையால், நாம் அவரை நேசித்து, அவரில் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். நாம் அவருடைய சத்தம் அல்லது போதனைகளை அறிவதற்கும் அவரை பின்பற்றவும், கற்றறிந்திருக்கிறோம். நாம் வேறொருவருடைய சத்தத்திற்கு பின்தொடருவதில்லை. நம்முடைய நல்ல மேய்ப்பன் அவருடைய ஆடுகளுக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார்.

யோவான் 10:14.

## செப்டம்பர் 15

**"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" – எபிரெயர் 13:8.**

நம்முடைய கர்த்தர் இயேசு, கடந்த காலத்தில் நமக்காக செய்தது என்ன, அவர் பூமிக்கு வந்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்த நம்மை மீட்க பாடுபட்டு மரித்தார். அவர் எல்லாருக்குமான ஒரு மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். தற்போது இயேசு எப்படிப்பட்டவராக இருக்கின்றார், இக்கேள்விக்கு, நாம் அவரில் அன்புகூர்ந்து, அவர் சித்தம் செய்ய முயற்சிப்போமாகில் அவர் நமக்கு (தற்போது) நண்பரும் வழிகாட்டியுமாக இருக்கிறார் என்பதே பதிலாகும். நித்தியத்திற்கும் இயேசு எப்படிப்பட்டவராக இருப்பார், இக்கேள்விக்கு, பாவம், துக்கம் மற்றும் மரணம் ஆகிய அனைத்தையும் முடிவுக்கு கொண்டுவந்து, பூமியின் மனுக்குலம் அனைவரையும் ஆசீர்வதிக்கக்கூடிய நீதியுள்ள ஆட்சியாளராக (நித்தியத்திற்கும்) இருப்பார் என்பதே பதிலாகும்.

வெளிப்படுத்தல் 1:4.

## செப்டம்பர் 16

**"நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்" –<br>யோவான் 9:25.**

மனித கண்கள் ஒன்றை பார்ப்பதற்கு ஒளி அவசியமானது. ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக தேவன் இந்த ஒரு உருவகபாணியை நமக்கு கொடுத்திருக்கின்றார். நம்முடைய வெளிச்சத்திற்காக, இயேசுவின் எடுத்துகாட்டுதலையும், போதனைகளையும் பயன்படுத்துவதிலிருந்து, ஆவிக்குரிய காரியங்களைப் பார்ப்பதற்கோ (அல்லது) புரிந்துகொள்ளவோ நம்மால் கூடும். அப்பொழுது நம்முடைய புரிந்துகொள்ளுதலில் காணப்படும் குறைபாடு (அல்லது) குருட்டுத்தனம் நம்மிலிருந்து அகற்றப்படும்.

எபேசியர் 5:8.

## செப்டம்பர் 17

**"கர்த்தர் நமக்குக் பெரிய காரியங்களைச் செய்தார் இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருந்தோம்."<br>சங்கீதம் 126:3.**

கர்த்தர் உங்களுக்கு பெரிய காரியங்களை செய்திருக்கிறாரா? இந்த பெரிய காரியங்கள் அனைத்தையும் அமைதலாக அமர்ந்து சிந்திப்பது நன்மையாக இருக்கும். நீங்கள் அவரை குறித்து அறிந்துகொள்ளவும், அவரில் அன்புகூறவும், இரட்சிப்பைக் குறித்ததான அருமையான திட்டங்கள் இவ்வளவு சின்னப்பருவத்திலே அறிந்துகொள்ளத்தக்கதான வாஞ்சை உங்களில் வரத்தக்கதாக, இவைகளில் ஒன்றை கர்த்தர் உங்களுக்கு செய்திருக்கலாம். நீங்கள் வளரும்போது, இதுவும் உங்களில் வளரும். அதாவது, உங்களால் முடிந்த மட்டும் அவருக்குப் பிரியமானவைகளைச் செய்யவும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றத்தக்கதான காரியத்தை முழு இருதயத்தோடு செய்யுமட்டும் வளரும்.

சங்கீதம் 116:12.

## செப்டம்பர் 18

**"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." ரோமர் 5:1.**

நீதிமானாக்கப்படுதல் என்பது, "நீதி உள்ளவனாக ஆக்கப்படுதல்" (அல்லது) "நீதியுள்ளவனாக எண்ணப்படுதல்" என்று பொருள்படும். இயேசுவின் உண்மையான நீதி மற்றும் அவர்மேல் நாம் வைத்துள்ள விசுவாசத்தினிமித்தமே தேவன் நம்மை நீதி உள்ளவர்கள் என்று எண்ணுகிறார். இதை

நம்முடைய சுய முயற்சியினால் அடைய முடியாது. மாறாக இயேசுவை நம்முடைய இரட்சகராக நாம் பெற்றுக்கொண்டதால் மாத்திரமே நாம் தேவன் பார்வையில் நீதிமான்கள் என்று எண்ணப்படுகிறோம்.

ரோமர் 1:17.

## செப்டம்பர் 19

**"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" – 2 தீமோத்தேயு 1:7.**

கிறிஸ்தவர்கள் அச்சம் கொள்ளவோ (அல்லது) துணிவில் குறைவுபடவோ வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், தேவன் அவர்களுக்கு பலமிக்க பண்புகளையும், அன்பின் பண்புகளையும், சீரான மனநிலையையும் வளர்த்துக்கொள்வதற்கு ஏதுவான அநுபவங்களை அளிக்கின்றார். இந்த குணநலன்கள் வளர்ச்சிபெற சிலகாலம் எடுத்துக்கொள்ளும்.

ஏசாயா 41:10.

## செப்டம்பர் 20

**"நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்." – யோசுவா 24:15.**

யோசுவா கடந்த காலத்தில் தேவன் யூதஜனங்களுக்கு செய்த அநேக நன்மையான காரியங்களைக் குறித்தும், அவரும், அவருடைய குடும்பத்தாரும் மெய்தேவனை சேவிப்பதற்கு எடுத்திருக்கும் தனது தீர்மானத்தைக் குறித்தும், அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தார். தேவனை சேவிக்கும்படி மற்றவர்களை நாம் வற்புறுத்த முடியாது. ஆனால், பிள்ளைகள் சிறுவர்களாக இருந்து, தங்கள் பெற்றோரின் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும்வரை பெற்றோரானவர்கள் தேவனிடத்திலும், அவருடைய வாக்குத்தத்தங்களிலும் தாங்கள் கொண்டுள்ள விசுவாசத்தைக் குறித்து தங்கள் குழந்தைகளுக்குப் போதித்து, ஒரு முன்மாதிரியாக இருக்கும் வாய்ப்புதனை பயன்படுத்திக்கொள்ளலாம்.

1 சாமுயேல் 12:24.

## செப்டம்பர் 21

**"நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்" – ரூத் 1:16.**

ரூத் மோவாப் தேசத்தைச் சார்ந்தவள். மோவாப்பியர்கள் விக்கிரக வணக்கம் செய்து வந்தனர். ரூத்தின் மாமியாகிய நகோமி, யூத ஸ்திரீயாக இருந்து, மெய்தேவனை வணங்கி வந்தாள். அவர்களுடைய புருஷர்கள் மரித்தபோது, ரூத் நகோமியின் தேவனை ஏற்றுக்கொண்டு, அவள் மாமியோடுகூட யூதேயாவுக்கு செல்லும்படி எடுத்த அவளுடைய தீர்மானம் முற்போக்கு சிந்தையுள்ளதாகவும், நிரந்தரமானதும், கிறிஸ்துவை பின்பற்ற தீர்மானிப்போருக்கு ஓர் எடுத்துகாட்டாகவும் அது அமைந்திருக்கிறது. தேவன் அவளது உண்மையை ஆசீர்வதித்தார். ஆகையால், அவள் இயேசுவின் மூதாதையான தாவீது இராஜாவுக்கு கொள்ளு பாட்டி ஆனாள்.

அப்போஸ்தலர் 21:13.

## செப்டம்பர் 22

**"தேவன், பூமியானது ஜாதி ஜாதியாக ஜீவஜந்துக்களை பிறப்பிக்கக்கடவது என்றார்" – ஆதியாகமம் 1:24.**

எந்த ஒரு இனமோ (அல்லது) வகையோ மற்றொரு இனமோ மாறினதாக எந்த சம்பவமும் அறியப்படவில்லை. கருப்பு நாய்களோடு வெள்ளை நாய்களை நீங்கள் கலக்கலாம். மாறாக நாய்களோடு

பூனை வகைகளை கலக்க உங்களால் கூடாது. நிச்சயமாக இயற்கை என்பது சிருஷ்டி கர்த்தாவாக இருந்திருந்தால், அவள் அந்த செயல்முறையை தொடர்ந்திருப்பாள். அதாவது, இனமானது, இடைவிடாமல் மாறிக்கொண்டே இருந்திருக்கும். மாறாக தற்போது இருப்பதுபோன்று ஒரே நிலையாய் நீடித்திருக்காது. பரிணாமக்கொள்கை என்பது, மனித பகுத்தறிவுக்கும் அதேபோன்று வேதத்திற்கும் எதிர்மாறானதாகும்.

ஆதியாகமம் 1:21.

## செப்டம்பர் 23

**"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. " ரோமர் 5:12.**

ஆதாமுடைய கீழ்ப்படியாமையின் விளைவாக உலகத்தில் மரணம் நுழைந்தது. மரணம் என்பது, ஒரு நண்பன் அல்ல. ஒரு எதிராளி ஆகும். இயேசுவால் மாத்திரமே, நமது நிமித்தமாக ஆதாமின் இழந்துபோன ஜீவனுக்கான சரிநிகர்சமான விலையாக தம்முடைய பரிபூரண ஜீவனைக் கொடுப்பதன் மூலம் நீதியைப் பூர்த்திசெய்து, எதிர்காலத்திற்கான நம்பிக்கையைக் கொண்டு வரமுடியும்.

1 கொரிந்தியர் 15:22.

## செப்டம்பர் 24

**"ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனாயிருக்கிறான்." யாக்கோபு 3:2.**

நம்முடைய நாவிலிருந்து புறப்படும் வார்த்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். நம்முடைய வார்த்தைகளை அடக்குவது, நம்முடைய ஜீவகாலமளவும் நீடிக்கும் யுத்தமாக இருக்கும். மேலும், தேவனுடைய உதவியோடும், நம்முடைய நேர்மையான முயற்சிகளாலும் மட்டுமே அதை ஜெயிக்க முடியும்.
யாக்கோபு 3:8.

## செப்டம்பர் 25

**"பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின. " எசேக்கியேல் 18:2.**

ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது, அவர் பாவம் என்ற புளிப்பான திராட்சக்காயைப் புசித்து மரணத்தீர்ப்புக்குள்ளானார். அதாவது, அவருடைய பற்கள் கூசிப்போயிற்று. பரம்பரையாக, அவருடைய சந்ததியினர், எவ்வளவு நல்லவர்களும் நல்லெண்ணங்கள் கொண்டவர்களாக இருந்தாலும் அனைவருமே மரணத்திற்கு உள்ளாயினர். ஆயிரவருட யுகத்தில், ஆதாமினிமித்தம் வந்த மரணத்தீர்ப்பு வல்லமையற்று இருப்பதினால் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், அவனவன் தன்னுடைய சொந்த நடக்கையினால் நியாயந்தீர்க்கப்படுவான்.
புலம்பல் 5:7.

## செப்டம்பர் 26

**"உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" – பிரசங்கி 9:5.**

ஜனங்கள் மரிக்கும்போது, அவர்கள் ஒன்றும் அறியார்கள். ஏனென்றால், மரணம் என்பது, அவர்கள் தூங்குவது போன்று இருக்கக்கூடியதாகும். அவர்கள் மிகுந்த வேதனையுள்ள ஒரு இடத்தில் துன்பப்பட, உயிருடனோ (அல்லது) உணர்வுள்ள நிலையிலோ இருக்க மாட்டார்கள். இந்த ஒரு அறிவை பெற்றிருப்பது ஆறுதலாக உள்ளது.
பிரசங்கி 9:10.

## செப்டம்பர் 27

**"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை" – ஏசாயா 11:9.**

பிணியாளிகளை சுகப்படுத்தி பிசாசுகளை துரத்துவதன் மூலம் இயேசுவும், அப்போஸ்தலரும் கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டு, சுகவீனங்களெல்லாம் சுகமாக்கப்பட போகும் வருங்காலத்தைக் குறித்து விளக்கிக்காட்டினார்கள். தேவன் ஒரு இராஜ்யத்தைக் குறிப்பதற்கு சில நேரங்களில் மலை (அல்லது) பர்வதம் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார். இந்த வேதவாக்கியத்தில் வரும் பரிசுத்த பர்வதம் கிறிஸ்துவின் இராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது.

வெளிப்படுத்தல் 21:4.

## செப்டம்பர் 28

**"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" – ஏசாயா 11:9.**

முற்காலங்களில் பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தரை அறிகிற அறிவினால் பூமியானது, ஒருபோதும் நிரப்பப்படவில்லை. இக்காலக்கட்டம் வரையிலும் மனுஷர்கள் மிகுதியான மதங்களை கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக இவ்வசனம் எதிர்காலத்திற்கு பொருந்தக்கூடியது என நாம் அறிகிறோம்.

ஆபகூக் 2:14.

## செப்டம்பர் 29

**"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்." மத்தேயு 12:34.**

நம்முடைய நேசத்தின் மையமாகிய, நம் இருதயத்திலிருந்து புறப்படக்கூடிய நம் எண்ணங்களே வார்த்தையாகப் பேசப்படுகிறது. ஒவ்வொரு நாளும் நாம் என்னென்ன காரியங்களுக்கு நம் இருதயத்தை வெளிப்படுத்துகிறோமோ, அவைகளால் நம் சிந்தையும் நிரப்பப்பட்டிருக்கும். நாம் அவைகளை புரணிப்பேச்சிலோ (அல்லது) அந்நிய விஷயங்களிலோ நிரப்பினால் இதுவே நம் வார்த்தைகளாக வெளிவரும். நாம் விரும்பத்தகாத குணாதிசயங்களை மேற்கொள்ளவும், அதிஉன்னத குணங்களால் பெருகுகிறவர்களாக இருக்கவும், தொடர்ந்து போரிட வேண்டும்.

லூக்கா 6:45.

## செப்டம்பர் 30

**"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." ரோமர் 10:17.**

தேவன் தம்முடைய வார்த்தையை ஜனங்களுக்கு பரப்ப, ஒரு அருமையான தொடர்பு இணைப்பை ஏற்பாடு செய்திருக்கிறார். தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் புரிந்துகொண்ட ஒவ்வொருவரும், இந்த அறிவை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள கடமைப்பட்டுள்ளனர். எப்படியாயினும் இது ஒருபோதும் மற்றவர் மீதான ஒரு சுமையாக இருக்கப் போவதில்லை. இந்த செய்தி செழித்தோங்குமோ அல்லவோ அதை நாம் தேவனிடமே விட்டுவிட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

கொலோசெயர் 1:24.

## அக்டோபர் 1

**"தானியேலோவென்றால் அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், . . . தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினான்" – தானியேல் 6 : 10**

தானியேல், தரியு இராஜாவுக்கு உண்மையுள்ளவராகவும், நேர்மையுள்ளவராகவும் இருந்து, பணியாற்றினார். ஏனெனில், அதுவே அவருடைய வேலையாக இருந்தது. தேவனுடைய கட்டளைகளுக்கான அவருடைய கீழ்ப்படிதலில் இராஜாவுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டிய எந்த காரியம் குறிக்கிட்டாலும் தானியேல், இதனால் சுமத்தப்பட்ட தண்டனைகளையும் பொருட்படுத்தாது தேவனுக்கு கீழ்ப்படிவதையே தெரிந்தெடுத்தார்.

சங்கீதம் 55

: 17

## அக்டோபர் 2

**"நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ (சாத்தான்) உன் இருதயத்தில் சொன்னாயே" – ஏசாயா 14 : 14**

வர இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தோடு (கண்ணுக்குத் தெரியும் இராஜ்யம்) போட்டியிட சாத்தான் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிக்க முயற்சித்தான். சாத்தான் தன்னை தொழுது கொள்ளும்படி இயேசுவை தூண்ட முயற்சித்தபோது, இயேசு, வேத வசனத்தை கொண்டு, உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று பதில் அளித்தார். பொய் தேவர்கள் நம்முடைய அன்பையும், ஆராதனையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும்போது, நாமும் உடனடியாக தேவன் பட்சம் திரும்பிவிட வேண்டும்.

ஏசாயா 14 : 13

## அக்டோபர் 3

**"நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்"**
**– தானியேல் 3 : 17 , 18**

யாவே தேவனை தவிர வேறே ஒரு தேவனை தொழுதுகொள்ள மறுப்பு தெரிவித்ததற்காக, அந்த மூன்று எபிரெய புருஷர்களும் அக்கினி சூளையிலே தூக்கி எறியப்பட்டனர். தேவன் அவர்களை காப்பார் என்பதில் அவர்கள் உறுதியாய் இருந்தனர். ஆனால் ஒருவேளை அவர் காக்கவில்லை என்றாலும், தேவன் ஒருவரை மட்டுமே தொழுது கொண்டு தொடர்ந்து அவருடைய உண்மையுள்ள வேலைக்காரராக இருந்திருப்பார்கள். எவ்வளவு தைரியம், எவ்வளவு விசுவாசம் ஒவ்வொரு தருணத்திலும் தேவன் நம்மை விடுவிப்பார் என்று நாம் எதிர்ப்பாக்ககூடாது. மாறாக, அவருடைய செயல்கள் நமக்கு புலப்படாதிருக்கும்போதும், நாம் அவரில் உறுதியான நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும்.

1 கொரிந்தியர் 1 : 10

## அக்டோபர் 4

**"பொதுவான விசுவாசத்தின்படி, உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" – தீத்து 1 : 4.**

தீத்து, புறஜாதி பெற்றோரின் மகனாவார். அப்போஸ்தலனாகிய பவுல்தான் அவரை கிறிஸ்தவ மதத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கக்கூடும், மேலும் இவரை குமாரனைப் போலவும் அன்புகூர்ந்தார். இவர் திடமனதும், ஆற்றல் மிக்கவரும், பொதுவான விசுவாசத்திற்கு அதாவது, இயேசுவின் பின்னடியார்கள் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட அந்த விசுவாசத்திற்கு தம்மை முழுவதுமாக

தத்தம் செய்தார்.

பிலேமோன் 3

## அக்டோபர் 5

**“என் விக்கிரகம் அவைகளைச் செய்ததென்றும், நான் செய்த சுரூபமும், நான் வார்ப்பித்த விக்கிரகமும் அவைகளைக் கட்டளைவிட்டதென்றும் நீ சொல்லாதபடிக்கு, நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்து, அவைகள் வராததற்குமுன்னே உனக்கு வெளிப்படுத்தினேன் – ஏசாயா 48 : 5**

தேவன் எப்பொழுதும் தம்முடைய ஜனங்களுக்கு முன் கூட்டியே எல்லாவற்றையும் அறிவிப்பதினால், சரித்திரத்தில் நடந்த சம்பவங்கள் தற்செயலாக நடந்தது என்று எண்ண முடியாது. அவைகள் சம்பவிக்கும் போது, இதை முன் கூட்டியே அறிந்திருந்ததை அவர்கள் கண்டு கொள்வார்கள். ஆகையால் ஜோதிடம், விக்கிரகம் போன்ற தவறான தீர்க்கதரிசனம் போன்று இருக்கும் தற்காலிக செய்கைகள் நம்பத்தகுந்தவைகள் அல்ல.

சங்கீதம் 145 : 3 , 4

## அக்டோபர் 6

**“சிலர் விசுவாசியாமற்போனாலுமென்ன ? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ ?” – ரோமர் 3 : 3**

அநேகர் தேவன் மீது விசுவாசம் இல்லாதவராயிருந்தாலும், அவருடைய திட்டம் நிறைவேற்றப்படுவதில்லை என்று பொருள்படாது. தேவன் ஆதிமுதல் அந்தம் வரை அறிந்தவராய் இருக்கின்றார். சபை நிறைவடைவதையும், பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும் எதுவும் தடுக்க முடியாது.

எபிரேயர் 4 : 2

## அக்டோபர் 7

**“ மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் . . . . அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” – மத்தேயு 6 : 1 , 2**

நமக்கு நாமே புகழ்ச்சியும், மகிமையும் ஏற்படும்படி நற்கிரியைகளைச் செய்தோமாகில், அவை தேவனை பிரியப்படுத்துவதற்கு செய்யப்படுவதாக இருக்காது. மற்றவரிடமிருந்து நாம் பெறும் புகழ்ச்சியே இவ்வாறாக செய்யப்பட்ட நற்கிரியைகளுக்கு உரிய பயலனாகும். இதற்கு மேலாக தேவன் நமக்கு எந்த வெகுமதியும் அளிப்பதில்லை.

மத்தேயு 6 :4

## அக்டோபர் 8

**“ அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன் அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்”.– ஏசாயா 65 : 24**

தேவன் தம்மிடம் தாழ்மை மற்றும் மனந்திரும்பின இருதயத்தோடு வரும் தம்முடைய ஜனம் அனைவரையும் நினைத்தருளுகிறார். நம்முடைய நன்மையைக் கருதி, இவைகளை நமக்கு செய்கிறார் என்பதை உணர்ந்து, நமக்காக அவர் செய்திருக்கும் முன்னேற்பாடுகளை ஏற்றுக்கொள்ள வாஞ்சையான இருதயத்தோடு, நம்முடைய இக்கட்டான மற்றும் தேவையான நேரங்களில் உதவிக்காக அவரை நோக்கிக் கூப்பிடுவதற்கு, அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

மத்தேயு 6 : 8

## அக்டோபர் 9

**“உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும் நீரே என் இரட்சிப்பின் தேவன்” – சங்கீதம் 25 : 5**

இந்த யுகத்தில், தேவன் சிறுமந்தையை மட்டுமே தம்முடைய நேச குமாரனால் செலுத்தப்பட்ட ஈட்டு கிரயத்தின் மூலமாக இரட்சிப்பை அவர்களுக்கு அளித்து சத்தியத்திற்குள்ளாக வழிநடத்தி வருகிறார். ஆயிரவருட யுகத்தில் கிறிஸ்து மற்றும் அவருடைய சிறுமந்தையின் மூலமாக தேவன் மனுஷர் அனைவரும் காக்கப்பட்டு சத்தியத்தின் அறிவுக்குள்ளாக வளரும்படி செய்ய இருக்கிறார்.

1தீமோத்தேயு 2:4

## அக்டோபர் 10

**“இயேசு பரித்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியினாலே வனாந்தரத்திற்கக் கொண்டுபோகப்பட்டு” – லூக்கா 4 : 1**

இயேசுவானவர் யோர்தானில் தேவனுடைய பரிசுத்த ஆவியினாலேயே நிரப்பப்பட்டார். அவர் 40 நாட்களுக்கு தேவனுடைய வார்த்தையை ஆராயவும், ஜெபிக்கவும், தியானிக்கவும், கவனத்தை சிதறடிக்கும் எல்லாவற்றிற்கும் விலகி மலைகளுக்குச் சென்றார்.

மத்தேயு 4 : 1

## அக்டோபர் 11

**“நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” – யோவான் 11 : 25**

ஆதாமின் மீறுதல் மற்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது முதல், தேவன் இந்த மனுக்குலத்தை மரித்ததாக (அ) மரித்துக்கொண்டிருக்கிறதாகவே கருதிவருகிறார். வாழ்ந்து கொண்டிருக்கின்ற எந்த மனுஷன்தான் இறுதியில் மரிக்காமல் உள்ளான் ? என்றாலும், இயேசுவினுடைய ஈடுபலியை விசுவாசிப்பதன் மூலமாக நித்தியஜீவனுக்கான வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். ஆகையால் நாம் மரித்தோராகக் கருதப்பட்டாலும், கிறிஸ்துவின் மூலமாக நாம் அனைவராலும் ஜீவன் பெற்றுக்கொள்ள முடிகிறது.

யோவான் 6 : 40

## அக்டோபர் 12

**“சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.” – சங்கீதம் 25 : 9**

சாந்தகுணமுள்ள ஜனங்கள் பெருமை கொள்ளமாட்டார்கள். மாறாக தாழ்மையும், பொறுமையும் உடையவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கற்றுக்கொள்ள தயாராக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கே தேவனும் கற்றுக்கொடுக்க தயாராக இருக்கிறார். இயேசு சாந்தகுணம் உள்ளவராக இருந்தார். அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார். இருந்தபோதிலும், அவர் பெருமை கொள்ளாதவராக இருந்தார்.

மத்தேயு 5:5

## அக்டோபர் 13

**“நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.” – ரோமர் 5 : 8**

பாவம் செய்யாதோர் எவரும் இல்லை என்பதை தேவன் அறிந்திருந்தார், இருந்தபோதிலும், அவர் ஏற்ற காலத்தில் அனைவரும் ஜீவன் பெற்று கொள்ளும் வாய்ப்பை பெறும்படியாக மரணப்பரியந்தம் கீழ்ப்படிந்தார். இயேசுவை அனுப்பியதின் மூலமாக நம் மீதான அன்பை தேவன் நிரூபித்துக் காட்டினார்.

1பேதுரு 3 : 18

## அக்டோபர் 14

**“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்” – மாற்கு 14:38**

நமக்கு எவ்விதமான சோதனைகள் வரும் என்பதை முன் கூட்டியே நம்மால் அறிந்துகொள்ளமுடியாது. நாம் வேதத்தை ஆராய்ந்து ஜெபத்தில் தரித்திருந்தால், சோதனைகள் வரும்போது, அவைகளை அடையாளம் காண ஆயத்தமாகவும், அவைகளை ஜெயம் கொள்ள பலமுள்ளவர்களாகவும் இருப்போம்.

கலாத்தியர் 5 : 7

## அக்டோபர் 15

**“உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். – யோவான் 6: 63.**

இயேசுவின் சீஷர்கள் அவரால் போதிக்கப்பட்டவைகளை காணவும், கேட்கவும், புரிந்துகொள்ளவும் கூடியவர்களாக இருந்தபடியால், மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருந்தனர். சில ஜனங்கள் அவருடைய வார்த்தைகளைக் கேட்டார்கள், ஆனால், அவர் எதை குறிப்பிடுகிறார் என்பதை புரிந்துகொள்ளாதிருந்தனர். இயேசு தாம் சொல்வதைப் புரிந்துகொண்டவர்கள் ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அறிந்து தம்மைப் பின்பற்றுகிறவர்களின் கண்களும் காதுகளும் பாக்கியமுள்ளவைகள் என்றார்.

லூக்கா 10 : 24.

## அக்டோபர் 16

**“உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்”. – மத்தேயு 13: 16.**

இயேசுவின் சீஷர்கள் அவரால் போதிக்கப்பட்டவைகளை காணவும், கேட்கவும், புரிந்துகொள்ளவும் கூடியவர்களாக இருந்தபடியால் மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருந்தனர். சில ஜனங்கள் அவருடைய வார்த்தைகளைக் கேட்டார்கள். ஆனால் அவர் எதை குறிப்பிடுகிறார் என்பதை புரிந்துகொள்ளாதிருந்தனர். இயேசு தாம் சொல்வதைப் புரிந்துகொண்டவர்கள் ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அறிந்து, தம்மைப் பின்பற்றுகிறவர்களின் கண்களும் காதுகளும் பாக்கியமுள்ளவைகள் என்றார்.

லூக்கா 10:23

## அக்டோபர் 17

**“பரிசுத்த ஆவி . . . . எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து” – யோவான் 14 : 26**

ஆங்கிலத்தில் வேதாகமத்தை மொழிபெயர்த்த மனுஷர் பரிசுத்த ஆவியை ஒரு ஆவியின் ஜீவி (அ) நபர் என்று நம்பி, அது என்று பயன்படுத்துவதற்குப் பதிலாக அவர் என்ற வார்த்தையை உபயோகித்திருக்கின்றனர். இயேசு மரித்த பிறகு தேவன், இயேசுவின் போதனைகளை சீஷர்கள் நினைவுபடுத்தவும் புரிந்துகொள்ளவும் தகுதியாகும்படி தம்முடைய வல்லமையைப் பயன்படுத்தினார். பரிசுத்தஆவி ஒரு நபர் அல்ல, மாறாக அது தேவனுடைய வல்லமை அல்லது ஆதிக்கமாக இருக்கிறது.

யோவான் 15 : 26

## அக்டோபர் 18

**“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் (கவனமாயிருங்கள் எச்சரிக்கையாயிருங்கள்) ஏனெனில், உங்கள் எதிராளியாகிய (பகைவனாகிய) பிசாசானவன் (சாத்தான்) கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்” – 1 பேதுரு 5 : 8**

ஒரு சிங்கம் தனது இரையை தாக்குதல் செய்ய தயாராக இருக்கும்போது, கெர்ச்சித்து மற்ற மிருகம் அசைய முடியாதபடி அதை அதிகமாய் பயமுறுத்தும். பிறகு அந்த சிங்கம் தனக்கு பலியாகும் இரை மீது தாவி குதிக்கும். அதுபோலவே, சாத்தானும் மிகத் தந்திரமானவன். ஆனாலும், அவன் அதிக தந்திரமுள்ளவனாய் இருக்கிறபடியினால் ஒரு கெர்ச்சிப்பின் சத்தத்தோடு தாக்குதல் செய்ய மாட்டான். நாம் தேவனிடமிருந்து வழிவிலகிப் போகாமல் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

எபேசியர் 6 :11

## அக்டோபர் 19

**“ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.” – மத்தேயு 5 : 48**

ஸ்டிராங்ஸ் அகராதியை பொருத்தவரையில் பூரணம் என்ற வார்த்தை முழுமை என்று பொருள்படுகிறது. ஆகையால், முந்தைய வசனங்களுக்கு மீண்டும் கவனம் கொடுக்கும்போது, எந்தவகையில் நாம் முழுமையடைய முடியும் என்பதை நமக்கு சொல்கிறது. நன்மை செய்பவர்களுக்கும் தீமை செய்பவர்களுக்கும் தேவன் ஆசீர்வாதங்களைக் கொடுப்பதுபோலவே, நாமும் நமது நண்பர்களையும் நமது சத்துருக்களையும் நேசிக்க வேண்டும்.

யாக்கோபு 1: 4

## அக்டோபர் 20

**“சாத்தானென்றும் சொல்லப்பட்ட . . . வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து.” – வெளிப்படுத்தல் 20 : 2**

தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களை அறிந்துகொள்வதற்கான நியாயமான மற்றும் முழுமையான வாய்ப்பை முழு மனுக்குலத்திற்கும் கொடுப்பதே ஆயிரவருட யுகத்தின் நோக்கமாகும். சாத்தான் கட்டப்பட்டு செயல் இழந்த நிலையில் இருக்கையில், வஞ்சனைகள், மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பழக்க வழக்கங்கள் மற்றும் அறியாமை யாவும் மறைந்து போகும். ஆயிர வருடங்களின் முடிவில் சாத்தான் சில காலம் விடுதலை பண்ணப்பட்டு மனுக்குலம் தேவன் மீது கொண்டுள்ள உண்மை இருதயத்துக்கு இறுதிப்பரீட்சையை வருவிக்க அவனுக்கு அனுமதியளிக்கப்படும்.

வெளிப்படுத்தல் 12 : 9

## அக்டோபர் 21

**“இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்.” – ஏசாயா 65 : 17**

இராஜ்யத்தில் கிறிஸ்வும் மகிமையடைந்த சபையும், புதிய வானங்களாக (அ) பூமியின் மீது ஆவிக்குரிய அதிகாலம் செலுத்துபவர்களாக இருப்பார்கள். பூமியின் அமைப்பானது சுயநலம் மற்றும் துன்புறுத்துதலுக்கு பதிலாக அன்பு மற்றும் நீதியின் அடிப்படையிலான இந்த அரசாட்சியின் கீழ் மீண்டும் ஒழுங்கான ஒரு அமைப்பாக உருவாகும்.

2 பேதுரு 3 : 13

## அக்டோபர் 22

**"முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை." – ஏசாயா 65 :17**

மனுக்குலம் மீண்டும் புத்துயிரளிக்கப்பட்ட பிறகு (அ) மீண்டும் ஜீவனுக்கு கொண்டுவரப்பட்ட பிறகு, அங்கு புதியதொரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அதாவது, தற்போதையை ஒழுங்கின்மை மற்றும் பாவத்திலிருந்து முழுமையான ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். அச்சமயத்திலும் கூட முற்காலத்தில் இவ்விஷயங்களை ஜனங்களால் நினைவுகூற முடியும். என்றாலும், இராஜ்யத்தின் ஆச்சரியமான பூமிக்குரிய ஏற்பாடுகளுக்கு அவைகள் ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று உணர்ந்து அவைகளை (சிந்தையிலிருந்து) புறம்பே தள்ளிவிடுவார்கள்.

ஏசாயா 43 : 25

## அக்டோபர் 23

**"கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக." – நீதிமொழிகள் 3 : 3**

கிருபையும் சத்தியமும் தேவனுடைய குணலட்சணத்தின் அம்சங்கள் ஆகும். ஆகவே, அவைகளை நம்முடைய முக்கியமான அம்சங்களாக்க வேண்டும். சத்தியம் நம்முடைய எல்லா அலுவல்களிலும் நேர்மை மற்றும் உண்மையை சுட்டிக்காட்டுகின்றது. கிருபை, நம்முடைய சொந்த தோல்விகள் மற்றும் துக்கங்கள் எப்படி கையாளப்பட வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அதேவிதத்தில் மற்றவருடைய விஷயங்களையும் கையாள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

சங்கீதம் 25 : 10

## அக்டோபர் 24

**"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்." – மத்தேயு 7 : 26**

வேதத்தில் இருக்கும் தேவனுடைய போதனைகள் அஸ்திபாரமாய் இருந்து, அவைகளின் மீது நம் ஜீவியத்தை நாம் கட்டி இருக்கிறோம். அவை உண்மையானதும், என்றும் மாறாததாகவும் இருக்கிறது. ஆனால், மணலின் மீது கட்டப்பட்டிருந்தால் பெருங்காற்று அடிக்கும்போது, மண்சரிந்து அவைகளின் மீது கட்டப்பட்டிருக்கும் எவற்றையும் அழித்துவிடும். நாமும், மனிதருடைய விசுவாசம் பிரமாணங்கள் மற்றும் பாரம்பரியங்களின் மீது கட்டுவதைப் பார்க்கிலும், தேவனுடைய வார்த்தையின் உறுதியான அஸ்திபாரத்தின் மீது நம்முடைய ஜீவியத்திற்கு அடித்தளம் போடுவோமாக.

லூக்கா 6 : 49

## அக்டோபர் 25

**"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுஅவரே. இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது." – 1 தீமோத்தேயு 2 : 6**

ஆதாம் ஒரு பரிபூரண மனித ஜீவனோடு சிருஷ்டிக்கப்பட்டார். ஆனால், அவர் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது, அவர்மீது வந்த மரண தண்டனை எல்லா ஜனங்களுக்கும் கடந்து சென்றது. இயேசு தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்த காரணத்தினால், பாவம் செய்ததினிமித்தம் இழக்கப்பட்ட ஆதாமின் பரிபூரண ஜீவனுக்காக அவர் தம்முடைய பரிபூரண மனித ஜீவனின் மதிப்பை ஈடாக (அ) சரிநிகர்சமான விலையாகக் கொடுக்க முடிந்தது. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் போதே இதை அனைவரும் அறிந்துகொள்வதற்கு ஏற்றக்காலமாக இருக்கும். அதன் பிறகே ஒவ்வொருவருக்கும் அது தெளிவாக்கப்படும்.

மத்தேயு 20 : 28

## அக்டோபர் 26

**"சமாதனத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." – யோவான் 14:27**

இறுதிவிளைவாக உலகத்திற்கு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டுவரும்படி மனித குலத்திற்காக தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்பதை அறிவதும், வேதத்தில் எரிநகரம் குறித்து எங்குமே போதிக்கப்படவில்லை என்பதை அறிவதும், நம்முடைய இருதயத்தில் சமாதானத்தையும், தேவனிடத்தில் நம்பிக்கையையும் கொண்டுவரக்கூடிய காரியங்களாகும். உலக இன்பங்கள் பரிபூரண சமாதானத்தைக் கொடுக்கமுடியாது. ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தங்களோ உறுதியானதும் அவை நமக்கு சமாதானத்தையும் கொண்டுவரும்.

பிலிப்பியர் 4:7

## அக்டோபர் 27

**"நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்." – யோவான் 9 : 4**

ஆதாமுடைய கீழ்ப்படியாமையின் காரணமாக வந்த மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீண்டும் வெற்றிகரமாக மீட்பதற்கு முன் இயேசு தாம் நிறைவேற்ற வேண்டிய அநேக தீர்க்கதரிசனங்கள் உண்டு என்பதை அறிந்தவராக இருந்தார். அவர் எல்லா காரியங்களிலும் உண்மையுள்ளவராக இருந்தார். ஆகையால், தேவன் அவரிடத்தில் பிரியமாய் இருந்தார்.

யோவான் 4 :34

## அக்டோபர் 28

**"கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும் என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்."**
**– சங்கீதம் 71 : 5**

நாம் கர்த்தரிடத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்து. அவர் பட்சம் சாய்ந்திருந்தால், எந்த சந்தேகங்களோ (அ) பயங்களோ நம்மை மூழ்கடிக்க ஒட்டாது. அவர் நம்மை விட்டு விலகுவதும் இல்லை, நம்மை கை விடுவதுமில்லை என்று கூறி இருக்கிறார். ஆகையால் நாமும் தைரியமாக கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன் மனஷன் எனக்கு என்ன செய்வான் ? என்று சொல்லலாமே. நாம் சிறு பிள்ளையாய் இருக்கும்போதே நம் கர்த்தரை அறிந்து, அவரை நேசிப்பது என்பது மிகப்பெரிய ஒரு ஆசீர்வாரமாகும்.

எரேமியா 17 : 7

## அக்டோபர் 29

**"இயேசு ஜனங்களை நோக்கி : நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்". – யோவான் 8 : 12**

ஒரு ஒளிக்கதிர், ஒரு காரிருளில் வழிகாட்டியாய் இருப்பதுபோன்று இயேசுவின் போதனைகள் ஒரு கிறிஸ்துவன்தான் தேர்ந்தெடுத்திருக்கும் ஜீவப்பாதைக்கு உருவகமாகத் தெரிவிக்கின்றது. அறிவையும், புரிந்துகொள்ளுதலையும், காரிருள் என்பது அறியாமையையும், பொல்லாத கிரியைகளையும் குறிப்பதாக தெரிவிக்கிறது. நாம் நமது கர்த்தருடைய போதனைகளின் வெளிச்சத்தில் நடந்து, தொடர்ந்து இந்த வெளிச்சத்தைப் பிரதிபலித்தால் இருளில் இருப்பவர்களுக்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

யோவான் 1: 9

## அக்டோபர் 30

**"இயேசு; நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார்"**

நாம் விட்டுவிட்டுக் காரியங்கள் செய்வோமானால் போதிய வளர்ச்சியை நம்மால் உண்டு பண்ண முடியாது. இதை அறிந்த இயேசு தம்முடைய சீஷரிடம் அவருடைய போதனைகளின் பிரகாரம் சிந்தித்து ஜீவிக்கும்படி அறிவுரை கூறினார். இவ்வாறு செய்வதினிமித்தம், அவரிடமிருந்து கற்றுகொள்வதையே பிரதான விருப்பமாகக் கொண்டிருந்து, தாங்கள் உண்மையிலேயே அவரை பின்பற்றுகிறவர்களாகிய அவருடைய சீஷர்கள் என்பதை நிரூப்பிக்க முடியும்.

கொலோசெயர் 3 : 16

## அக்டோபர் 31

**"என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும் அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்." – மல்கியா 4: 2**

நீதியின் சூரியனாகிய இயேசுவினிடத்தில் உண்மையான பயபக்தியோடு இருப்பவர்கள், மேசியா பாவம், வலி, வேதனை மற்றும் மரணம் ஆகியவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து பூமியின் அனைத்து குடும்பத்தாரையும் குணப்படுத்தி துயராற்றி, மன்னித்து, வழிநடத்தக்கூடிய நாளின் ஆரம்பத்தை (அ) விடியலை உணர்ந்து கொள்ள தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

1 பேதுரு 1 : 19

## நவம்பர் 1

**"கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." எபிரெயர் 12 : 6**

இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போரை தேவன் சிட்சிக்கிறார். ஏனென்றால், அவர் அவர்களை கவனித்து வழிநடத்துகிறார். இப்படிப்பட்ட சிட்சைகள் நமக்குள் பொறுமை, விசுவாசம், கீழ்ப்படிதல், நேர்மை போன்ற காரியங்கள் வளர உதவியாய் இருக்கும் என்பதை தேவன் அறிந்திருந்தார். பூமிக்குரிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு செய்வது போலவே, பிதாவாகிய தேவனும் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு போதித்து, சரிப்படுத்துகிறார்.

**சங்கீதம் 94 : 12.**

## நவம்பர் 2

**"ஆண்டவரே, . . . ஜெபம்பண்ண . . . எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றார்." – லூக்கா 11 : 1**

ஜெபம் என்பது ஒரு அற்புதமான சிலாக்கியம். சரியான முறையில் ஜெபிப்பது முக்கியமான ஒன்றாகும். ஆகவே, சீஷர்கள் இயேசுவிடம் இந்த வேண்டுதல் விடுத்தனர் நாம் அன்பான இருதயங்களோடு தேவனிடம் வந்து நம்முடைய விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கூறும்போது, அதற்கான முடிவுகளை எப்போதும் தேவனிடம் விட்டுவிட வேண்டும். நமக்கு சிறந்தது என்ன என்பதை தேவன் அறிந்திருக்கிறார். ஆகையால் சிலசமயங்களில் நம்முடைய வேண்டுகோள்களுக்கு மறுப்பு தெரிவிக்கிறார். நாம் பூலோக (பூமிக்குரிய) ஆசீர்வாதங்களுக்காக வேண்டுதல் செய்யாமல், மாறாக நம்முடைய குணலட்சணங்கள் வளர்ச்சியடைவதற்கு நமக்கு உதவியாய் இருக்கக்கூடிய காரியங்களுக்காக வேண்டுதல் செய்ய வேண்டும்.

சங்கீதம் 19 : 14

## நவம்பர் 3

**"நாற்பது நாள் சென்றபின், நோவா தான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து," – ஆதியாகமம் 8 : 6**

ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பான கிங் ஜேம்ஸ் பதிப்பில், இவ்வசனத்தின் மொழிபெயர்ப்பு " நாற்பது நாள் முடிவுற்ற பொழுது" என்றும், " நாற்பது நாட்கள் முடிவடையும்பொழுது" என்றும் இரண்டு சொற்றொடர்கள் இடம்பொற்றுள்ளன. தேவனால் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள், அதன் ஆரம்பத்திலிருந்து நிறைவேறும் வரலாற்றுச் சம்பவங்களை அவர் அறிந்திருப்பதை காண்பிக்கிறது. இதன் மூலம் தீர்க்கதரிசனங்கள் மேலான நம் விசுவாசம் அதிகரிக்கிறது. இந்த வாக்கியங்களை நாம் வாசிக்கும்பொழுது, தேவன் முன்கூட்டியே முன்னுரைத்திருந்தவைகளின் நிறைவேறுதல்களை நாம் வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 9 : 14

## நவம்பர் 4

**"மனுஷர் முன்பாக என்னை மறுதரிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான்." – லூக்கா 12 : 9**

எவர் கிறிஸ்துவின் சீஷர்கள் என்று தங்களை சொல்லிக் கொண்டும், அவருடைய போதனைகளை அறியாமல், தவறாக புரிந்துகொண்டு (அ) மறுதலிக்கின்றார்களோ, அவர்களையே இந்த வசனப்பகுதி குறிக்கின்றது. அவரையும், அவருடைய போதனைகளையும் அறிந்திருக்கிறேன் என்று உரிமைக் கோராமல் ஒருவர் தவறாக செயல்படுவார் என்றால், இந்த வசனத்தில் சொல்லப்பட்டப்படி அவரை மறுதலித்தல் ஆகாது.

2 பேதுரு 2 : 1

## நவம்பர் 5

**"புறம்பேயிருக்கிறவர்களுக்கு (விசுவாசத்துக்கு புறம்பே இருப்பவர்களுக்கு) முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்." – கொலோசெயர் 4 : 5**

தேவனுக்கான நம்முடைய உறவு முறையில் வளர்ச்சியடைய அவசியமானதாகக் காணப்படும் ஜெபம் மற்றும் வேத ஆராய்ச்சிக்கு நாம் எந்த அளவு நேரத்தை சேகரிக்க முடியுமோ அந்த அளவு சேகரித்து, நம்முடைய நேரத்தை நாம் கவனமாகப் பயன்பத்த வேண்டும். நேரம் என்பது பணத்தைப் போன்றது. அதை ஒரே ஒரு தரம் மாத்திரமே செலவிடமுடியும். ஒரு கிறிஸ்தவ விசுவாசத்திற்கு புறம்பே இருப்பவர்கள் அதிகப்படியான நம்முடைய நேரத்தை உலகப்பிரகாரமான முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு எடுத்து கொள்ளக்கூடும்.

எபேசியர் 5 : 16

## நவம்பர் 6

**"எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்." – கொலோசெயர் 3 : 24**

நாம் நம்முடைய ஜீவிய காலத்தை தேவனை குறித்து மற்றவருக்கு போதிப்பதில் செலவழிக்கும்

வாய்ப்பு குறைவாக இருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்முடைய சகோதர சகோதரிகளுக் உதவியாக நம்முடைய நேரம் மற்றும் பலத்தைக் கொடுப்பதன் மூலமாகவும் தேவனுக்கு ஊழியம் செய்யலாம். நாம் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும், ஊக்கம் அளிக்கும், கடிதங்களை எழுதலாம். சுகவீனப்பட்டு (அ) தனிமைப்படுத்தப்பட்டவர்களைச் சென்று பார்க்கலாம். அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும்படியான வேறுவழிகளையும் கண்டுபிடித்து செயல்படலாம். மற்றவருக்கு உதவி செய்வதில் நம்முடைய நேரத்தை செலவிடும் பொருட்டு, நம்முடைய சந்தோஷத்திற்காக நாம் செய்துவரும் காரியங்களை விட்டுக்கொடுக்கும்போது, தேவன் இதை அவருக்காக செலுத்தப்படும் நம்முடைய பலியாக அங்கீகரிக்கிறார்.

**1 சாமுயேல் 12 : 24**

## நவம்பர் 7

**“கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்: ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போ. . .” – மத்தேயு 2 : 13**

யூதருக்கு இராஜாவாகும்படி ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்று ஏரோது இராஜா அறிந்தபோது, அவன் இரண்டு வயது மற்றும் அதற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளையும் கொல்லும்படி கட்டளையிட்டதன் மூலமாக இயேசுவை அழிக்க முயற்சித்தான் இயேசு உலகத்தின் இரட்சராக வேண்டும். என்ற தேவனுடைய திட்டம் தடைப்பட மாட்டாது. ஆகையால், அவர் அந்த பொல்லாத இராஜா அணுகமுடியாதபடி, பாதுகாப்பாக வெளியே எடுத்து செல்லப்பட்டார்.

**மத்தேயு 2 : 14**

## நவம்பர் 8

**“தேவனிடமிருந்து பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.” – 2 பேதுரு 1 : 21**

தேவன் வரவிருக்கும் காரியங்களை எழுதும்படி தீர்க்கத்தரிசிகளின் சிந்தைகளை ஆட்கொண்டார். சில தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே நிறைவேறியிருக்கின்றன. மேலும் மற்ற அநேக தீர்க்கதரிசனங்கள் பிற்காலத்துக்கு உரியவைகளாக இருக்கின்றன. உதாரணத்திற்கு யூதர்கள் பல தேசங்கள் எங்கும் சிதறடிக்கப்பட வேண்டும். என்றும், பிறகு இஸ்ரயேலுக்கு திரும்புவார்கள் போன்ற தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருக்கின்றன. ஆனால், யுத்தங்கள் நிறுத்தப்படும் போன்ற தீர்க்கதரிசனங்கள் இன்றும் எதிர்காலத்தில் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது. தேவதத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் சரியான நேரத்தில் நிறைவேறி வருகின்றன.

**எண்ணாகமம் 12 : 6**

## நவம்பர் 9

**“உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” – ஆதியாகமம் 22 : 18**

ஒரு தூதன் தேவனிடமிருந்து வந்து இந்த செய்தியை ஆபிரகாமுக்குக் கொடுத்தார். ஆபிரகாமின் வித்து என்று குறிப்பிடப்படுவர் யார் ? அப்போஸ்தலனாகிய பவுல், அதை கிறிஸ்து மற்றும் இந்த சுவிசேஷயுகத்தில் அவருடைய உண்மையான பின்னடியாளர்களாக இருப்பவர்களையும் குறிப்பதாக நமக்கு கூறகிறார். ஜாதிகள் என்ற வார்த்தை சிலசமயங்களில் குடும்பங்கள் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஏற்றக்காலத்தில் கிறிஸ்து மற்றும் சபையின் மூலம் அனைத்து ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவர் என்பதை நமக்கு உறுதிபத்துவதாக உள்ளது.

கலாத்தியர் 3 : 18

## நவம்பர் 10

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." – ரோமர் 8 : 28**

தற்போது தேவன் தம்முடைய நோக்கத்திற்கு ஏற்றவாறு அதாவது, சபையின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அழைக்கப்பட்டவர்களோடு மட்டுமே தொடர்பு கொண்டிருக்கிறார். அவர்கள் எந்த அளவு உண்மையுள்ளவர்களாக இருக்கின்றார்களோ, அந்த அளவு அவர்களுடைய ஜீவியத்தின் அனுபவங்கள் நம்முடைய முன்மாதிரியாகிய இயேசுவை போன்ற அதிகப்படியான குணலட்சணங்கள் அவர்களுக்குள் பெருக தேவனால் வழி நடத்தப்படுவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் சகலமும் ஒவ்வொருவருக்கும் நன்மைக்கு ஏதவாக நடக்கும்.

2

கொரிந்தியர் 4 :17

## நவம்பர் 11

**"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்." – 2 கொரிந்தியர் 12 : 10**

பலவீனமாய் இருத்தல் என்பது, நம்முடைய அபூரணம் மற்றும் குறைபாடுகளை நினைவுபடுத்துகிறது. நாம் கர்த்தரிடத்தில் முழுமையான நேர்மை காண்பிக்கும்போது, நாம் இந்த பலவீனங்களை துல்லியமாக உணரலாம். நம்முடைய பலம் உதவிக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் தேவன் மற்றும் அவருடைய நேசக்குமாரன் மீது சார்ந்திருப்பதிலிருந்து உருவாகும்.

2

கொரிந்தியர் 13 : 14

## நவம்பர் 12

**"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இரு நியாயம்." – எபேசியர் 6 : 1**

பிள்ளைகள் தங்கள் சொந்த குடும்பங்களை பெற்றுக்கொள்வதற்கு, போதுமான முதிர்ச்சி (பக்குவம்) உண்டாகும்வரை, அவர்களுக்கு அரவணைப்பு, வழிநடத்துதல், பாதுகாப்பு அவசியமாக இருப்பதால், தேவன் குடும்பங்களை ஸ்தாபித்தார். பெற்றோர் இயல்பாகவே பூரணர்களாக இருப்பதில்லை. ஆனால், அவர்களில் அநேகர் தங்களால் இயன்றவரை தங்கள் பிள்ளைகளின் தேவைகளை சிறப்பாகப் பராமரிக்கின்றனர். இயேசுவும் அவரது வளரும் பிராயத்தில் தமது பெற்றோருக்குக் கீழ்ப்பந்திருந்தார்.

யாத்திராகமம் 20:12

## நவம்பர் 13

**"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." – மத்தேயு 7 : 16**

ஒரு மரத்தைப் பார்த்து, அது எவ்விதமான கனிகள் கொடுக்கும் என்று உங்களால் சொல்லமுடிகின்றதோ, அதைப்போலவே, ஒரு மனுஷன் வாழ்கின்ற வாழ்க்கையை வைத்து அவர் எவ்விதமான மனுஷர் என்று உங்களால் சொல்ல முடியும். அவன் எவ்விதத்தில் தனது நேரத்தையும், ஆற்றலையும் செலவிடுகின்றான் என்று நாம் கவனிக்கையில் அவனுடைய ஜீவியம் தேவனுக்கான ஊழியத்தில் செலவிடப்படுகின்றதா ? அல்லது மனுஷீக விருப்பங்களை நாடுவதற்கு

செலவிடப்படுகின்றதா ? என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

**மத்தேயு 7 : 20.**

## நவம்பர் 14

**“பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்”. – சங்கீதம் 29:2**

கர்த்தரை தொழுது கொள்ளுதல் என்பது, அவரிடத்தில் அன்பு வைத்து அவரை துதிப்பது, பயபக்தியோடு அவருக்கு முன்பாக பணிந்து கொள்ளுதல் என்று பொருள்படும். பரிசுத்தம் என்பது, தூய்மை மற்றும் நன்மை செய்தலைக் குறிக்கும். நாம் அவருடைய குணாதியத்தின் அழகை கற்று அறிந்திருக்கிறபடியால், நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து அவருடைய நன்மைகளை துதிப்போமாக.

**1 நாளாகமம் 16 : 29**

## நவம்பர் 15

**“நீங்கள் ஜெபம்பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே . . . என்று சொல்லுங்கள்”– லூக்கா 11 :2**

கர்த்தர் இயேசு நம்மிடம், இதே வார்த்தைகளை துள்ளியமாகப் பயன்படுத்தி ஜெபிக்க வேண்டுமென்று கூறாமல், இந்த விதத்தில் ஜெபிக்க வேண்டுமென்றே கூறகிறார். ஒவ்வொரு ஜெபத்தின் ஆரம்பத்திலும் பரலோகப்பிதாவாகிய தேவனை நாம் அறிக்கையிட்டு, நன்றியறிதலான நேர்மையான இருதயத்தோடு அவரிடம் சேர்ந்து, நம்முடைய விண்ணப்பங்களை அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு இசைவாகவும், எளிமையாகவும் வைக்க வேண்டும்.

**மத்தேயு 6 : 9**

## நவம்பர் 16

**“நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” – மத்தேயு 18 : 3**

பிள்ளைகள் கபடற்றவர்களும், திறந்த மனமும் உள்ளவர்கள், அவர்கள் அதிசயத்தக்க ஒரு உலகத்தில் வாழ்பவர்கள். ஒரு குழந்தை தனது பெற்றோரை நம்புவதுபோல, நாம் தேவன்மீது நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியம். இவ்விதமாகவே முதிர்ந்த ஜனங்களும் சிறு பிள்ளைகளைப் போன்ற சிந்தையுடையவர்களாய் கர்த்தருடைய வார்த்தைகளை உடனடியாகவும், எளிமையான இருதயத்தோடும் பெற்று கொள்வதுண்டு.

**மாற்கு 10 : 14**

## நவம்பர் 17

**“சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக” – யாக்கோபு1 :13**

அநேகர் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் தேவனிடமிருந்து வருவதாக எண்ணிக்கொள்கின்றனர். பெரும்பாலும் நம்முடைய கஷ்டங்கள் யாவும் பெருமை, பலவீனம், விசுவாச குறைச்சல் அல்லது மற்ற குறைப்பாடுகளின் விளைவாக நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வதே ஆகும். நாம் கேட்கும்போது தீமையை ஜெயம் கொள்ள தேவன் நமக்கு உதவி செய்வார் அல்லது அதை

மேற்கொள்ள இயலாதிக்கும்போது, நம்மை மன்னிக்கிறார். மாறாக அவர் நமக்கு தீமையை அனுப்புவதில்லை.

**நீதிமொழிகள் 1 : 10**

## நவம்பர் 18

**"அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார் ? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது ?" – 1 கொரிந்தியர் 4 : 7**

நாம் அனைவரும் வித்தியாசமான தாலந்துகளைப் பெற்றிருக்கிறோம். சிலர் மிக விசேஷமான தாலந்துகளைப் பெற்றிருப்பார். மற்றும் சிலரோ, மிகவும் சாதாரணமானவைகளைப் பெற்றிருப்பர். இதன் காரணமாகவே நாம் ஒருவரிலிருந்து மற்றொருவர் அதிகளவில் வித்தியாசப்படுகிறோம். இந்த ஆசீர்வாதங்களை நாம் நம்முடைய சொந்த ஞானத்திலோ அல்லது கிரியையினாலோ பெற்றிராமல், தேவனுடைய கிருபையினாலே பெற்றிருக்கிறோம் என்பதை நாம் உணருகிறோம். நாம் என்னென்ன தாலந்துகள் பெற்றிருக்கிறோமோ, அவை யாவும் நம்முடைய பரலோகப்பிதாவினிடமிருந்து வந்தவை என்பதை அறிந்து உணர்ந்திருக்கிறோம்.

**யோவான் 3 : 27**

## நவம்பர் 19

**"நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்." – லேவியராகமம் 26 : 3, 12**

பெற்றோர்கள் ஒரு குடும்பத்தை உருவாக்கத் துவங்கும்போது, அவர்கள் செய்யும் முதல் காரியம் என்னவெனில், குழந்தைகளிடம் தாங்கள் என்ன எதிர்ப்பார்க்கின்றார்கள் என்று குழந்தைகள் அறிந்துகொள்ளத்தக்கதாக சில கட்டளைகளை ஏற்படுத்துகின்றனர். இவ்விதமாக, அனைவரும் ஒன்று கூடி செயல்படுவார்கள். தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு சட்டங்களை (அ) பிரமாணங்களைக் கொடுத்தார். அவைகளில் மிக முக்கியமானவைகள் பத்து கட்டளைகள் என்று அழைக்கப்படுபவை ஆகும். ஆனால், மற்ற அநேக பிரமாணங்களும் உள்ளது.

**எபேசியர் 2 : 8**

## நவம்பர் 20

**"பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும்... ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்."**
**– செப்பனியா 3 : 8 , 9**

இது அடையாளப் பாஷையில் சொல்லப்பட்டுள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், பூமியானது சொல்லர்த்தமான அக்கினியால் அழிக்கப்படுமானால், தேவன் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணும்படி அங்கு எந்த ஜனமும் இருக்க மாட்டார்கள். இந்த வசனப்பகுதி உலகத்திலுள்ள தேவபக்தியில்லாத நிறுவனங்களின் அழிவை முன்னுரைக்கிறது. பிறகு அவர் தாமே தேவன் என்பதை ஒவ்வொருவரும் அறியும்படி எளிமையாகவும், தெளிவாகவும் பேசுவார்.

**சங்கீதம் 79 : 5**

## நவம்பர் 21

**“சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்”– நீதிமொழிகள் 6 : 6**

ஒரு சிறு எறும்பை ஒரு பொருட்டாக எண்ணுவது விசித்திரமான காரியமாகக் காணப்படலாம். ஆனால் சாலெமோன் அப்படி நினைக்கவில்லை ஒரு சமயம் ஒரு மனிதன் ஒரு பாழடைந்த கட்டடத்தில் தனிமையாக இருந்தபோது, ஒரு எறும்பு அதின் ஒரு சுவரில் ஒரு சோள தானியத்தை சுமந்து செல்ல முயற்சித்துக் கொண்டிருந்ததை கவனித்தார். பிறகு 69 முறை அந்த தானியம் கீழே விழுந்ததைப் பார்த்து, அந்த எறும்பினால் எடுக்கப்பட்ட முயற்சியைக் கணக்கிட்டு வந்தார். எழுபதாவது முயற்சியில் அந்த எறும்பு சுவரின் உச்சியை அடைந்தது. இதுவே நமக்கான பாடம். நாம் தேவனுடைய சித்தம் செய்ய முயற்சிக்கும்போது, மனம் தளர்ந்து விடக்கூடாது.

**யோபு 7 :12**

## நவம்பர் 22

**“அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.” – எபிரெயர் 13 : 15**

வெகு நாட்களுக்கு முன்பு இஸ்ரயேலர்கள் தேவனுடைய கிருபையின் மீதான தங்களுடைய சரியான புரிந்துகொள்ளுதலை காண்பிப்பதற்காக காளை, வெள்ளாட்டுகடா, தானியம் போன்றவற்றை பலி செலுத்தி வந்தனர். நமக்கோ வித்தியாசமான ஒரு ஏற்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் இன்னமும் பலிகளை ஏறெடுத்து வருகிறோம். அவைகளில் ஒன்று ஸ்தோத்திரபலி, தேவனை துதிப்பதினால், அவருடைய மேன்மையை நாம் புரிந்திருப்பதையும், அவரிடத்தில் நம்முடைய தேவைகள் உண்டு என்பதை ஒப்புக்கொள்வதையும் காண்பிக்கிறது.

**சங்கீதம் 116 : 17**

## நவம்பர் 23

**“அவருடைய கிருபையினிமிருத்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.” – சங்கீதம் 107 : 8**

இவை எழுதப்பட்டு பல அநேக வருடங்களுக்குப்பின்பு, அவருடைய இரக்கங்கள் மற்றும் ஆசீர்வாதங்களும் இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மற்றும் வெகு சிலர் நன்றி கர்த்தாவே என்று சொல்வதற்கு நேரம் பெற்றிருக்கின்றனர். நாம் நம்முடைய பரலோகப்பிதாவையும் அறிந்து அவரை நேசிக்க கற்றுக்கொண்டதுமுதல், நாம் அவருடைய நேசக்கரங்களிலிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பதால் நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை துதிக்க வேண்டும்.

**சங்கீதம் 107 : 31**

## நவம்பர் 24

**“கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.” – சங்கீதம் 136 : 1**

நன்றி தெரிவிக்கத்தக்கதாக தங்களிடம் மிகச்சிறிய அளவிலான விஷயங்களே உள்ளன என்று பலர் உணர்கின்றனர். உண்மையிலேயே உலகப்பிரகாரமான பொருட்கள் ஒன்றுமே இல்லாமலும், அன்பான தேவனை பற்றி ஒன்றுமே தெரியாமலும் இருக்கின்றவர்கள் உள்ளனர்.

தேவன் எல்லாருக்குமான ஒரு இரட்சகரை அளித்திருக்கிறார் என்பதை அறியும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டப்போகும் காலம் சமீபமாய் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் தேவனுடைய நன்மையையும், இரக்கத்தையும் அவருடைய அன்பின் அகலத்தையும் உணர்ந்து கொள்வார்கள்.

**சங்கீதம் 106 : 1**

## நவம்பர் 25

**“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாயிருக்கிறது”. – எபிரெயர் 11 : 1**

விசுவாசமே நம் சிந்தையை உற்சாகப்படுத்தவும், தெளிவுபடுத்தவும் செய்கிற உண்மையான காரியம் இது நம் சிந்தையை இயக்கி தெளிவு தருகிறது. நாம் அதை நம்முடைய கரங்களால் பிடித்து வைக்கவோ அல்லது அதன்மீது நம்முடைய பாதங்களால் நடக்கவோ முடியாது. ஆனால் நாம் தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்போது, அது நம்முடைய சிந்தைக்கு பெலனாக அமையும், மேலும் நாம் வேத ஆராய்ச்சியின் மூலமாகவும், சகோதர ஐக்கியத்தின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது அதிப்படியான புரிந்துகொள்ளுதலை பெரும்போது, நம்முடைய விசுவாசம் அதிகரிக்கும்.

**எபிரெயர் 10 : 23**

## நவம்பர் 26

**“ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.” – யோவான் 6 : 68**

இயேசுவின் பின்னடியார்களில் சிலர் அவருடைய போதனைகளைப் புரிந்துகொள்ள முடியாதிருந்த காரணத்தினால், அவரை விட்டு பிரிந்து போயினர். இது சம்பவித்த போது, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம், அவர்களும் அவரை விட்டு பிரிந்து போய்விடுவார்களா என்று கேட்டார். இயேசு தேவனுடைய குமாரன் என்பதை உணர்ந்திருந்த பேதுரு, நம்முடைய வசனப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை அவருக்கு பதிலாகக் கூறினார். நாமும் எப்பக்கமும் திரும்ப வேண்டியதில்லை என்றும், இயேசுவின் வார்த்தைகளே நித்தியஜீவனுக்கு வழிநடத்தி செல்லும் என்பதையும் உணர்ந்திருக்கிறோம்.

**எபிரெயர் 5 :9**

## நவம்பர் 27

**“அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான் . . . . நீ (மோசே) அவனுக்குத் தேவனாக இருப்பாய்.”**
**– யாத்திராகமம் 4 :16**

இது தேவனுடைய ஆச்சரியமான அடையாளங்களில் நமக்கான மற்றொரு அடையாளமாகும். இங்கு மோசே தேவனையும், ஆரோன் இயேசுவையும் அடையாளப்படுத்துகின்றனர். அவர் இப்பூமிக்கு ஒரு மனிதஜீவியாக வந்து, பிறப்பதற்கு முன்பு இயேசு லோகோஸாக அதாவது, “வார்த்தையாக” இருந்தார். இஸ்ரயேல் ஜனங்களுக்கு மோசேயின் வார்த்தைகளை ஆரோன் எடுத்துக்கூறி வந்த பிரகாரமாகவே, இந்த லோகோஸ் தேவனுடைய வார்த்தைகளை தேவதூதர்களுக்கும், ஜனங்களுக்கும் எடுத்துக்கூறி வந்த தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார்.

**யாத்திராகமம் 7 : 1**

## நவம்பர் 28

**“நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே”. – 1 கொரிந்தியர் 5 :7**

இஸ்ரயேலர்கள் சங்காரத்தூதன் அவர்கள் மீது கடந்து போகும்படி, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளித்து, தங்கள் வீட்டிற்குள் பஸ்கா ஆட்டைப் புசித்து வந்தனர். இந்த இரத்தம் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் இரத்தம். நம் இருதயங்களில் தெளிக்கப்பட்டு, அதன் மூலம் ஆதாமின் மரணம் நம்மீது கடந்து சென்றதையும் அடையாளப்படுத்துகிறது.

**ஏசாயா 53 : 7**

## நவம்பர் 29

**“நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம்”.
– லூக்கா 17 : 10**

தேவனுடைய சித்தம் செய்வது, நம்முடைய கடமையாய் இருக்கிறது. ஏனெனில், அவர் நம்மை சிருஷ்டிக்காதிருந்தாராகில் நாம் இருந்திருக்கவே முடியாது. தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதற்கோ, அல்லது அவருடைய வேலையை செய்வதற்கோ நம்மில் ஒருவரும் தேவனுக்கு இன்றியமையாதவர்கள் அல்ல. மேலும் நாம் செய்வதைப்போல, வேறொருவராலும் செய்யக்கூடும். தேவனுக்காக வேலை செய்யக்கூடிய வாய்ப்பு நம்முடைய நன்மைக்கேதுவானவைகள் தான். அதினால் பயனடைபவர்களும் நாமே.

**ரோமர் 3 :12**

## நவம்பர் 30

**“உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும் : எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்”. – நீதிமொழிகள் 11 : 25**

உதாரகுணமாயிருத்தல் என்பது, நாம் பெற்றிருக்கக்கூடிய ஆவிக்குரிய மற்றும் மாம்சீக கிருபைகளாகிய இரண்டையும் தாராளமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதைக் குறிக்கும். நாம் எவ்வளவு அதிகமாக மற்றவருக்குக் கொடுக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக நாம் செழுமையாக்கப்படுவோம். அல்லது அதற்கு பதிலாய் ஆசீர்வாதங்களைப் பெறுவோம். நாம் எந்தளவு வேதத்திலிருந்து சத்தியத்தின் செய்திகளைப் பகிர்ந்து கொள்கிறோமோ, அந்தளவு நாம் ஆவிக்குரிய விதத்தில் வளர்ச்சி பெறுவோம்.



**தீமோத்தேயு 6 :18**

## டிசம்பர் 1

**"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்: அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறா'' – சங்கீதம் 37 :23**

தேவன் நம் பட்சத்திலிக்கும்போது, எந்த அனுபவமும், அதிர்ஷ்டம் என்றோ, துரதிர்ஷ்டம் என்றோ கருதப்படமாட்டாது. ஏனெனில், நம்முடைய வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளையும் அவரே நம்மை வழிநடத்தி வருகிறார். அவருடைய சித்தத்தின் பிரகாரம் அவருடைய அறிவுரை மற்றும் வழி நடத்துதலை எப்போதும் நாடிய பிறகே நம்முடைய சொந்த முடிவுகள் எடுப்பதற்கு நாம் சுதந்தரவாளிகளாய் இருக்கின்றோம்.

**நீதிமொழிகள் 16 :9**

## டிசம்பர் 2

**. . பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன். . .
ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது. . . – லூக்கா 22 : 36 , 38**

இயேசு, பட்டயங்கள் வாங்கும்படி அப்போஸ்தலரிடம் கூறியது ஏன் ? அவரை சிறைப்பிடிக்கிற சம்பவம், பலவந்தத்தினால் அல்லாமல், தாமாக முன்வந்து ஒப்புக்கொடுத்ததினாலே ஆகும். அப்படியல்லவென்றால், அப்போஸ்தலர்கள் அவரை காப்பாற்றியிருக்கக்கூடுமே என்பதை அறிந்துகொள்வது ஜனங்களுக்கு அவசியமாக இருந்தது. இயேசு உலகத்திற்காக தம்முடைய ஜீவனைக் கொடுக்க இப்பூமிக்கு வந்தார். அது அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படவோ அல்லது ஆதாமைப் போன்று குற்றத்தினிமித்தம் தண்டிக்கப்படவோ இல்லை. தமது வேளை வந்துவிட்டது என்பதை இயேசு அறிந்து தம்மை பிடிக்க வந்தவர்களோடு சமாதானத்தோடு சென்றார்.

**யோயேல்**

**3 : 10**

## டிசம்பர் 3

**யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். – யோனா 1 : 17**

முதன்முதலில் கடலின் அடியில் பயணம் செய்ததற்கான பதிவுகள் யோனாவின் கதையே ஆகும். மூன்று பகல், மூன்று இரவு மீனின் வயிற்றுக்குள் இருந்து யோனா தேவனை நோக்கி ஜெபித்ததாக இக்கதை நமக்கு தெரிவிக்கிறது. ''நானோவெனில், துதியின் சத்தத்தோடே உமக்கு பலியிடுவேன்'' என்று யோனா கூறினபோது, கர்த்தர் யோனாவை இரட்சித்தார்.

**சங்கீதம் 116 : 17**

## டிசம்பர் 4

**"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள்: அப்பொழுது உங்கள் பலன் மிதியாய் இருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாய் இருப்பீர்கள்: அவர் நன்றி அறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே'' – லூக்கா 6 : 35**

நம்மை நேசித்து, நமக்காக இரங்கும் ஜனங்களை நேசிப்பது எளிதான ஒரு காரியமாகும். ஆனால் நம்மை நேசிக்காதவர்களிடமும் நாம் அன்பு செய்து, சமயம் வாய்க்கும் போதெல்லாம் நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார். இவ்வாறாக நன்றியறிதல் இல்லாதவர்களிடமும் அன்பு காட்டுகிற நம்முடைய பரலோகப் பிதாவைப் போன்று நாம் காணப்படுவோம்.

**மத்தேயு 5 : 44**

## டிசம்பர் 5

**"இயேசு. . . அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகினார்" – மாற்கு 6 : 34**

மேய்ப்பன் இல்லாத ஆடு, மேய்ச்சலைத் தேடி சுற்றித் திரியும்போது, காணாமல் போக வாய்ப்பு உண்டு. அவை, தண்ணீர் அல்லது புல் காணப்படாத தவறான வழியில் செல்லக்கூடும். ஒருவேளை, அவை காட்டு விலங்குகளால் தாக்கப்படவோ அல்லது சர்ப்பங்களினால் கடிபடவோ கூடும். ஒரு ஆடுக்கு மேய்ப்பன் அவசியம். அதுபோல ஜனங்களுக்கு, இயேசுவின் போதனையும், அவருடைய உதவியும் அவசியம். இயேசு, நம்முடைய நல்ல மேய்ப்பன் என்று அழைக்கப்படுகிறார்.

**யோவான் 10 : 14**

## டிசம்பர் 6

**"செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்" – பிரசங்கி 9 : 10**

மோசே தான் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இஸ்ரயேலர் நம்பமாட்டார்கள் என்று கூறினபோது, கர்த்தர், உன் கையில் இருப்பது என்ன ? என்று அவரிடம் கேட்டார். தேவன், இஸ்ரயேலை எகிப்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு, மோசேயின் கரத்திலிருந்த தடியை, அற்புதங்கள் நிகழ்த்த பயன்படுத்தினார், அநேக நாட்களுக்கு பின்னர், தொற்காள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ, சபையில் உள்ள சகோதர சகோதரிகளுக் வஸ்திரங்கள் தைக்க அவருடைய கரங்களில் இருந்த ஊசியையும், நூலையும் பயன்படுத்தினார். தேவன், நமது நிமித்தம் மாபெரும் அற்புதங்கள் நிகழ எதிர்ப்பார்ப்பதில்லை, மாறாக அவருடைய பணியை செய்வதில், நம் கரங்களில் நாம் பெற்றிருப்ப எதுவோ அதையே பயன்படுத்த விரும்புகிறார்.

**யாக்கோபு 2 : 17**

## டிசம்பர் 7

**"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" – 1 கொரிந்தியர் 11 : 26**

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, அவருடைய மரணத்தின் ஒரு நினைவுகூருதலாகும். கர்த்தருடைய பின்னடியார்கள் இந்த நினைவுகூருதலை அனுசரிக்கும்போது, அவர்கள் அவருடைய மரணத்தை நினைவுகூருகிறார்கள். இயேசுவின் நினைவுகூருதல், துல்லியமான தேதியில் ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கப்பட்டு வந்த பஸ்காவின் இடத்திற்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு வருடமும் இந்த நினைவுகூருதலை அநுசரிக்கும்போது, உலகத்திற்காக அவருடைய ஜீவன் கொடுத்ததை நாம் நினைவில் கொண்டு அநுசரிக்கிறோம்.

**யாத்திராகமம் 13 : 10.**

## டிசம்பர் 8

**"பவுல், புறஜாதிகளுக்கு . . . என்னுடைய (இயேசு) நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறார்"– அப்போஸ்தலர் 9 : 15**

யூதாஸ், தன்னைத் தானே மாய்த்துக் கொண்ட பிறகு, மீதமிருந்த அப்போஸ்தலர்கள் அவர்களுடைய எண்ணிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு, ஒரு மாற்று நபரை தேர்ந்தெடுத்தனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மத்தியாஸ் (அப்போஸ்தலர் 1 : 23 – 26). அதன் பிறகு அவர் மீண்டுமாக எங்குமே குறிப்பிடப்படவில்லை. பவுலே, தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறவர் என பேசப்படுகிறார். ஆகையால், இவரே பன்னிரண்டாவது அப்போஸ்தலராக மாறினவர் என நாம் விசுவாசிக்கிறோம். மற்ற அப்போஸ்தலரில் ஒவ்வொருவரும் கூட மனுஷரால் தேர்ந்தெடுக்கப்படாமல், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இயேசு தம்முடைய அப்போஸ்தலரை குறித்து கூறும்போது, பிதாவினால் தமக்கு கொடுக்கப்பட்டிருப்பவர்கள் என்கிறார்.

**ரோமர் 1 : 1**

## டிசம்பர் 9

**"இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து. . . நான் (பவுல்) . . ." – அப்போஸ்தலர் 24 : 14**

மதபேதம் என்பது, மத அதிகாரத்திற்கு எதிரான எவ்வித கருத்துக்களாகவும் இருக்கலாம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கருத்துக்கள் அல்லது உபதேசங்களுக்கு எதிரான எவ்வித கருத்தாகவும் இருக்கலாம். யூத பாரம்பரிய முறைமையின்படி, வளர்க்கப்பட்டவர்களுக்கு, கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதென்பது மதத்திற்கு எதிரான கொள்கை உடையவராய் மாறுவதாகும். அதாவது நிர்ணயிக்கப்பட்ட மதரீதியான கருத்துக்களுக்கு எதிராக செயல்படுவபராக மாறுவதாகும். இதை குறித்து பவுல் வெட்கம் அடையவில்லை. அன்று போலவே இன்றும் உள்ளது. அதாவது, நிர்ணயிக்கப்பட்ட மத கூட்டமைப்பிலிருந்து வேறுபட்டு காணப்படும் ஒருவர் மதங்களுக்கு எதிரான கொள்கையில் பற்றுடையவர் என்று அழைக்கப்படுகின்றார்.

**ரோமர் 1 : 16**

## டிசம்பர் 10

**"இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரமும் . . . எனக்குக் (பிசாசு) கொடுக்கப்பட்டிருக்கிறது"
– லூக்கா 4 : 6**

இயேசு சாத்தானை இவ்வுலகத்தின் அதிபதி என்று அழைக்கிறார். பேதுரு, நம்முடைய யுகத்தை, தற்போதுள்ள தீமை நிறைந்த உலகம் என அழைக்கிறார். சாத்தானை சில வரம்புகளுக்கு உட்பட்டு, தேவன், இராஜ்யத்தின் நீதியான காரியங்களை மனுக்குலம் நன்கு புரிந்து உணர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு அவசியமான அநுபவங்களைக் கொடுக்கும்படியாக, சாத்தான் ஆளகை செய்ய அனுமதிக்கின்றார்.

**மத்தேயு 4 : 9**

## டிசம்பர் 11

**"மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைப் பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல.... அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே" – 1 யோவான் 4 : 3**

இயேசு பூமியில் இருந்தபோது, தெய்வீக தன்மையோடு இருந்ததாக சிலர் அறிக்கையிடுகின்றனர். இக்கருத்தானது, அவருடைய மாம்சமாகிய மனித நிலையை மறுதலிப்பதாக உள்ளது. மேலும், இக்கருத்தானது, உலகத்தின் ஜீவனுக்காக அவருடைய மாம்சத்தை ஒப்புக்கொடுத்ததினால் அடைந்த மாபெரும் உபத்திரவத்திற்கு முரண்பாட்டை ஏற்படுத்துகிறது. அவர் தெய்வீக சுபாவத்தில் இருந்திருப்பாரேயானால், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு இருந்த பரிபூரண நிலைக்கு சரிநிகரான ஒரு மனிதனாகப் பாடுபடவும் மரிக்கவும் அவரால் கூடாதிருந்திருக்கும்.

**2 யோவான் 7**

## டிசம்பர் 12

### "கர்த்தர் தமது சேனைக்கு முன் சத்தமிடுவார்" – யோயேல் 2 : 11

தேவன், தம்முடைய சித்தத்தை (அ) நோக்கத்தை நிறைவேற்ற, ஜனங்களை தம்முடைய "சேனை" யாகப் பயன்படுத்துகிறார். தேவன் தங்களை பெரிய விஷயங்களில் பயன்படுத்துகிறார் என்பதை உணராமல் தங்களுடைய வாழ்க்கை ஓட்டத்தில் அநேகர் அறியாமையிலேயே இருக்கின்றனர். "சக்தி" பற்றி பேசுவதைக் கேட்டிருக்கலாம். ஒரு சக்தி நன்மைக்கேதுவாய் செயல்படுகிறது என்றும், அந்த சக்தி தேவனுடைய வல்லமை என்றும், அது முடிவில் தீமையை ஜெயம் கொள்ளும் என்றும் அறியும்போது ஆறுதலாக உள்ளது.

**யோயேல் 2 : 21.**

## டிசம்பர் 13

### "புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" – அப்போஸ்தலர் 8 : 12

ஞானஸ்நானம் எடுப்பதற்கு தண்ணீரில் நாம் மூழ்கும் சம்பவமானது, பரிபூரண பூமிக்குரிய ஜீவியத்தின் நமது உரிமையை நாம் ஒப்புக்கொடுத்திருக்கின்றதை அடையாளமாக இருக்கின்றதை நாம் அறிகின்றோம். நாம் தண்ணீரிலிருந்து எழும்பும் சம்பவமானது, புது சிருஷ்டியாக நாம் மீண்டும் ஜீவியத்தை இறுதியில் சுதந்தரித்துக்கொள்ள அதன் பூமிக்குரிய ஜீவியத்தை தத்தம் செய்ய வேண்டும் என்ற ஆழமான அர்த்தத்தை புரிந்துகொள்வது கூடாத காரியமாக இருக்கின்றபடியினால், குழந்தை ஞானஸ்நானம் சரியானது அல்ல என்று நாம் உணர்கிறோம்.

**மத்தேயு 28 : 19**

## டிசம்பர் 14

### "மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்படும்" – வெளிப்படுத்தல் 20 : 14

வேதாகம அடையாள பாஷையில் அழிவு என்று அர்த்தம்கொள்ளும் அக்கினியானது, முற்காலத்து உலகத்தினரால் அறியப்பட்டிருக்கும் மாபெரும் அழிவின் கருவிகளில் ஒன்றாக உள்ளது. பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் எந்த ஒரு பொருளையும் ஒருவரும் அக்கினியில் தூக்கி எறியமாட்டார்கள்.அக்கினிக்கடல் முற்றிலுமான அழிவுக்கு ஓர் விளக்கமாகும். மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்படும்போது, அவை என்றென்றும் இராதபடி அழிக்கப்படும். மேலும் ஆதாம் தன்னுடைய சந்ததி அனைவருக்கும் கொடுத்த மரணமும் அழிக்கப்படும்.

**1 கொரிந்தியர் 15 : 26**

## டிசம்பர் 15

**"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் (சோதனைகள் (அ) பரீட்சைகள்) உண்டு" – யோவான் 16 : 33**

உபத்திரவம் (tribulation) என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தையானது ட்ரிபுலம் (tribulum) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது – இதன் அர்த்தமானது, கோதுமை மணியிலிருந்து பதரையோ அல்லது தேவையற்றதையோ பிரிக்கக்கூடிய கதிரடித்தல் ஆகும். கோதுமை கிறிஸ்தவர்களுக்கு ஓர் அடையாளமாக இருக்கிறது. பதராணதோ, நாமாகவே களைந்து போட வேண்டிய பழையதும், பயனற்றதுமான குணலட்சணங்களை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, நம்முடைய சோதனையான அநுபவங்கள், பயனற்றவைகளிலிருந்து நன்மையானதையும், பயனுள்ளதையும் பிரித்தெடுப்பதற்கே ஆகும்.

**அப்போஸ்தலர் 14 :22**

## டிசம்பர் 16

**"நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" – கலாத்தியர் 3:24**

நியாயப்பிரமாண உடன்படிக்கையானது முழு மனுக்குலத்தோடும் செய்யப்படாமல், இஸ்ரயேலரோடு மட்டுமே செய்யப்பட்டது. அவர்கள் அபூரணராக இருந்தபடியினால், ஒரு பரிபூரணமான பிரமாணத்தைக் கடைப்பிடிக்க இயலாதவர்களாக இருந்தனர். இதன் நோக்கமாவது, அவர்களுடைய பெலவீனங்களைச் சுட்டிக்காண்பித்து, அவர்களுக்கு மேசியாவின் அவசியத்தை எடுத்து காண்பிப்பதே ஆகும். மேலும் இயேசுவின் மரணத்திற்கு மூன்றரை வருடங்களுக்குப் பின்பு வரையிலும், ஆதிசபை யூதர்களால் மட்டுமே உருவாக்கப்பட்டிருந்தனர்.

**எபிரெயர் 5 : 9**

## டிசம்பர் 17

**"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி" – எபிரேயர் 12 : 2**

நம்முடைய குற்றங்களுக்காக சிலுவையில் அறைப்படும்படி இயேசு ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, அவர் நம்முடைய விசுவாசத்தின் காரண கர்த்தாவாகிறார். அவரே விசுவாசத்தை முடிக்கிறவருமாய் இருக்கிறார். காரணம், நமக்காக கொடுக்கப்பட்ட அவருடைய பரிபூரண ஜீவன், நம்முடைய அபூரணங்களை மூடி நமக்கு நீதிமான் என்ற நிலையை ஏற்படுத்திற்று. இயேசுவினிடத்தில் நாம் நேர்மையாய் இருப்பதன் விளைவாக நமக்கு நேரிடும் வருத்தங்கள் மற்றும் துன்பங்களை நாம் நோக்காமல் இயேசுவை நோக்க வேண்டும்.

ஆகாய் 2 **: 9**

## டிசம்பர் 18

**"இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்" – எபிரெயர் 12 : 26**

மனுக்குலத்திற்கு அடையாளமாக தேவன் பூமியை வைத்துள்ளார். அவர், நமது நாட்களிலுள்ள மத அமைப்புகளுக்கு அடையாளமாக தேவன் வானத்தை வைத்துள்ளார். கடைசியாக ஒருமுறை தேவன், மத

அமைப்புகள் உட்பட சமுதாயத்தை அசையப்பண்ணுவதாக அறிவித்துள்ளார். அப்பொழுது, உண்மையற்றவைகளும், சோதனையில் நிற்பதற்குப் போதிய பலம் இல்லாதவைகளும் வீழ்ச்சியடையும். இவ்விதமாக, அவர், அசைக்க முடியாத இராஜ்யத்திற்கு வழியை உண்டு பண்ணும்படி பொய்யான மத அமைப்புகள் மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய அமைப்புகளையும் அவர் அழித்துப் போடுவார்.

**யாத்திராகமம் 3 : 13,14**

## டிசம்பர் 19

**"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை (இஸ்ரயேலை) மாத்திரம் அறிந்து கொண்டேன்"**
**– ஆமோஸ் 3 : 2**

சபைக்கான அழைப்பு புறஜாதியாருக்குத் திறக்கப்படும் வரை, தேவன் தொடர்பு வைத்திருந்த ஒரே தேசம் இஸ்ரயேல் தேசமாக இருந்தது. காரணம், இவர்கள் கிறிஸ்துவ சபையை அடையாளப்படுத்தக்கூடிய ஒரு நிழலான தேசமாகும். வனாந்தரத்தின் வழியான அவர்களுடைய பிரயாணம், சபை பரம கானானை அடையும்வரை இப்பூமியில் அவர்களுடைய ஜீவியத்தை சித்தரிக்கிறது. இஸ்ரயேல் தேசத்தின் அனுபவங்களில் மற்ற அநேக காட்சிகளும் உண்டு.

**உபாகமம் 7 :6**

## டிசம்பர் 20

**"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்"**
**– சங்கீதம் 37 : 4**

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருப்பது, அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதைப் பார்க்கிலும் ஒரு படி மேலானதாகும். நம்முடைய இருதயம் அன்பும் அவரில் மையமாக கொண்டிருந்து, தெய்வீக வழி காட்டுதலுக்காக நாம் தொடர்ந்து அவரை நோக்கி இருக்கும்போது மனமகிழ்ச்சி உண்டாகும். நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகள், அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு இசைவாக இருக்கும்போது அவர் அவைகளை அருளுகின்றார்.

**ஏசாயா 58: 14**

## டிசம்பர் 21

**"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியால்"**
**– யோவான் 17 : 24**

பிதாவாகிய தேவனும், இயேசு, மனிதனாக வருவதற்கு முன்பு காணப்பட்ட லோகோசும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து, இருவரும் ஒன்றாக சேர்ந்து மிகப்பெரிய காரியங்களைச் செய்தனர். அவைகளில் ஒன்று, மனிதனுடைய சிருஷ்டிப்பு ஆகும். ஆதாம் கீழ்ப்படியாமல், மனுக்குல சந்ததியினருக்கு மரணத்தீர்ப்பைக் கொண்டுவந்தபோது, லோகோஸ், ஆதாமும் அவருடைய சந்ததியினரும் அந்த மரணத்தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடைய இராஜ்யத்தில் என்றென்றும் ஜீவனோடு இருக்க, ஆதாமுக்கு ஈடாக மரிக்க இப்பூமிக்கு மிகவும் வாஞ்சையோடு வந்தார்.

**யோவான் 17 : 26**

## டிசம்பர் 22

**"இதோ, நீ . . . ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. . . அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" – லூக்கா 1:30 – 33**

தேவனுடைய முதல் சிருஷ்டியாகிய லோகோஸ், ஒரு மனிதனாகப் பிறப்பதற்கு வாஞ்சையாக இருந்தபடியால், தேவன் ஒரு தூதனை மரியாளிடம் அனுப்பி இந்த குழந்தை அவளிடத்தில் கர்ப்பம் தரிக்கும் என கூறினார். ஏற்ற சமயத்தில், இயேசு கிறிஸ்து இப்பூமியின் மீதெங்கும் இராஜாவாக அரசாட்சி செய்வார். அப்பொழுது, இவர் தேவனுடைய நேச குமாரனாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவார். அப்போது, தேவனுடைய சித்தம் தற்போது பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் செய்யப்படும்.

**மத்தேயு 1: 20 – 23**

## டிசம்பர் 23

**"பெத்லகேமே,... இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்."**
**– மீகா 5 : 2**

அகஸ்துராயன், குடிமதிப்பு எழுதவேண்டும் என்று கட்டளையிட்ட காரணத்தினால், இயேசு பெத்லகேமில் பிறப்பார் என்ற விஷயத்தின் நிறைவேறுதல் தற்செயலாக நடந்ததுபோல் தோன்றலாம். ஆனால் இந்த தீர்க்தரிசனமானது கிறிஸ்துவின் பிறப்பிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, அவர் பிறக்க வேண்டிய பட்டணத்தின் பெயரையும் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், தேவன் தீர்க்கதரிசிகள் எழுதும்படி உணர்த்தியவைகளில் சொல்லப்பட்டுள்ள மேசியா இந்த இயேசுவே என்பதற்கு இது மற்றுமொரு நிரூபணம் ஆகும்.

**மத்தேயு 2 : 6**

## டிசம்பர் 24

**"இதோ எல்லா ஜனத்திக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்." – லூக்கா 2 : 10**

பெத்லகேமின் வயல்வெளிகளுக்கு மேலாக வானத்தில் தேவதூதர்கள் தோன்றி, தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுத்து பாடியதில் எந்த ஆச்சரியமும் இல்லை மரணம் என்ற பெரிய சத்துருவினிடமிருந்து சகல ஜனங்களையும் இரட்சிக்கும் இரட்சகரின் பிறப்பு குறித்து அப்பொழுது அறிவிக்கப்பட்டது.

**ஆதியாகமம் 22 : 18**

## டிசம்பர் 25

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்: நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்: கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்." – ஏசாயா 9 : 6**

லோகோஸ், பெத்லகேமில், இயேசு என்னும் குழந்தையாக, பரலோகத்தை விட்டு பூமிக்கு வந்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் மேற்கூறப்பட்ட வசனமாகிய தீர்க்கதரிசனம் ஏசாயாவினால் எழுதப்பட்டது. இயேசு முழுமனுக்குலமாகிய உலகத்தின் இரட்சகராக வந்தார். ஏற்றசமயத்தில் அவர் இராஜாவாக அரசாட்சி செய்து, சகல ஜனத்துக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவார்.

1 கொரிந்தியர் 15 : 25

## டிசம்பர் 26

**"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." – யோவான் 1 : 14**

லோகோஸ், வார்த்தை அல்லது இயேசு, ஒரு மனிதனாக மாற, தாம் இருந்த ஆவிக்குரிய தளத்தை விட்டு வரவேண்டியிருந்தது. அவர் வெறும் மனித உருவமாக (அ) மனிதன் போன்ற தோற்றமுடையவராக காட்சியளிக்கவில்லை. அல்லது, மற்ற எல்லா மனிதர்களைப் போன்று அவர் பாவியாகவும் இல்லை. அவர் ஒரு பரிபூரண மனிதராக, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராக இருந்த காரணத்தினாலேயே, அவரால் அனைவருக்குமான மீட்கும் பொருளைக் கொடுக்க முடிந்தது.

மத்தேயு 28 : 18

## டிசம்பர் 27

**"தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்... " – 2 கொரிந்தியர் 9 : 15**

தம்முடைய நேச குமாரனையே நம்முடைய பரலோகப் பிதா கொடுத்தார் என்ற கருத்தை புரிந்துகொள்வது மிகவும் ஆச்சரியமானது. நிச்சயமாகவே, இதை தகுதியோடு பெற்றுக்கொள்வதற்கு நாம் எதுவும் செய்திருக்கவில்லை. தேவன், தம்முடைய மனித சிருஷ்டியை நேசிக்கிறதினாலும், ஒவ்வொருவருடைய ஜீவன் அங்கீகரிக்கப்படத்தக்கதாக முழுமையான வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பலனாக பூமியிலிருக்கும் பரதீசு என்ற வீட்டில் என்றென்றும் ஜீவிக்கவும் தேவன் தம்முடைய குமாரனைத் தந்தருளினார்.

ரோமர் 8 :

32

## டிசம்பர் 28

**"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" – மத்தேயு 6 : 21**

இயேசுவின் பின்னடியார்கள் ஆவதற்கு தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள், பரலோகத்தில் அவரோடு இருப்பதையே எதிர்நோக்கி இருப்பார்கள். மேலும், அவர்களின் எண்ணங்களும், விருப்பங்களும் எங்குள்ளதோ அவ்விடத்திலேயே அவர்களுடைய பொக்கிஷமும் இருக்கும். மீதமுள்ள ஜனங்களோ, இராஜ்யத்திலும் அதற்கு பிற்பாடும் பூமியில் ஜீவிப்பார்கள். ஆகவே, அவர்களுடைய பொக்கிஷம் பூமியை சார்ந்ததாக இருக்கும்.

மத்தேயு 12 : 35

## டிசம்பர் 29

**"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" – யாக்கோபு 1 : 17**

என்றென்றும் நிலைகொண்டிருக்கும் விலையேறப்பெற்ற யாதொன்றையும் உலகத்தினால் தர முடியாது. நன்மையானதும், உண்மையான அழகும், உபயோகமானதுமான ஒவ்வொன்றும்

தேவனிடத்திலிருந்து வருகிறது. தேவனுடைய அண்ட சராசரத்தில் ஒரு மனிதன் எதை கண்டுபிடித்தாலும், ஆய்வு செய்தாலும், அவருடைய சட்டங்களும் திட்டங்களும் மாறாதவை என்பதை எப்போதுமே நிரூபிக்கின்றது.

**மல்கியா 3 : 6**

## டிசம்பர் 30

**“என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே, அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”. – மல்கியா 3 : 17**

தேவனுடைய ஞாபக புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவர்களாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருப்பவர்கள், அவருக்கு விலையேறப்பெற்றவர்கள் ஆவர். அவர்கள் சம்பத்துக்கு ஒப்பிடப்படுகிறார்கள். இந்த சம்பத்துகளில் முதலாவது இயேசு ஆவார். சபையின் அங்கங்களாகிய மற்றவர்களோ, அவரை போல் ஆவதற்கு தற்போது செதுக்கப்பட்டு, மெருகேற்றப்பட்டு வருகிறார்கள். சோதனைகளுக்கு அடையாளமாக இருக்கும் செதுக்குதலும், மெருகேற்றப்படுதலும் சம்பத்துகளின் உள்ளான அழகு வெளிப்படுவதற்கு அவசியமாக உள்ளது.

**யாத்திராகமம் 19 : 5**

## டிசம்பர் 31

**“வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்” – சங்கீதம் 65 : 11**

ஒவ்வொரு வருஷத்தின் முடிவிலும், தேவன் எவ்வளவு அன்பும், நேசமும், தயவும், இரக்கமும் உள்ளவராக இருந்தார் என்று அவருடைய நன்மையான ஈவுகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மேலும், அன்பிலும், அறிவிலும், கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்த சாயலிலே வளர்ச்சியடைவதிலும் மற்றும் நம்முடைய பரலோக பிதாவுக்கு ஊழியம் செய்வதிலும் எந்தளவு வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்பதையும் நாம் திரும்பிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். பின்னும் நாம் கர்த்தருடைய உதவியைக் கொண்டு புதிய ஆண்டில் இன்னும் சிறப்பாக ஊழியம் செய்ய தீர்மானிப்போமாக.

**சங்கீதம் 104 : 24**